| K.J.கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி-- இராமநாதபுரம் மாவட்டம் | | |
|---|---|---|
| பன்னிரண்டாம் வகுப்பு --- பொருளியல் | | |
| ( இயல் -- 1 ) -- பேரியல் பொருளாதாரம் | | |
| சரியான விடையைத் தெரிவு செய்க | | |
| 1) | பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை<br>அ) சொத்தும் நலமும் ஆ) உற்பத்தியும் நுகர்வும்<br>இ) தேவையும் அளிப்பும் ஈ) நுண்ணியலும் பேரியலும் | ஈ) நுண்ணியலும் பேரியலும் |
| 2) | "மேக்ரோ" என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர் யார்?<br>அ) ஆடம் ஸ்மித் ஆ) ஜே.எம்.கீன்சு<br>இ) ராக்னர் பிரிஸ்சு ஈ) காரல் மார்க்சு | இ) ராக்னர் பிரிஸ்சு |
| 3) | புதிய பேரியல் பொருளியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?<br>அ) ஆடம் ஸ்மித் ஆ) ஜே.எம்.கீன்சு<br>இ) ராக்னர் பிரிஸ்சு ஈ) காரல் மார்க்சு | ஆ) ஜே.எம்.கீன்சு |
| 4) | பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர்<br>அ) விலைக்கோட்பாடு ஆ) வருவாய்க்கோட்பாடு<br>இ) அங்காடிக்கோட்பாடு ஈ) நுண்ணியல் கோட்பாடு | ஆ) வருவாய்க் கோட்பாடு |
| 5) | பேரியல் பொருளாதாரம் ஆய்வது<br>அ) தனிமனிதர்களை ஆ) நிறுவனங்களை<br>இ) நாடுகளை ஈ) ஒட்டுமொத்தங்களை | ஈ) ஒட்டு மொத்தங்களை |
| 6) | ஜே.எம்.கீன்ஸின் பங்களிப்பைக் குறிப்பிடுக.<br>அ) நாடுகளின் செல்வம் ஆ) பொதுக்கோட்பாடு<br>இ) மூலதனம் ஈ) பொதுநிதி | ஆ) பொதுக் கோட்பாடு |
| 7) | பொது மட்டத்தில் விலையின் தொடர் உயர்வைக் குறிப்பிடும் கருத்து -------------- ஆகும்.<br>அ) மொத்த விலைக்குறியீடு ஆ) வணிகச்சுழல்<br>இ) பணவீக்கம் ஈ) நாட்டு வருமானம் | இ) பணவீக்கம் |
| 8) | பொருளாதாரக் கொள்கைகளின் அவசியத்தைக் குறிப்பிடுக.<br>அ) அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பது<br>ஆ) தடைகளை முறியடிப்பது<br>இ) வளர்ச்சியை அடைவது<br>ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும் | ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும் |
| 9) | ஒருபொருளாதாரத்தின் அடிப்படைப் பொருளாதார நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.<br>அ) உற்பத்தியும் பகிர்வும்<br>ஆ) உற்பத்தியும் பரிமாற்றமும்<br>இ) உற்பத்தியும் நுகர்வும்<br>ஈ) உற்பத்தியும் சந்தையிடுகையும் | இ) உற்பத்தியும் நுகர்வும் |
| 10) | ஒருபொருளாதாரத்தில் காணப்படுவது<br>அ) உற்பத்தித்துறை ஆ) நுகர்வுத்துறை<br>இ) அரசுத்துறை ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும் | ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும் |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **11)** | எந்தப் பொருளாதாரத்தில் உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது?<br>அ) முதலாளித்துவப் பொருளாதாரம்<br>ஆ) சமதருமப் பொருளாதாரம் இ) உலகமய அமைப்பு<br>ஈ) கலப்புப் பொருளாதாரம் | **அ) முதலாளித்துவப் பொருளாதாரம்** |
| **12)** | பகிர்வில் சமத்துவத்தைக் கடைபிடிக்கிற பொருளாதார அமைப்பு ........... ஆகும்.<br>அ) முதலாளித்துவப் பொருளாதாரம்<br>ஆ) உலகமயத்துவ அமைப்பு இ) கலப்புப் பொருளாதாரம்<br>ஈ) சமதருமப் பொருளாதாரம் | **ஈ) சமதருமப் பொருளாதாரம்** |
| **13)** | முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?<br>அ) ஆடம் ஸ்மித் ஆ) காரல் மார்க்சு<br>இ) தக்கேரி ஈ) ஜே.எம்.கீன்சு | **அ) ஆடம் ஸ்மித்** |
| **14)** | முதலாளித்துவத்தைப் பின்பற்றும் நாடு ................ ஆகும்.<br>அ) இரஷ்யா ஆ) அமெரிக்கா இ) இந்தியா ஈ) சீனா | **ஆ) அமெரிக்கா** |
| **15)** | சமதருமக் கொள்கையின் தந்தை எனப்படுபவர் யார்?<br>அ) ஜே.எம்.கீன்சு ஆ) காரல் மார்க்சு<br>இ) ஆடம் ஸ்மித் ஈ) சாமுவேல்சன் | **ஆ) காரல் மார்க்சு** |
| **16)** | தனியாரும் அரசும் சேர்ந்து பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாதார அமைப்பைக் குறிப்பிடும் பதம் ..................... ஆகும்.<br>அ) முதலாளித்துவப் பொருளாதாரம்<br>ஆ) சமதருமப் பொருளாதாரம் இ) உலகமயத்துவப் பொருளாதாரம் ஈ) கலப்புப் பொருளாதாரம் | **ஈ) கலப்புப் பொருளாதாரம்** |
| **17)** | ஒருகுறிப்பிட்ட காலத்தில் (Point of time) குவிந்த சரக்குகளின் அளவைக் குறிப்பிடும் பதம் ........... ஆகும்.<br>அ) உற்பத்தி ஆ) இருப்பு இ) மாறிலி ஈ) ஓட்டம் | **ஆ) இருப்பு** |
| **18)** | கீழ்வருவனவற்றுள் தடைபடா ஓட்ட மாறியைக் கண்டுபிடி.<br>அ) பண அளிப்பு ஆ) சொத்துகள்<br>இ) வருவாய் ஈ) வெளிநாட்டுச் செலாவணி இருப்பு | **இ) வருவாய்** |
| **19)** | இருதுறை மாதிரியில் உள்ள இருதுறைகளைக் குறிப்பிடுக.<br>அ) குடும்பங்களும் நிறுவனங்களும்<br>ஆ) தனியாரும் பொதுத்துறையும்<br>இ) உள்நாட்டு, வெளிநாட்டுத் துறைகள்<br>ஈ) நிறுவனங்களும் அரசும் | **அ) குடும்பங்களும் நிறுவனங்களும்** |
| **20)** | திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தின் சுழல் ஓட்ட மாதிரி என்பது .......... ஆகும். அ) இருதுறை மாதிரி<br>ஆ) முத்துறை மாதிரி இ) நான்குதுறை மாதிரி<br>ஈ) மேலே சொல்லப்பட்ட அனைத்தும் | **இ) நான்குதுறை மாதிரி** |

www.Padasalai.Net

| | |
|---|---|
| **இரண்டு மதிப்பெண் வினா -- விடை** | |
| **21)** | **பேரியல் பொருளியலின் இலக்கணம் யாது?**<br>* பொருளாதார அமைப்பு முழுமையையும் படிப்பது.<br>* ஒட்டுமொத்த நாட்டு வருமானம், வேலைவாய்ப்பு, நாட்டு உற்பத்தி பற்றியது.<br>* வருவாய்க் கோட்பாடு எனவும் அழைப்பர். |
| **22)** | **பணவீக்கம் எனும் பதத்தின் பொருள் தருக.**<br>* பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதைக் குறிப்பதாகும். |
| **23)** | **பொருளாதாரம் என்பதன் பொருள் யாது?**<br>* மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக்கொள்ளும்முறையைக் குறிப்பது<br>-- **A.J.பிரவுண்.** |
| **24)** | **வளர்ச்சிநிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக.**<br>* வளர்ந்த, வளர்ச்சிகுன்றிய, வளராத, வளரும் பொருளாதாரங்கள். |
| **25)** | **முதலாளித்துவம் என்றால் என்ன?**<br>* பொருளாதார நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதில் அரசின் பங்கு குறைவாகவும், சந்தையின் பங்கு அதிகமாகவும் இருக்கும்.<br>* உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும்.<br>* இலாப நோக்கமே முதன்மையானது. |
| **26)** | **பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக.**<br>* உண்மைச்சூழலை எளிமையாகப் பிரதிபலிப்பதும், பொருளாதார அமைப்பு எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குவதும் ஆகும். |
| **27)** | **வருமானச் சுழல் ஓட்டம் -- வரையறு.**<br>* பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவது. |
| **மூன்று மதிப்பெண் வினா -- விடை** | |
| **28)** | **பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தைத் தருக.**<br>* பொருளாதார அமைப்பின் ஒட்டுமொத்தச் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள,<br>* அடிப்படைச் சிக்கல்கள், பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண,<br>* எதிர்காலச் சிக்கல்களைப் புரிந்துகொள்ள மற்றும் முன்கணிக்க,<br>* முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க,<br>* பொருளாதாரக் குறியீடுகளைப் பகுத்தாய மற்றும் ஒப்பிட,<br>* நடப்புப் பிரச்சினைகளை அறிவியல்பூர்வ விசாரணைமூலம் அறிய உதவுகிறது. |
| **29)** | **பொருளாதார முறைகளின் வகைகளைக் குறிப்பிடுக.**<br>**1.** முதலாளித்துவப் பொருளாதாரம் ( முதலாளித்துவம் )<br>பொருளாதார நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதில் தனியாரின் பங்கு அதிகம்<br>எ.கா -- அமெரிக்கா<br>**2.** சமதருமப் பொருளாதாரம் ( சமத்துவம் )<br>பொருளாதார நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதில் அரசின் பங்கு அதிகம்<br>எ.கா -- ரஷ்யா<br>**3.** கலப்புத்துவப் பொருளாதாரம் ( கலப்புத்துவம் )<br>தனியாரும் அரசும் இணைந்து பொருளாதார நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும்<br>எ.கா -- இந்தியா |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 30) | முதலாளித்துவத்தின் சிறப்பினை ( நன்மைகள் ) வரிசைப்படுத்துக.<br>1. தானாக இயங்குதல்<br>அரசாங்கத்தின் எந்தத் தலையீடும் இல்லாமல் பொருளாதாரம் தானாகவே செயல்படும்.<br>2. வளங்களைத் திறமையாகப் பயன்படுத்துதல்<br>அனைத்து வளங்களும் திறமையாகச் சிறந்த அளவில் பயன்படுத்தப்படுகிறது.<br>3. பொருளாதார முன்னேற்றம்<br>உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் அளவு மிக அதிகமாகும்.<br>4. நுகர்வோர் இறையாண்மை<br>அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளும் நுகர்வோர்களைத் மனநிறைவடையச் செய்கின்றன.<br>5. மூலதன ஆக்கவீதம் அதிகரித்தல்<br>சேமிப்பும் முதலீடும் அதிகரிப்பதால் மூலதன ஆக்கவீதம் உயர்த்த வழிவகுக்கும். |
| 31) | சமதருமக் குறைகளைக் ( தீமைகள் ) கூறுக.<br>1. சிகப்பு நாடா முறையும் அரசு அலுவலர்களின் அதிகார வர்க்கமும்<br>* அனைத்து முடிவுகளையும் அரசு அமைப்புகளே எடுப்பதால், அனுமதி பெற வேண்டிய கோப்புகளுக்கான காலஅளவு அதிகமாகி சிகப்பு நாடாமுறை ஏற்படுகிறது.<br>2. ஊக்கமில்லாமை<br>* திறமைக்கு ஊக்கம் அளிக்காததால் உற்பத்தித்திறன் பாதிக்கப்படுகிறது.<br>3. தெரிவு செய்வதில் சுதந்திரக்குறைவு<br>* பண்டங்கள், பணிகளை நுகர்வதில் தெரிவு செய்யும் சுதந்திரம் குறைவு.<br>4. அதிகாரம் குவிதல்<br>* அரசே அனைத்து முடிவுகளையும் எடுப்பதால், அரசு சக்தி வாய்ந்ததாக கருதப்படுகிறது.<br>* அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்த வாய்ப்பாகவும் அமைகிறது. |
| 32) | கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.<br><br>1. சொத்து, உற்பத்திச் சாதனங்களின் உரிமம்<br>* வளங்களைக் கொள்முதல் செய்ய, பயன்படுத்த, மாற்ற பொதுத்துறையும் தனியார்துறையும் உரிமம் பெற்றிருக்கும்.<br>2. பொதுத்துறையும் தனியார்துறையும் இணைந்திருக்கும்<br>* இலாப நடவடிக்கைகளைத் தனியாரும், சமூகநலனை பொதுத்துறையும் மேற்கொள்ளும்.<br>3. பொருளாதாரத் திட்டமிடல்<br>* மையத் திட்டமிடல் அதிகாரமே பொருளாதாரத் திட்டங்களைத் தயாரிக்கும்.<br>4. பொருளாதாரச் சிக்கல்களுக்குத் தீர்வு<br>* விலை இயக்கமுறை, அரசின் தலையீடு ஆகியவை மூலம் அடிப்படைச் சிக்கல்களுக்குத் தீர்வு.<br>5. சுதந்திரமும் கட்டுப்பாடும்<br>* தனியாருக்குச் சுதந்திரம் இருந்தாலும் ஒட்டுமொத்தக் கட்டுப்பாடு அரசிடமே இருக்கும் |

www.Padasalai.Net

**33)** முதலாளித்துவத்தையும் சமதருமத்தையும் வேறுபடுத்துக.

| முதலாளித்துவம் | சமதருமம் |
|---|---|
| முதலாளித்துவத் தந்தை ஆடம் ஸ்மித் | சமதருமத்தின் தந்தை காரல் மார்க்ஸ் |
| தடையில்லாப் பொருளாதாரம் (அல்லது) சந்தைப் பொருளாதாரம் | திட்டமிட்ட பொருளாதாரம் (அல்லது) கட்டளைப் பொருளாதாரம் |
| தனியாரின் பங்கு அதிகம் | அரசின் கட்டுப்பாடு அதிகம் |
| இலாபமே முதன்மை நோக்கம் | சமூக நலனே முதன்மை நோக்கம் |
| வருமானப்பகிர்வில் ஏற்றத்தாழ்வு | வருமானப் பகிர்வில் சமத்துவம் |

**34)** இருதுறை சுழல் ஓட்ட மாதிரியினை விளக்குக.




**1. இல்லத்துறை :**
உற்பத்திக்காரணிகளை நிறுவனத்துறைக்கு வழங்கி வருவாயைப் பெறுதல்.
பொருள்கள், பணிகளை நிறுவனத்துறையிடமிருந்து வாங்குதல்.

**2. நிறுவனத்துறை :**
பொருள்கள், பணிகளை இல்லத்துறைக்கு வழங்கி வருவாயைப் பெறுதல்.
உற்பத்திக் காரணிகளைப் பணியமர்த்துதல்.

**3. இருதுறை சுழல் ஓட்டம் :**

இல்லத்துறையிலிருந்து நிறுவனத்துறைக்கு மாறும் உற்பத்திக்காரணியின் பணிகளையும், நிறுவனத் துறையிலிருந்து இல்லத்துறைக்கு மாறும் பொருள்கள் மற்றும் பணிகளையும் குறிக்கும் உண்மை ஓட்டமே வெளிவட்டமாகவும், காரணி விலை, பொருள்களின் விலையைக் குறிக்கும் பண ஓட்டமே உள்வட்டமாகவும் காணப்படும்.

**4. அடிப்படை அடையாளம் :**

**Y = C + I,**

**Y =** வருவாய்,

**C =** நுகர்வு,

**I =** முதலீடு

www.Padasalai.Net

ஐந்து மதிப்பெண் வினா -- விடை

**35)** **பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.**

**1. நாட்டு வருமானம் :**

நாட்டு வருமானத்தைக் கணக்கிடுதல், நாட்டு வருமானத்தில் பல துறைகளின் பங்கு முதலானவை பேரியல் பொருளாதாரப் பகுத்தாய்வின் அடிப்படைக் கூறுகள்.

நாட்டு வருமானமும் அதன் பங்குகளின் போக்கும் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சிமுறையின் நீண்டகால அறிவைத் தருகிறது.

**2. பணவீக்கம் :**

பொதுவான விலையளவு தொடர்ந்து அதிகரிப்பதைக் குறிப்பதாகும். மொத்த மற்றும் நுகர்வோர் விலைக் குறியீட்டெண்களைப் பயன்படுத்தி மொத்த விலையளவை மதிப்பிடுவது அவசியமாகும்.

**3. வணிகச் சுழற்சி :**

எல்லா நாடுகளும் வணிகச்சுழற்சியால் ஏற்படும் சிக்கல்களைச் சந்திக்கின்றன.

மொத்தப் பொருளாதாரக் காரணிகளை அப்படையாகக்கொண்டு நாட்டின் வணிகச் சுழற்சி மாற்றங்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

**4. வறுமையும் வேலையின்மையும் :**


பொருளாதார முரண்பாடான இச்சிக்கலுக்குத் தீர்வு காண, வளங்களை ஒதுக்கீடு செய்து சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

**5. பொருளாதாரக் கொள்கைகள் :**

பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்க பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

அடிப்படைச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண, தடைகளைத் தகர்த்தெரிய, வளர்ச்சியை அடைய பொருளாதாரக்கொள்கைகள் தேவைப்படுகின்றன.

**36)** **நடவடிக்கைகள் அடிப்படையில் பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.**




www.Padasalai.Net

**செயல்பாட்டின் அடிப்படையில் ஒருபொருளாதாரத்தின் பணிகள் :**

| | | |
|---|---|---|
| **1. பொருளாதார அமைப்பு** | : | பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும்முறை. |
| **2. அடிப்படை நடவடிக்கைகள்** | : | உற்பத்தி மற்றும் நுகர்வே அடிப்படை நடவடிக்கைகள். |
| **3. தலையாய நோக்கம்** | : | வளர்ச்சியை அடைவது. |
| **4. பரிமாற்றப்பணி** | : | அடிப்படை நடவடிக்கைகளுக்கு உதவுதல்.<br>இவை பொருளாதார, பொருளாதாரமற்ற, வெளிப்புற நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகின்றன. |
| **5. பொருளாதார நடவடிக்கைகள்** | : | போக்குவரத்து, வங்கிப்பணி, விளம்பரம், திட்டமிடல், அரசின்கொள்கை மற்றும் பிற பணிகள். |
| **6. பொருளாதார மற்ற நடவடிக்கைகள்** | : | சுற்றுச்சூழல், உடல்நலம், கல்வி, பொழுதுபோக்கு, ஆட்சிமுறை, சட்டதிட்டங்கள் போன்றவை. |
| **7. வெளிப்புற நடவடிக்கைகள்** | : | இறக்குமதி, ஏற்றுமதி, குடியேற்ற இடப்பெயர்ச்சிகள், பன்னாட்டு உறவுகள், அயல் முதலீடு, அயல்நாட்டுச் செலாவணி ஈட்டல் ஆகியவைகளால் பாதிக்கின்றன. |

**37)** **முதலாளித்துவம் , சமதருமம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக.**

| **தன்மைகள்** | **முதலாளித்துவம்** | **சமதருமம்** |
|---|---|---|
| **1)** உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது உரிமை |
| **2)** பொருளாதார நோக்கம் | இலாப நோக்கம் | சமூக நலன் |
| **3)** மையப்பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லாச் சந்தைமுறை | ஒன்றிய அரசின் திட்டமுறை |
| **4)** அரசின் பங்கு | மூலப்பொருள்கள் கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு |
| **5)** வருமானப் பங்கீடு | சமனற்றநிலை | சமநிலை |
| **6)** நிறுவனத்தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் |
| **7)** பொருளாதாரச் சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை |
| **8)** முக்கியமான சிக்கல் | சமமின்மை | திறனின்மை |

**( ஏதேனும் ஐந்து இயல்புகள் மட்டும் )**

www.Padasalai.Net

| 38) | முதலாளித்துவம், சமதருமம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக. | | | |
|---|---|---|---|---|
| | **தன்மைகள்** | **முதலாளித்துவம்** | **சமதருமம்** | **கலப்புத்துவம்** |
| | **1)** உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது உரிமை | தனியார் உரிமையும் பொது உரிமையும் |
| | **2)** பொருளாதார நோக்கம் | இலாப நோக்கம் | சமூக நலன் | இலாப நோக்கமும் சமூக நலனும் |
| | **3)** மையப் பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லாச் சந்தைமுறை | ஒன்றிய அரசின் திட்டமுறை | தடையில்லாச் சந்தைமுறையும் ஒன்றிய அரசின் திட்டமுறையும் |
| | **4)** அரசின் பங்கு | மூலப்பொருள்கள் கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| | **5)** வருமானப் பங்கீடு | சமனற்றநிலை | சமநிலை | குறைந்த சமநிலையற்ற நிலை |
| | **6)** நிறுவனத் தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியார் நிறுவனமும் அரசு நிறுவனங்களும் |
| | **7)** பொருளாதாரச் சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாட்டுடன் சுதந்திரம் |
| | **8)** முக்கியமான சிக்கல் | சமமின்மை | திறனின்மை | சமமின்மையும் திறனின்மையும் |
| | ( ஏதேனும் ஐந்து தன்மைகள் மட்டும் ) | | | |

www.Padasalai.Net

| K.J.கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி-- இராமநாதபுரம் மாவட்டம் | | |
|---|---|---|
| பன்னிரண்டாம் வகுப்பு -- பொருளியல் | | |
| ( இயல் -- 2 ) -- நாட்டு வருமானம் | | |
| **சரியான விடையைத் தெரிவு செய்க** | | |
| **1)** | உற்பத்திக்காரணியின் செலவின் அடிப்படையிலான NNP<br>அ) நாட்டு வருமானம் ஆ) உள்நாட்டு வருமானம்<br>இ) தலைவீத வருமானம் ஈ) சம்பளம் | **அ) நாட்டு வருமானம்** |
| **2)** | முதன்மைத்துறை என்பது ------------------------<br>அ) தொழில் ஆ) வணிகம்<br>இ) வேளாண்மை ஈ) கட்டடம் கட்டுதல் | **இ) வேளாண்மை** |
| **3)** | எத்தனை முறைகளால் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது?<br>அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) நான்கு | **ஆ) மூன்று** |
| **4)** | எவற்றைக்கூட்டி வருமானமுறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது?<br>அ) உற்பத்தி ஆ) வரி இ) செலவு ஈ) வருமானம் | **ஈ) வருமானம்** |
| **5)** | கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது மிகப்பெரிய எண்ணாக இருக்கும்?<br>அ) செலவிடக்கூடிய வருமானம் இ) NNP<br>ஆ) தனிமனிதர் வருமானம் ஈ) GNP | **ஈ) GNP** |
| **6)** | ---------------------- துறையில் செலவுமுறையில் நாட்டு வருமானம் மதிப்பிடப்படுகிறது.<br>அ) கட்டடத்துறை ஆ) வேளாண்மைத்துறை<br>இ) பணித்துறை ஈ) வங்கித்துறை | **அ) கட்டடத்துறை** |
| **7)** | மூன்றாம்துறை ---------------------- எனவும் அழைக்கப்படுகிறது<br>அ) பணிகள் ஆ) வருமானம்<br>இ) தொழில் ஈ) உற்பத்தி | **அ) பணிகள்** |
| **8)** | ஒருநாட்டின் ---------------------- செயலை நாட்டு வருமானம் குறிப்பிடுகிறது.<br>அ) தொழில் ஆ) விவசாயம்<br>இ) பொருளாதாரம் ஈ) நுகர்வு | **இ) பொருளாதாரம்** |
| **9)** | ---------------------- ஆல் நாட்டு வருமானத்தை வகுத்தால் தலைவீத வருமானம் கண்டறியலாம்.<br>அ) உற்பத்தி ஆ) நாட்டின் மக்கள்தொகை<br>இ) செலவு ஈ) GNP | **ஆ) நாட்டின் மக்கள்தொகை** |
| **10)** | GNP = ---------------------- + வெளிநாட்டிலிருந்து வரும் நிகரக் காரணி வருமானம்<br>அ) NNP ஆ) NDP இ) GDP<br>ஈ) தனிமனிதர் வருமானம் | **இ) GDP** |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **11)** | NNP என்பது ------------------------<br>அ) Net National Product ஆ) National Net Product<br>இ) National Net Provident ஈ) Net National Provident | **அ) Net National Product** |
| **12)** | மொத்த மதிப்பிலிருந்து ------------------------ ஐக் கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும்?<br>அ) வருமானம் ஆ) தேய்மானம் இ) செலவு<br>ஈ) வினைமுடிவடைந்த பண்டங்களின் மதிப்பு | **ஆ) தேய்மானம்** |
| **13)** | இந்தியாவில் நிதியாண்டு என்பது<br>அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 ஆ) மார்ச் 1 முதல் ஏப்ரல் 30<br>இ) மார்ச்1 முதல் மார்ச்16 ஈ) ஜனவரி1 முதல் டிசம்பர்31 | **அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31** |
| **14)** | NNP - யிலிருந்து வெளிநாட்டுக்காரணிகளின் நிகர வருமானம் கழிக்கப்பட்டால் கிடைக்கும் நிகர மதிப்பு ------------<br>அ) மொத்த நாட்டு உற்பத்தி இ) நிகரஉள்நாட்டு உற்பத்தி<br>ஆ) செலவிடக்கூடிய வருமானம் ஈ) தனிநபர் வருமானம் | **இ) நிகர உள்நாட்டு உற்பத்தி** |
| **15)** | உற்பத்திப்புள்ளியில் NNP - யின் மதிப்பு ------------------------ என அழைக்கப்படுகிறது.<br>அ) காரணிச்செலவில் NNP ஆ) அங்காடி விலையில் NNP<br>இ) காரணிச்செலவில் GNP ஈ) தலைவீத வருமானம் | **அ) காரணிச் செலவில் NNP** |
| **16)** | ஒருநாட்டின் சராசரி வருமானம் என்பது<br>அ) தனிநபர் வருமானம ஆ) தலைவீத வருமானம்<br>இ) பணவீக்கவீதம் ஈ) செலவிடக்கூடிய வருமானம் | **ஆ) தலைவீத வருமானம்** |
| **17)** | பணவீக்கத்திற்குச் சரிபடுத்தப்பட்ட தேசிய வருவாயின் மதிப்பு ------------------------ என அழைக்கப்படுகிறது.<br>அ) பணவீக்கவீதம் ஆ) செலவிடக்கூடிய வருமானம்<br>இ) GNP ஈ) உண்மை நாட்டு வருமானம் | **ஈ) உண்மை நாட்டு வருமானம்** |
| **18)** | கீழ்வருவனவற்றுள் எது தடைபடா ஓட்டக் ( Flow ) கருத்துரு?<br>அ) சட்டைகளின் எண்ணிக்கை ஆ) மொத்தச்சொத்து<br>இ) மாத வருமானம் ஈ) பண அளிப்பு | **இ) மாத வருமானம்** |
| **19)** | PQLI என்பது ------------------------ இன் குறியீடு ஆகும்.<br>அ) பொருளாதார வளர்ச்சி ஆ) பொருளாதார நலன்<br>இ) பொருளாதார முன்னேற்றம் ஈ) பொருளாதார மேம்பாடு | **ஆ) பொருளாதார நலன்** |
| **20)** | மிக அதிக அளவிலான நாட்டு வருமானம் ------------------------ லிருந்து வருகிறது.<br>அ) தனியார் துறை ஆ) உள்துறை இ) பொதுத்துறை<br>ஈ) எதுவும் இல்லை | **அ) தனியார் துறை** |

www.Padasalai.Net

| இரண்டு மதிப்பெண் வினா -- விடை | |
|---|---|
| **21)** | **நாட்டு வருமானம் இலக்கணம் கூறுக.**<br>* ஒருநாட்டிலுள்ள உழைப்பும் முதலும் சேர்ந்து அங்குள்ள இயற்கை வளங்களை பயன்படுத்திப் பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்கின்றன. இதுவே அந்நாட்டின் நிகர ஆண்டு வருமானம், நாட்டு வருமானம் அல்லது நாட்டு ஈவுத்தொகை ஆகும்.<br>**-- ஆல்பிரட் மார்ஷல் --** |
| **22)** | **GNP - கணக்கிடும் வாய்பாட்டை எழுதுக.**<br>* அங்காடி விலையில் **GNP** = அங்காடி விலையில **GDP** + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்<br>$GNP = C + I + G + (X - M) + (R - P)$<br>**C** = நுகர்வு,<br>**I** = முதலீடு,<br>**G** = அரசின் கொள்முதல்,<br>$(X - M)$ = நிகர ஏற்றுமதி,<br>$(R - P)$ = நிகர வருமானம் |
| **23)** | **NNP- க்கும் NDP- க்கும் உள்ள வேறுபாடு யாது?** |
| **24)** | **GNP- க்கும் NNP- க்கும் உள்ள தொடர்பினை எழுதுக.**<br>* **GNP** மற்றும் **NNP** ஆகிய இரண்டிலும் நிகர வருமானம் சேர்க்கப்படுகிறது.<br>* **GNP** - யிலிருந்து தேய்மானத்தைக் கழித்தால் கிடைப்பது **NNP**.<br>* **NNP = GNP −** தேய்மானம் |
| **25)** | **தனிமனிதர் வருமானம் என்றால் என்ன?**<br>* ஓர் ஆண்டில் ஒருநாட்டில் வாழும் ஒவ்வொரு தனிமனிதருக்குப் பலவழிகளில் இருந்து கிடைக்கப்பெறும் மொத்த வருமானம் ஆகும். |
| **26)** | **GDP குறைப்பான் இலக்கணம் தருக.**<br>* GDP- யில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள், பணிகளின் விலை மாற்றக் குறியீட்டெண் ஆகும்.<br>$\text{GDP குறைப்பான்} = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$ |
| **27)** | **நாட்டு வருமானக் கணக்கீட்டில் " சொந்த நுகர்வு " எவ்வாறு சிக்கலைத் தருகிறது?**<br>* உழவர்கள் தங்களின் சொந்த நுகர்விற்காக விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி நாட்டு வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதைக் கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது. |

| **NNP ( நிகர நாட்டு உற்பத்தி )** | **NDP ( நிகர உள்நாட்டு உற்பத்தி )** |
|---|---|
| **NNP = GNP −** தேய்மானம் | **NDP = GDP −** தேய்மானம் |
| நிகர வருமானம் சேர்க்கப்படுகிறது. | நிகர வருமானம் சேர்க்கப்படுவதில்லை |

www.Padasalai.Net

| மூன்று மதிப்பெண் வினா -- விடை | |
|---|---|
| **28)** | **தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.**<br>* ஓராண்டில் ஒருநாட்டில் வசிக்கும் ஒருவரின் சராசரி ஆண்டு வருமானம்.<br>* நாட்டு வருமானத்தை மக்கள்தொகையால் வகுக்கக் கிடைப்பது தலா வருமானம் ஆகும்.<br>தலா வருமானம் = $\frac{\text{ஒருகுறிப்பிட்ட ஆண்டின் நாட்டு வருமானம்}}{\text{அதே ஆண்டின் மக்கள் தொகை}}$ |

**29)** **தனிமனிதர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?**

| தனிமனிதர் வருமானம் | செலவிடக்கூடிய வருமானம் |
|---|---|
| ஒவ்வொரு தனிமனிதர்களுக்குப் பலவழிகளில் இருந்து கிடைக்கும் மொத்த வருமானம். | நுகர்வுக்காகச் செலவிடக்கூடிய வருமானத்தைக் குறிக்கிறது. |
| நேர்முகவரி செலுத்துவதற்கு முன்பாகப் பெற்ற மொத்த வருமானம். | நேர்முகவரி செலுத்தியபிறகு பெற்ற மொத்த வருமானம். |
| தனிமனிதர் வருமானம் = நாட்டு வருமானம் + மாற்றுச்செலுத்துதல்கள் | செலவிடக்கூடிய வருமானம் = தனிமனிதர் வருமானம் – நேர்முகவரிகள் |

**30)** **காரணிச்செலவில் NNP - குறிப்பு தருக.**

* **NNP** (நிகர நாட்டு உற்பத்தி ) என்பது உற்பத்தியின் அங்காடி மதிப்பாகும்.
* உற்பத்திக்காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமானச் செலுத்துதல்கள்.
* காரணிச்செலவில் நிகர நாட்டு உற்பத்தியைப்பெற, அங்காடிவிலையில் **NNP** - யின் பணமதிப்பிலிருந்து மறைமுகவரியைக் கழித்து மானியங்களைக் கூட்டவேண்டும்.
* காரணிச்செலவில் **NNP** = அங்காடிவிலையில் **NNP** – மறைமுகவரி + மானியம்

**31)** **செலவுமுறை பற்றி ஒரு சிறுகுறிப்பு தருக.**

* ஓராண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்தச் செலவுகள் அனைத்தையும் கூட்டி நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.
* தனிமனிதரின் சொந்த நுகர்வுச் செலவுகள் (C),
  நிகர உள்நாட்டு முதலீடு மற்றும் முதலீட்டுப்பொருள் வாங்கும் செலவு (I),
  அரசின் கொள்முதல் செலவு (G) மற்றும்
  நிகர ஏற்றுமதி ( X -- M ) ஆகிய அனைத்துச் செலவுகளையும் கூட்டிச் செலவுமுறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.

**GNP = C + I + G + (X -- M)**

www.Padasalai.Net

| | |
|---|---|
| **32)** | **நாட்டு வருமானம் கணக்கிடுதலில் இருமுறைக்கணக்கீட்டுச் சிக்கலுக்கு என்ன தீர்வு?**<br>* ஒருதுறையின் வெளியீட்டுப் பொருள் மற்றொரு துறையின் உள்ளீட்டுப் பொருளாகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரேபொருள் இருமுறை அல்லது பலமுறைக் கணக்கிடுவது இருமுறைக் கணக்கிடல் என்று பெயர்.<br>**தீர்வு :**<br>வினை முடிந்த பண்டங்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக்கொண்டு நாட்டு வருமானத்தைப் பெறலாம். |
| **33)** | **நாட்டு வருமானம், பொதுநலன் ஆகியவற்றைப்பற்றிச் சுருக்கமாக எழுதுக.**<br>1. நாட்டின்வளர்ச்சியும் பொருளாதார அந்தஸ்தும் நாட்டு வருமானத்தைப் பொறுத்தே அமைகிறது.<br>2. நுகர்வுப் பண்டங்களைக்காட்டிலும் மூலதனப் பண்டங்கள் அதிகமாக இருந்தாலும்,<br>3. இயற்கை வளங்களை மாசுபடுத்தி அதிகமான GDP- யைப் பெற்றாலும்,<br>4. இராணுவத்தளவாடங்கள் உற்பத்தி அதிகரிப்பதினால் நாட்டு உற்பத்தி அதிகரித்தாலும்,<br>5. பெண்களுக்கு வேலைவாய்ப்பு தருதல், அதிக நேரம் வேலைசெய்ய வைத்தல் போன்றவை மூலமாக தலாவருமானம் அதிகரித்தாலும் பொருளாதார நலனில் முன்னேற்றம் இருக்காது. |
| **34)** | **நாட்டு வருமானத்தைக் கணக்கிடுதலின்பயன்களைப் பட்டியலிடுக.**<br>1. நாட்டின் பொருளாதாரச் செயல்திறனை விளக்குகிறது<br>2. பொருளாதார வல்லுநர்கள் திட்டமிட நாட்டின் பல்வேறு நோக்கங்களுக்காக நாட்டு வருமானம் பற்றிய புள்ளி விவரங்களைப் பயன்படுத்துகிறது<br>3. மக்களின் வாழ்க்கைத்தரம் அதிகரித்துள்ளதா என்பதைக் கண்டறிய உதவுகிறது<br>4. பிறநாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க பயன்படுகிறது<br>5. ஒருநாட்டின் வளர்ச்சியின் அளவைக் கணக்கிடப் பயன்படுத்தப்படுகிறது |
| **ஐந்து மதிப்பெண் வினா -- விடை** | |
| **35)** | **நாட்டு வருமானத்தின் முக்கியத்துவத்தை விவரி.**<br>1. பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் மற்றும் பங்களிப்பு பற்றி அறிய,<br>2. பணவியல் மற்றும் பொதுநிதிக் கொள்கைகளை உருவாக்க,<br>3. திட்டமிட மற்றும் திட்டங்களின் விளைவுகளை மதிப்பிட,<br>4. பொருளாதார மாதிரிகளை உருவாக்க,<br>5. துறைவாரியான வருமானத்தை ஒப்பிட,<br>6. தலா வருமானம் கணக்கிட,<br>7. உற்பத்திக்காரணிகளின் வருமானப் பகிர்வை அறிந்துகொள்ள,<br>8. பேரியல் பொருளாதாரக்காரணிகளைக் கண்டறியப் பயன்படுகிறது. |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 36) | **நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.**<br>* நாட்டு வருமானத்தை மூன்றுமுறைகளைப் பயன்படுத்தி அளவிடலாம். அவை<br>1. உற்பத்திமுறை 2. வருமானமுறை 3. செலவுமுறை<br>**I. உற்பத்திமுறை ( மதிப்புக் கூடுதல் முறை ) :**<br>* ஒருநாட்டின் உற்பத்தியைக் கணக்கிடுவதாகும்.<br>* சரக்குமுறை என்றும் அழைக்கப்படுகிறது.<br>* ஒருதுறையின் வெளியீட்டுப் பொருள் மற்றொரு துறையின் உள்ளீட்டுப் பொருளாகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரேபொருள் இருமுறை அல்லது பலமுறைக் கணக்கிடுவது இருமுறைக் கணக்கிடல் என்று பெயர்.<br>* வினை முடிந்த பண்டங்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக்கொண்டு நாட்டு வருமானத்தைப் பெறலாம்.<br><br>**கணக்கிடுவதின் நிலைகள் :**<br>1. ஒவ்வொரு பயிரின் மொத்த உற்பத்தி கணக்கிடப்படுகிறது.<br>2. மொத்த உற்பத்தி அங்காடி விலையால் மதிப்பிடப்படுகிறது.<br>3. விவசாயத்துறையின் மொத்த உற்பத்தியின் மதிப்பு கணக்கிடப்படுகிறது.<br>4. மொத்த விவசாய உற்பத்தியின் நிகர மதிப்பு கணக்கிடப்படுகிறது.<br><br>**II. வருமானமுறை ( காரணிகளின் ஊதியமுறை ) :**<br>* உற்பத்திக்காரணிகள் பெற்ற அனைத்து ஊதியங்களையும் கூட்டி கணக்கிடுவதாகும்.<br>* காரணிகள் ஈட்டும் வருமானமுறை எனவும் அழைக்கப்படுகிறது.<br><br>**கணக்கிடுவதின் நிலைகள் :**<br>1. மொத்த நிறுவனங்களும் வெவ்வேறு தொழில் குழுக்களாகப் பிரித்தல்.<br>2. காரணிகளின் வருமானம் உழைப்பாளர், மூலதன, கலப்பு வருமானம் என மூவகை இனங்களாகப் பிரித்தல்.<br>3. உள்நாட்டுக் காரணி வருமானங்களுடன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியின் நிகர வருமானத்தைக் கூட்டி நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.<br><br>$$Y = w + r + i + \pi + (R - P)$$<br><br>**III. செலவுமுறை :**<br>* ஓராண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்தச் செலவுகள் அனைத்தையும் கூட்டி நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.<br>* தனிமனிதர் சொந்த நுகர்வுச் செலவுகள் (C),<br>நிகர உள்நாட்டு முதலீடு மற்றும் முதலீட்டுப்பொருள் வாங்கும் செலவு (I),<br>அரசின் கொள்முதல் செலவு (G) மற்றும்<br>நிகர ஏற்றுமதி ( X -- M )ஆகிய அனைத்துச் செலவுகளையும் கூட்டிச் செலவுமுறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.<br><br>$$GNP = C + I + G + (X - M)$$ |

www.Padasalai.Net

**37)**

**நாட்டு வருமானக் கணக்கீட்டில் உள்ள சிக்கல்கள் யாவை?**

**1. மாற்றுச்செலுத்துதல்கள்**

* ஓய்வூதியம், வேலையின்மைக்கான உதவித்தொகை, மானியங்கள் போன்ற மாற்றுச்செலுத்துதல்களைத் நாட்டு வருமானத்தில் சேர்ப்பதில்லை.

**2. தேய்மானங்கள் கொடுப்பளவு மதிப்பிடுவதில் சிக்கல்**

* தேய்மானம் கொடுப்பளவு, விபத்து இழப்பீடு, பழுதுக் கட்டணங்கள் முதலானவற்றை நாட்டு வருமானத்திலிருந்து கழிப்பது எளிதல்ல.

**3. பணம் செலுத்தப்படாத சேவைகள்**

* பெண்களின் மதிப்புமிக்க பணிகளை நாட்டு உற்பத்தியில் சேர்ப்பதில்லை.

**4. சட்டவிரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம்**

* சூதாட்டம், கடத்தல், மது தயாரித்தல் போன்ற சட்டவிரோத நடவடிக்கையால் பெறப்படும் வருமானம் நாட்டு வருமானத்தில் சேர்க்கப்படுவதில்லை.

**5. சொந்த நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம்**

* உழவர்கள் தங்களின் சொந்த நுகர்விற்காக விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி நாட்டு வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதைக் கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.
* நுகர்வோர் விலைக்குறியீட்டெண்ணைப் பயன்படுத்தி நாட்டு வருமானத்தைக் கணக்கிடுகின்றனர்.

**6. மூலதன இலாபம்**

* மூலதன இலாபத்தை நாட்டு வருமானக் கணக்கீட்டில் சேர்க்கப்படுவதில்லை.

**7. புள்ளி விவரச் சிக்கல்**

* ஒரே புள்ளிவிவரத்தை பலமுறைக் கணக்கில் சேர்ப்பது, நம்பகத்தன்மை இன்மை, திறமைக்குறைவு, அர்ப்பணிப்பு இன்மை ஆகியவை சிக்கல்களைத் தருகின்றது.

**( ஏதேனும் ஐந்து சிக்கல்கள் மட்டும் )**

**38)**

**பொருளாதார ஆய்வில், சமூகக் கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி.**

1. சமூகக் கணக்கிடுதல் மூலமாகவும் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.
2. பொருளியல் அறிஞர்களுக்குக் கொள்கைகளை உருவாக்க உதவுகிறது.
3. பொருளாதார அமைப்பின் பல்வேறு துறைகளுக்கு இடையே உள்ள புள்ளியியல் மற்றும் பொருளாதாரக் காரணிகளுக்கு இடையேயுள்ள தொடர்புகளை விளக்குகிறது.
4. எதிர்காலப் பொருளாதாரநிலையைத் துல்லியமாகக் கணிக்க உதவுகிறது.

**சமூகக் கணக்கிடுதலின் துறைகள்**

**1) நிறுவனங்கள்**

* நிறுவனங்கள் உற்பத்திக் காரணிகளைப் பணியில் அமர்த்தி பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்கின்றன.
* நிறுவனங்கள் குடும்பங்களின் பணியைப்பெற்று கூலியை கொடுக்கின்றன.

**2) குடும்பங்கள்**

* குடும்பங்கள் தங்கள் உழைப்பினை அளித்துக் கூலியைப் பெற்று நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்ற பண்டங்கள், பணிகளை வாங்குகின்றன.

www.Padasalai.Net

| | |
|---|---|
| 38) | **3) அரசு**<br>* வரி, தண்டனை, கட்டணம், கடன் ஆகியவற்றின்மூலம் நிதியைத் திரட்டிப் பண்டங்களையும் பணிகளையும் வாங்குகிறது<br>* பாதுகாப்பு, பொதுசுகாதாரம், கல்வி ஆகியவற்றை மக்களுக்கு வழங்குவது அரசின் பணி.<br><br>**4) வெளிநாட்டு வணிகம்**<br>* ஏற்றுமதி - இறக்குமதிகள்மூலம் கிடைக்கும் வருமானம், வெளிநாட்டுக் கடன்கள், வெளிநாட்டு மூலதன வருமானச் செலுத்துதல்கள் ஆகியவை இத்துறையாகும்.<br><br>**5) மூலதனம்**<br>* சேமிப்பையும் முதலீட்டையும் உள்ளடக்கியது மூலதனத்துறை.<br>* காப்பீட்டு நிறுவனங்கள், வங்கி, நிதி நிறுவனங்களின் பணப்பரிமாற்றங்கள் இதில் அடங்கும்.<br>* தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்கிறது. |

www.Padasalai.Net

| K.J.கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி-- இராமநாதபுரம் மாவட்டம் | | |
|---|---|---|
| பன்னிரண்டாம் வகுப்பு –– பொருளியல் | | |
| இயல் -- 3 வேலைவாய்ப்பும் வருமானக் கோட்பாடுகளும் | | |
| சரியான விடையைத் தெரிவு செய்க | | |
| 1) | நடப்புக்கூலி விகிதத்தில் வேலை செய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் பணியில் இருந்தால் அது ------------------------- எனப்படும்.<br>அ) முழுவேலைவாய்ப்பு ஆ) குறைந்தளவு வேலைவாய்ப்பு<br>இ) வேலைவாய்ப்பின்மை ஈ) வேலைக்கான வாய்ப்பு | அ) முழு வேலைவாய்ப்பு |
| 2) | அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு -------------------------<br>அ) இயங்கா சமுதாயம் ஆ) சமதர்ம சமுதாயம்<br>இ) இயங்கும் சமுதாயம் ஈ) கலப்புப் பொருளாதாரம் | இ) இயங்கும் சமுதாயம் |
| 3) | மறைமுக வேலையின்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி -------------------<br>அ) சுழியம் ஆ) ஒன்று இ) இரண்டு ஈ) நேர்எண் | அ) சுழியம் |
| 4) | தொன்மைப் பொருளியல் கோட்பாட்டின் முதன்மையான இயல்பு -------------------------<br>அ) குறைந்தளவு வேலைவாய்ப்பு ஈ) நிறைகுறைப்போட்டி<br>ஆ) பொருளாதாரம் எப்போதும் சமநிலையில் இருக்கும்<br>இ) தேவை அதன் அளிப்பை உருவாக்குகிறது | ஆ) பொருளாதாரம் எப்போதும் சமநிலையில் இருக்கும் |
| 5) | J.B.சே ஒரு -------------------------<br>அ) புதிய தொன்மைப் பொருளியலாளர்<br>ஆ) தொன்மைப் பொருளியலாளர்<br>இ) புதிய யுகப்பொருளியலாளர் ஈ) புதிய பொருளியலாளர் | ஆ) தொன்மைப் பொருளியலாளர் |
| 6) | கீன்ஸின் கருத்துப்படி முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் எப்படிப்பட்டவேலையின்மை காணப்படுகிறது?<br>அ) முழுவேலைவாய்ப்பு ஆ) தன் விருப்ப வேலையின்மை<br>இ) தன் விருப்பமற்ற வேலையின்மை<br>ஈ) குறைவு வேலைவாய்ப்பு | ஈ) குறைவு வேலைவாய்ப்பு |
| 7) | வேலைவாய்ப்புப்பற்றித் தொன்மைக் கோட்பாட்டின் மையக்கருத்து என்பது -------------------------<br>அ) குறைந்துசெல் விளைவு விதி ஆ) தேவை விதி<br>இ) அங்காடி விதி ஈ) நுகர்வு விதி | இ) அங்காடி விதி |
| 8) | கீன்ஸின் கூற்றுப்படி வேலையின்மை என்பது -------------------------<br>அ) விளைவு அளிப்புப் பற்றாக்குறை<br>ஆ) விளைவுத் தேவைப் பற்றாக்குறை<br>இ) இரண்டும் பற்றாக்குறை ஈ) எவையும் இல்லை | ஆ) விளைவுத் தேவைப் பற்றாக்குறை |
| 9) | சேமிப்புக்கும் முதலீட்டுக்குமிடையே சமநிலையைக் கொண்டுவருவது ------------------------- நெகிழ்வு ஆகும்.<br>அ) தேவையின் ஆ) அளிப்பின் இ) மூலதனத்தின்<br>ஈ) வட்டியின் | ஈ) வட்டியின் |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **10)** | புதிய பொருளாதாரக் கோட்பாட்டின் வளர்ச்சியில் ........................ கோட்பாடு ஒரு திருப்புமுனையாக அமைந்தது.<br>அ) கீன்சின் ஆ) சேயின்(Say) இ) தொன்மையது<br>ஈ) வேலைவாய்ப்பு | **அ) கீன்சின்** |
| **11)** | வேலைவாய்ப்பு, வருவாய் பற்றிய கீன்சின் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துரு ........................ ஆகும்.<br>அ) தொகுதேவை ஆ) தொகு அளிப்பு<br>இ) விளைவுத்தேவை ஈ) இறுதிநிலை நுகர்வு விருப்பு | **இ) விளைவுத் தேவை** |
| **12)** | தொகுதேவையின் கூறு ........................ ஆகும்.<br>அ) தனிமனிதத் தேவை ஆ) அரசுச் செலவு<br>இ) ஏற்றுமதி மட்டும் ஈ) இறக்குமதி மட்டும் | **ஆ) அரசுச் செலவு** |
| **13)** | மொத்த அளிப்பு சமம் ........................<br>அ) C + I + G ஆ) C + S + G + ( X – M )<br>இ) C + S + T + ( X – M ) ஈ) C + S + T + Rf | **ஈ) C + S + T + Rf** |
| **14)** | தலையிடாக்கொள்கைக்குப் பதிலாகக் கீன்சின் கோட்பாடு ........................ யை எடுத்துரைக்கிறது.<br>அ) அரசுத் தலையீடின்மை ஆ) உச்ச அளவுத் தலையீடு<br>இ) சில சூழல்களில் அரசின் தலையீடு<br>ஈ) தனியார்துறை தலையீடு | **இ) சில சூழல்களில் அரசின் தலையீடு** |
| **15)** | கீன்சின் வேலைவாய்ப்பு, வருவாய்க் கோட்பாட்டில் ........................ பொருளாதார மந்தநிலைக்குக் காரணமாக உள்ளது.<br>அ) குறைவான உற்பத்தி ஆ) அதிகத்தேவை<br>இ) நெகிழ்வற்ற அளிப்பு ஈ) உற்பத்தித்திறன் ஒப்பிடும்போது மிகக் குறைந்த அளவு மொத்தத்தேவை | **ஈ) உற்பத்தித்திறன் ஒப்பிடும்போது மிகக் குறைந்த அளவு மொத்தத்தேவை** |
| **16)** | தொன்மைக் கோட்பாடு ........................ ஐ ஆதரிக்கிறது.<br>அ) சமநிலை வரவு செலவு ஆ) சமமற்ற வரவு செலவு<br>இ) உபரி வரவு செலவு ஈ) பற்றாக்குறை வரவு செலவு | **அ) சமநிலை வரவு செலவு** |
| **17)** | ........................ சமநிலையை கீன்சுடைய கோட்பாடு வலியுறுத்தியது. அ) மிகக் குறுகிய காலச்<br>ஆ)குறுகியகாலச் இ) மிக நீண்டகாலச் ஈ) நீண்ட காலச் | **ஆ) குறுகிய காலச்** |
| **18)** | தொன்மைக் கோட்பாட்டின்படி, வட்டிவீதம் ........................ க்கான வெகுமதி.<br>அ) முதலீடு ஆ) தேவை இ) மூலதனம் ஈ) சேமிப்பு | **ஈ) சேமிப்பு** |
| **19)** | கீன்சின் கோட்பாட்டில் பணத்திற்கான தேவையையும் பணத்தின் அளிப்பையும் நிர்ணயிப்பது ........................ ஆகும்.<br>அ) வட்டிவீதம் ஆ) விளைவுத்தேவை<br>இ) தொகுதேவை ஈ) தொகு அளிப்பு | **அ) வட்டிவீதம்** |
| **20)** | ஒருபொருளாதாரத்தில் ........................ இயக்கத்தை சேயின் (Say) விதி வலியுறுத்தியது.<br>அ) தூண்டப்பட்ட விலைக்கருவி<br>ஆ) தானியங்கும் விலைக்கருவி<br>இ) தூண்டப்பட்ட தேவை ஈ) தூண்டப்பட்ட முதலீடு | **ஆ) தானியங்கும் விலைக்கருவி** |

www.Padasalai.Net

| இரண்டு மதிப்பெண் வினா -- விடை | |
|---|---|
| **21)** | **முழு வேலைவாய்ப்பு வரையறு.**<br>* நல்ல உடல்நலம் உள்ளதனிமனிதர்கள், நிலவுகின்ற கூலிவிகிதத்தில் வேலைசெய்யத் தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் வேலை கிடைப்பது.<br>**( அல்லது )**<br>* விருப்பமில்லா வேலையின்மை இல்லாமல் இருப்பது.<br>**-- J.M.கீன்ஸ் --**<br>**( அல்லது )**<br>* கூலியும் விலையும் எந்த வேலைநிலையில் மாறிமாறி அதிகரிக்கின்றதோ அங்கு முழு வேலைவாய்ப்பு நிலவுகிறது.<br>**-- லர்னர் --** |
| **22)** | **ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது?**<br>* கிராமங்களில் மறைமுக வேலையின்மை மற்றும் பருவகால வேலையின்மை நிலவுகிறது. |
| **23)** | **உடன்பாடில்லா வேலையின்மை பற்றிச் சிறுகுறிப்பு வரைக.**<br>* உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவது தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை எனப்படும். |
| **24)** | **தற்போதுள்ள சூழலில் ஆள்குறைப்பிற்கான காரணத்தைத் தருக.**<br>* பணியாளர் திறன் குறைவு<br>* புதிய தொழில்நுட்பம்<br>* நவீன இயந்திரங்களின் பயன்பாடு |
| **25)** | **சே விதியின் எடுகோள்களைப் பட்டியலிடுக.**<br>* அதிக உற்பத்திக்கோ, வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை.<br>* விலைக்கருவி தானாக இயங்குவதால் அரசின் தலையீடு தேவை இருக்காது<br>* வட்டிவீத நெகிழ்வு, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும்.<br>* பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும். |
| **26)** | **விளைவுத்தேவை என்றால் என்ன?**<br>* உற்பத்தி செய்த பொருள்களின்மீது உண்மையிலேயே செலவு செய்கின்ற பணத்தின் அளவு. |
| **27)** | **தொகு அளிப்பின் கூறுகள் யாவை?**<br>* மொத்த நுகர்வுச்செலவு ( C )<br>* மொத்த தனியார் சேமிப்பு ( S )<br>* நிகர வரிவசூல் ( T )<br>* தனிநபர் வெளிநாட்டவருக்குக் கொடுக்கின்ற மாற்றுச்செலுத்துதல்கள் மற்றும் உதவித்தொகை ( $R_f$ )<br>* **மொத்த அளிப்பு = $C + S + T + R_f$** |
| **27) a)** | **J.B.சேயின் அங்காடி விதியை வரையறு.**<br>* அளிப்பு அதன் தேவையைத் தானே உருவாக்கும். |

www.Padasalai.Net

| மூன்று மதிப்பெண் வினா -- விடை | |
|---|---|
| 28) | **கீழ்க்காணுபவற்றைச் சுருக்கமாக எழுதுக.**<br>அ. பருவகால வேலையின்மை ஆ. உடன்பாடில்லா வேலையின்மை<br>இ. கற்றோர் வேலையின்மை<br>**அ. பருவகால வேலையின்மை**<br>* ஓர் ஆண்டில் சிலகாலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மை.<br>* எ.கா – வேளாண்மை சார்ந்த தொழில்கள் (கரும்பு, பருத்தி)<br>**ஆ. உடன்பாடில்லா வேலையின்மை**<br>* உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்றத்தன்மை நிலவுவது<br>* திறமை மற்றும் மூலப்பொருள்கள் பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுதுபார்த்தல் முதலான காரணங்களால் ஏற்படுகிறது.<br>**இ. கற்றோர் வேலையின்மை**<br>* சில நேரங்களில் படித்து கல்வித்தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை அல்லது பகுதிநேர வேலை செய்கின்ற நிலை.<br>* தவறான கல்விமுறை, வேலைத்திறன்குறைவு, இலகுவான வேலையை விரும்புதல் முதலான காரணங்களால் ஏற்படுகிறது. |
| 29) | **J.B -- சே விதியில் விளைவுகளைப் பற்றிக் குறிப்பு வரைக.**<br>1. அதிக உற்பத்திக்கோ, வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை.<br>2. விலைக்கருவி தானாக இயங்குவதால் அரசின் தலையீடு இருக்காது.<br>3. வட்டிவீத நெகிழ்வு, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும்.<br>4. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் செயல்படும். மக்கள் பணத்தைக் கையிருப்பாக வைத்திருக்கமாட்டார்கள்.<br>5. உற்பத்திக்காரணிகள் அதன் உற்பத்தித்திறனுக்கு இணையாகும்வரை ஏற்றுக்கொள்ளும். |
| 30) | **கீன்ஸின் கோட்பாட்டைவிளக்குக.**<br>* புதிய பொருளாதாரக் கோட்பாடுகளின் வளர்ச்சியில் 1936 இல் கீன்சு எழுதிய புத்தகமான " **வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய பொதுக்கோட்பாடு** " ஒருதிருப்புமுனையாக அமைந்தது.<br>* கீன்சின் கோட்பாடு முழுவேலைவாய்ப்புக் கருத்தை மட்டும் விளக்காமல், குறைந்த வேலைவாய்ப்புக்கும் வாய்ப்பு இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது.<br>* கீன்சின் கருத்துகள் குறுகியகாலத்தை அடிப்படையாகக்கொண்டது.<br>* வேலைவாய்ப்பின் அளவு நிர்ணயிக்கப்படும்போது மூலதனம், உழைப்பு, திறன், தொழில்நுட்பம் ஆகியவை மாறாமலேயே இருக்கும்.<br>* இக்கோட்பாட்டின் ஆரம்பப் புள்ளியே விளைவுத் தேவை எனும் கருத்து<br>* விளைவுத் தேவையின் அளவு தொகு அளிப்பையும் தொகு தேவையையும் சார்ந்துள்ளது. |

www.Padasalai.Net

**31)**

**தொகுதேவை என்றால் என்ன? அதன் கூறுகளைக் கூறுக.**

* ஒருநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின்மேல் குடும்பங்கள், நிறுவனங்கள், அரசு மற்றும் வெளிநாட்டவர் செய்கின்ற மொத்தச் செலவுத்தொகை.

**தொகுதேவை AD = C + I + G + ( X -- M )**

**கூறுகள் :**

1. நுகர்வுத்தேவை ( C )
2. முதலீட்டுத்தேவை ( I )
3. அரசுச்செலவு ( G )
4. நிகர ஏற்றுமதி ( X -- M )

**32)**

**தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக.**


* ஒருநாட்டில் ஓராண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு.

**மொத்த அளிப்பு AS = C + S + T + ( Rf )**

**கூறுகள் :**

1. மொத்த நுகர்வுச் செலவு ( C )
2. மொத்தத் தனியார் செலவு ( S )
3. நிகர வரிவசூல் ( T )
4. தனிநபர் வெளிநாட்டவருக்குக் கொடுக்கின்ற மாற்றுச் செலுத்துதல்கள் மற்றும் உதவித்தொகை ( Rf )

மொத்த அளிப்பு வளைகோடு




* Z நேர்கோடு பணக்கூலி மாறாமல் உள்ள நிலையையும், Z1 வளைகோடு பணக்கூலி மாறும்போது உள்ள நிலையையும் விளக்குகின்றன.
* ONf அளவில் பொருளாதாரம் முழுவேலைநிலையை அடைகிறது.
* அதற்குப்பிறகு உழைப்பினை அதிகப்படுத்தி உற்பத்தியை அதிகப்படுத்த இயலாது. எனவே Nf - க்குப் பின்னர் தொகு அளிப்புக்கோடு செங்குத்தாக உள்ளது.
* தொகு அளிப்புக்கோடானது, வேலைவாய்ப்புக்கும் வருமானத்திற்கும் இடையே உள்ள தொடர்பைப் பொருத்து அமையும்.

www.Padasalai.Net

| 33) | தொன்மையியத்தையும் கீன்ஸியத்தையும் ஒப்பிடுக. ( ஏதேனும் ஐந்து ) | | |
|---|---|---|---|
| | | தொன்மையியம் | கீன்ஸியம் |
| | 1. | நீண்டகாலச் சமநிலை | குறுகியகாலச் சமநிலை |
| | 2. | சேமிப்பு நல்லது | சேமிப்பு கெடுதல் |
| | 3. | முதலாளித்துவம் சரியானது | முரண்பாடுகளைக் கொண்டது முதலாளித்துவம் |
| | 4. | வட்டிவீதம் மாறாதது | வட்டிவீதம் மாறக்கூடியது |
| | 5. | அளிப்பு தன் தேவையைத் தானே உருவாக்குகிறது | தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது |

ஐந்து மதிப்பெண் வினா -- விடை

34)

**வேலையின்மைகளின் வகைகளை விவரி.**

**வேலையின்மைகளின் வகைகள் :**

**1. வணிகச்சுழல் வேலையின்மை**

* கீழ்நோக்கிய பகுதியில் ஒருபொருளாதாரம் இருக்கும்போது நிகழ்வது.
* பின்னிறக்கப் பகுதியில் உற்பத்தி மற்றும் வருமானம் குறைந்து வேலையின்மை அதிகரிக்கும்.
* அரசு முதலீட்டை அதிகரித்தும், விரிவான பணவியல் கொள்கைகளைக் கடைபிடித்தும் இவ்வேலையின்மையைக் குறைக்கலாம்.

**2. பருவகால வேலையின்மை**

* ஓர் ஆண்டின் சிலகாலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மை.
* எ.கா -- விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள்(கரும்பு, பருத்தி)
* மக்களின் தேவை கூடுவதாலும் குறைவதாலும் இவ்வேலையின்மை தோன்றும்.

**3. உடன்பாடில்லா வேலையின்மை**

* உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்றத் தன்மை நிலவுகின்ற வேலையின்மை.
* திறமை மற்றும் மூலப்பொருள்கள் பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல் ஆகியவற்றால் ஏற்படுகிறது.

**4. கற்றோர் வேலையின்மை**

* சில நேரங்களில் படித்து கல்வித்தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை அல்லது பகுதிநேர வேலை செய்கின்ற நிலை.
* தவறான கல்விமுறை, வேலைத்திறன்குறைவு, இலகுவான வேலையை விரும்புதல் முதலான காரணங்களால் ஏற்படுகிறது.

**5. தொழில்நுட்ப வேலையின்மை**

* புதிய தொழில்நுட்பம் மூலதனச்செறிவு உடையதாக இருப்பதால் குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.
* உழைப்பைச் சேமிக்கின்ற புதிய கண்டுபிடிப்புகள் தொழில்நுட்ப வேலையின்மையை உருவாக்கும்.

www.Padasalai.Net


| | |
|---|---|
| | **6. அமைப்புசார் வேலையின்மை**<br>* சமூக அமைப்பில் ஏற்படும் பெரிய மாற்றங்களால் ஏற்படும் வேலையின்மை<br>* ஒருபொருளுக்கான தேவை குறைதல் அல்லது அதிகரித்தல், இடுபொருள்கள் இன்மை, முதலீட்டுப் பற்றாக்குறையால் ஏற்படுகிறது.<br>* எ.கா -- கைபேசியின் தேவை அதிகரித்ததால், கேமரா மற்றும் டேப்ரிகார்டரின் தேவை குறைந்துள்ளது<br>**7. மறைமுக வேலையின்மை**<br>* தேவைக்கு அதிகமானவர்கள் ஒருவேலையில் இருப்பது<br>* சிலர் வேலையைவிட்டு விலகினாலும் உற்பத்தி பாதிக்காது<br>* உழைப்பாளர்களின் இறுதிநிலை உற்பத்தித்திறன் சுழியமாகவோ, குறைவாகவோ எதிர்மறையாகவோ இருக்கும்.<br><br>**( ஏதேனும் ஐந்து வேலையின்மை விளக்கத்துடன் )** |
| **35)** | **சேயின் அங்காடி விதியினைத் திறனாய்வு செய்க.**<br><br>1. கீன்சின் கருத்துப்படி, அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது. உற்பத்தி அதிகரிக்கும் அளவிற்குத் தேவை அதிகரிக்காவிட்டால் இவ்விதி செயல்படாது.<br>2. பொருளாதாரத்தில் தானாகச் சரிசெய்துகொள்ளும் அமைப்பு வேலையின்மையைக் குறைக்காது. மூலதனவிகிதத்தை அதிகரித்து வேலையின்மையைக் குறைக்கலாம்.<br>3. தனிமனிதர்கள் எதிர்பாராத சூழ்நிலைகளுக்காகவும், வணிகர்கள் எதிர்கால நடவடிக்கைகளுக்காகவும் பணத்தை இருப்பாக வைத்திருப்பார்கள். ஆகவே பணம் நடுநிலையாக இருக்காது.<br>4. அதிக உற்பத்திக்கு வாய்ப்பில்லை என்று சேயின் சந்தை விதி கூறுகிறது. அளவுக்கு அதிகமான உற்பத்திக்கு வாய்ப்பு உள்ளதாகக் கீன்சு கூறுகிறார்.<br>5. முதலாளித்துவ நாடுகளில் குறைவான வேலை உள்ளதால் முழுவேலைவாய்ப்புக்கு வாய்ப்பில்லை என கீன்சு கூறுகிறார்.<br>6. அளவுக்கதிகமான உற்பத்தியும், அதிக வேலையின்மையும் பல முதலாளித்துவ நாடுகளில் காணப்படுவதால் அரசின் தலையீடு அவசியம் என கீனச் கருதுகிறார். |

www.Padasalai.Net

36)

**ADF மற்றும் ASF --க்கு இடையிலான சமநிலையை வரைபடம்மூலம் விளக்குக**

* கீன்சின் வேலைவாய்ப்புக் கோட்பாட்டில் ADF மற்றும் ASF இரண்டின் சமநிலையை விளக்க குடும்பங்கள், வணிகம் ஆகிய இருதுறைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.
* நுகர்வுச் செலவு தொடர்பான முடிவுகளைக் குடும்பங்களும், முதலீடு தொடர்பான முடிவுகளை வணிக நிறுவனங்களும் எடுக்கின்றன.




www.Padasalai.Net

* தொகுதேவை மற்றும் தொகுஅளிப்பு அணுகுமுறை விளக்கப்பட்டுள்ளது.
* தொகுதேவையும் தொகுஅளிப்பும் **E** என்ற புள்ளியில் சமநிலையடைகிறது.
* இப்புள்ளியில் வேலைவாய்ப்பு **$N_0$** ஆக இருக்கும்.
* **$ON_1$**அளவு வேலைவாய்ப்பில் தொகுஅளிப்பு **$N_1R_1$** தொகுதேவை **$M_1N_1$** ஆகும்
* எதிர்பார்க்கும் இலாபத்தை அடைய முதலாளி அதிக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவர்.
* சமநிலை E என்ற புள்ளியை அடைந்தபிறகு உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவர்.
* ஏனெனில் $N_0$ நிலைக்குப்பிறகு வேலைவாய்ப்பு அதிகரித்தால் தொகுதேவை தொகு அளிப்பைவிடக் குறைவாக இருக்கும்.
* முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உற்பத்திச் சமநிலையைத் தீர்மானிப்பதில் தொகு தேவைக் கருத்து முக்கியத்துவம் வகிக்கிறது.
* $N_0$ , $N_f$ - க்கும் உள்ள வித்தியாசம் வேலையின்மையைக் காட்டுகிறது.
* வேலைச் சமநிலையை விளக்குவதில் விளைவுத்தேவை முக்கியப்பங்கு வகிக்கிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 37) | **தொன்மைக்கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.** | | | |
| | **வ. எண்** | **தொன்மைக்கோட்பாடு** | | **கீன்ஸ் கோட்பாடு** |
| | 1. | நீண்டகாலச் சமநிலை | | குறுகியகாலச் சமநிலை |
| | 2. | சேமிப்பு நல்லது | | சேமிப்பு கெடுதல் |
| | 3. | நுண்ணியல் அணுகுமுறை | | பேரியல் அணுகுமுறை |
| | 4. | தலையிடாக்கொள்கை வலியுறுத்தப்படுகிறது | | அரசின் தலையீடு அனுமதிக்கப்படுகிறது |
| | 5. | முதலாளித்துவம் சரியானது | | முதலாளித்துவம் முரண்பாடுடையது |
| | 6. | சேமிப்பும் முதலீடும் வட்டிவீதத்தை நிர்ணயிக்கிறது | | பணத்திற்கான தேவையும் அளிப்பும் வட்டிவீதத்தை நிர்ணயிக்கிறது |
| | 7. | வட்டிவீதம் மாறாதது | | வட்டிவீதம் மாறக்கூடியது |
| | 8. | அளிப்பு தன் தேவையைத் தானே உருவாக்குகிறது | | தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது |
| | 9. | வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி | | வட்டி என்பது ரொக்க இருப்பை விட்டுக்கொடுப்பதற்கான வெகுமதி |
| | 10. | பணம் பரிவர்த்தனைக்கு மட்டுமே உதவும் | | பணம் பரிவர்த்தனைக்கும் சேமிக்கவும் உதவும் |
| **ஏதேனும் ஐந்து வேறுபாடுகள் மட்டும்** | | | | |

www.Padasalai.Net

## K.J.கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி-- இராமநாதபுரம் மாவட்டம்

## பன்னிரண்டாம் வகுப்பு – பொருளியல்

## இயல் -- 4 நுகர்வுச்சார்பும் முதலீட்டுச் சார்பும்

**சரியான விடையைத் தெரிவு செய்க**

| | | |
|---|---|---|
| **1)** | சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது<br>அ) $C\ /\ Y$ ஆ) C Y இ) Y / C ஈ) C + Y | அ) $\frac{C}{y}$ |
| **2)** | இறுதிநிலை நுகர்வு நாட்டம் கூடினால்<br>அ) நுகர்வுச் சார்புக்கோடு செங்குத்தை நோக்கிச் செல்லும் ஆ) நுகர்வுச்சார்பு மேல்நோக்கி இடம்பெயரும்<br>இ) நுகர்வுச்சார்பு கீழ்நோக்கி இடம்பெயரும்<br>ஈ) சேமிப்புச்சார்பை மேலே தள்ளும் | **அ) நுகர்வுச் சார்புக்கோடு செங்குத்தை நோக்கிச் செல்லும்** |
| **3)** | கீன்சின் நுகர்வுச்சார்பு C = 10 + 0.8Y ஆக இருந்து, செலவிடக்கூடிய வருவாய் ₹1000 ஆக இருந்தால் நுகர்வு எவ்வளவு?<br>அ) ₹ 0.8 ஆ) ₹ 800 இ) ₹ 810 ஈ) ₹ 0.81 | **இ) ₹ 810** |
| **4)** | கீன்சின் நுகர்வுச்சார்பு C = 10 + 0.8Y ஆக இருந்து, செலவிடக்கூடிய வருவாய் ₹100 ஆக இருந்தால் இறுதிநிலை நுகர்வு நாட்டம் எவ்வளவு?<br>அ) ₹ 0.8 ஆ) ₹ 800 இ) ₹ 810 ஈ) ₹ 0.81 | **அ) ₹ 0.8** |
| **5)** | கீன்சின் நுகர்வுச்சார்பு C = 10 + 0.8Y ஆக இருந்து, செலவிடக்கூடிய வருவாய் ₹100 ஆக இருந்தால் சராசரி நுகர்வு நாட்டம் எவ்வளவு?<br>அ) ₹ 0.8 ஆ) ₹ 800 இ) ₹ 810 ஈ) ₹ 0.9 | **ஈ) ₹ 0.9** |
| **6)** | நாட்டு வருமானம் உயரும்போது<br>அ) APC யின் மதிப்பு குறைந்துசென்று MPC யின் மதிப்பை நெருங்கிவிடும்.<br>ஆ) APC உயர்ந்து APC யின் மதிப்பைவிட்டு விலகிச்செல்லும். இ) APC மாறாமல் இருக்கும்.<br>ஈ) APC முடிவிலியை ( INFINITY ) நெருங்கிச்செல்லும். | **அ) APC யின் மதிப்பு குறைந்துசென்று MPC யின் மதிப்பை நெருங்கிவிடும்.** |
| **7)** | ஒருகுறிப்பிட்ட வருமானம் அளவில், நுகர்வு அதிகரித்தால்<br>அ) மொத்தத்தேவை உயரும் ஆ) ஏற்றுமதி உயரும்<br>இ) வரியின்மூலம் வரும் வருவாய் குறையும்<br>ஈ) இறக்குமதிச் செலவு குறையும் | **அ) மொத்தத் தேவை உயரும்** |
| **8)** | குறைவான வட்டிவீதம்<br>அ) நுகர்வைக் குறைக்கும்<br>ஆ) கடனுக்கானச் செலவை உயர்த்தும்<br>இ) சேமிப்பை ஊக்குவிக்கும்<br>ஈ) கடனையும் செலவையும் அதிகரிக்கும் | **ஈ) கடனையும் செலவையும் அதிகரிக்கும்** |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **9)** | இறுதிநிலை நுகர்வு விருப்பு =<br>அ) மொத்தச்செலவு / மொத்த நுகர்வு<br>ஆ) மொத்த நுகர்வு / மொத்த வருவாய்<br>இ) நுகர்வு மாற்றம் / வருமான மாற்றம்<br>ஈ) மேற்காண் ஏதுமில்லை | **இ) நுகர்வு மாற்றம் / வருமான மாற்றம்** |
| **10)** | மொத்த வருமானத்துக்கும் மொத்த நுகர்வுச் செலவுக்கும் உள்ள தொடர்பு<br>அ) நுகர்வுச்சார்பு ஆ) சேமிப்புச்சார்பு<br>இ) முதலீட்டுச்சார்பு ஈ) மொத்தத்தேவைச்சார்பு | **அ) நுகர்வுச்சார்பு** |
| **11)** | MPC ஐயும் MPS ஐயும் கூட்டினால் கிடைப்பது<br>அ) 1 ஆ) 2 இ) 0.1 ஈ) 1.1 | **அ) 1** |
| **12)** | வருவாய் உயர்ந்தால், நுகர்வு<br>அ) குறையும் ஆ) மாறாது இ) ஏறி இறங்கும்<br>ஈ) உயரும் | **ஈ) உயரும்** |
| **13)** | முதலீடு தன்னிச்சையானதென அனுமானிக்கப்பட்டால், AD- யின் சாய்வை நிர்ணயிப்பது<br>அ) இறுதிநிலை முதலீட்டு நாட்டம்<br>ஆ) செலவிடக்கூடிய வருவாய்<br>இ) இறுதிநிலை நுகர்வு நாட்டம்<br>ஈ) சராசரி நுகர்வு நாட்டம் | **இ) இறுதிநிலை நுகர்வு நாட்டம்** |
| **14)** | ------------ இடம்பெயர்ந்த பின்னர் ------------ எவ்வளவு மாறுகிறது என்பதைப் பெருக்கி கூறுகிறது.<br>அ) வருமானம், நுகர்வு ஆ) உற்பத்தி, முதலீடு<br>இ) முதலீடு, சேமிப்பு ஈ) மொத்தத்தேவை, உற்பத்தி | **ஈ) மொத்தத்தேவை, உற்பத்தி** |
| **15)** | பெருக்கியின் மதிப்பு = அ) 1 / ( 1 – MPC )<br>ஆ) 1 / MPS இ) 1 / MPC ஈ) அ மற்றும் ஆ | **ஈ) அ மற்றும் ஆ** |
| **16)** | MPC = 0.5 எனில், பெருக்கியின் மதிப்பு<br>அ) 2 ஆ) 1 / 2 இ) 0.2 ஈ) 20 | **அ) 2** |
| **17)** | ஒரு திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தில் (Open Economy) இறக்குமதி, பெருக்கியின் மதிப்பை<br>அ) குறைக்கிறது ஆ) உயர்த்துகிறது<br>இ) மாற்றாது ஈ) மாற்றும் | **அ) குறைக்கிறது** |
| **18)** | கீன்சின் கருத்துப்படி, முதலீடு MEC ஐயும் ------------ சார்ந்தது. அ) தேவையையும் ஆ) அளிப்பையும்<br>இ) வருவாயையும் ஈ) வட்டிவீதத்தையும் | **ஈ) வட்டிவீதத்தையும்** |
| **19)** | மிகைப்பெருக்கி (Super Multiplier) என்ற கருத்தை முதன்முதலில் பயன்படுத்தியவர்<br>அ) J.R.ஹிக்ஸ் ஆ) R.G.D.ஆலன் இ) கான் ஈ) கீன்ஸ் | **அ) J.R.ஹிக்ஸ்** |
| **20)** | MEC என்ற கருத்துருவை அறிமுகப்படுத்தியவர் யார்?<br>அ) ஆடம் ஸ்மித் ஆ) J.M.கீன்ஸ்<br>இ) ரிகார்டோ ஈ) மால்தஸ் | **ஆ) J.M.கீன்ஸ்** |

www.Padasalai.Net

| இரண்டு மதிப்பெண் வினா -- விடை | |
|---|---|
| **21)** | **நுகர்வுச்சார்பு என்றால் என்ன?**<br>* வருமானத்திற்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பே நுகர்வுச்சார்பு.<br>**C = f (Y)** |
| **22)** | **நுகர்வு நாட்டம் என்றால் என்ன?**<br>* வருமானத்திற்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பே நுகர்வு நாட்டம்.<br>**C = f (Y)** |
| **23)** | **சராசரி நுகர்வு நாட்டம் (APC) வரையறு.**<br>* வருமானத்திற்கும் நுகர்வுக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டம்.<br>$\mathbf{APC = \frac{C}{Y}}$ |
| **24)** | **இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC) வரையறு.**<br>* வருமான மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கும் இடையேயான வீதமே இறுதிநிலை நுகர்வு நாட்டம்.<br>$\mathbf{MPC = \frac{\Delta C}{\Delta Y}}$ |
| **25)** | **சேமிப்பு நாட்டம் என்றால் என்ன?**<br>* வருவாய்க்கும் சேமிப்புக்கும் உள்ள தொடர்பே சேமிப்பு நாட்டம்.<br>**S = f (Y)** |
| **26)** | **சராசரி சேமிப்பு நாட்டம் (APS) வரையறு.**<br>* வருமானத்திற்கும் சேமிப்புக்குமான வீதமே சராசரி சேமிப்பு நாட்டம்.<br>$\mathbf{APS = \frac{S}{Y}}$ |
| **27)** | **இறுதிநிலை சேமிப்பு நாட்டம் (MPS) வரையறு.**<br>* வருமான மாற்றத்திற்கும் சேமிப்பு மாற்றத்திற்கும் இடையேயான வீதமே இறுதிநிலை சேமிப்பு நாட்டம்.<br>$\mathbf{MPS = \frac{\Delta S}{\Delta Y}}$ |
| **28)** | **பெருக்கி வரையறு.**<br>* வருமான மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதமே பெருக்கி எனப்படும்.<br>$\mathbf{K = \frac{\Delta Y}{\Delta I}}$ |
| **29)** | **முடுக்கி வரையறு.**<br>* தூண்டப்பெற்ற முதலீட்டு மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கும் உள்ள வீதமே முடுக்கி எனப்படும்.<br>$\boldsymbol{\beta = \frac{\Delta I}{\Delta C}}$ |

www.Padasalai.Net

## மூன்று மதிப்பெண் வினா -- விடை

**30)** **கீன்சின் நுகர்வு சார்ந்த உளவியல் விதியின் கருத்துகளைக் கூறுக.**

1. வருமானம் உயரும்போது, நுகர்வுச்செலவும் அதிகரிக்கும். ஆனால் குறைந்த அளவே அதிகரிக்கும்.
2. அதிகரித்த வருமானம் நுகர்வுச்செலவிற்கும், சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகின்றது.
3. அதிகரிக்கின்ற வருமானம் எப்போதும் நுகர்வையும் சேமிப்பையும் அதிகரிக்கச் செய்யும்.

**31)** **தன்னிச்சையான முதலீடு, தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.**

| வ. எண் | தன்னிச்சையான முதலீடு | தூண்டப்படுகிற முதலீடு |
|---|---|---|
| 1 | தன்னிச்சையானது | திட்டமிடப்பட்டது |
| 2 | வருவாயைப்பொருத்து நெகிழாதது | வருவாயைப்பொருத்து நெகிழ்வது |
| 3 | நல நோக்கமுடையது | இலாப நோக்கமுடையது |

**32)** **நுகர்வுச்சார்பைப் பாதிக்கிற ஏதேனும் மூன்று அக, புறக்காரணிகளை விளக்குக.**

**அகக்காரணிகள்**

1. **முன்னெச்சரிக்கை நோக்கம்**
   எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காகக் கையில் ரொக்கமாக வைத்திருப்பது.
   எ.கா -- விபத்து, உடல்நலமின்மை
2. **எதிர்பார்க்கும் நோக்கம்**
   எதிர்காலத் தேவைக்கான விருப்பம். எ.கா -- வயதான காலம்
3. **முன்னேறும் நோக்கம்**
   வாழ்க்கைத்தரத்தை முன்னேற்ற விரும்புதல் சார்ந்த விருப்பம்.

**புறக்காரணிகள்**

1. **வருமானப் பகிர்வு**
   செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் நுகர்வு குறையும்.
2. **விலை அளவு**
   விலை வீழ்ச்சியடையும்போது உண்மை வருமானம் அதிகரிக்கும். அதனால் சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்.
3. **கூலி அளவு**
   கூலி அதிகரிக்கும்போது நுகர்வுச்செலவும் அதிகரிக்கும்.

**33)** **முடுக்கிக்கும் பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.**

| வ.எண் | முடுக்கி | பெருக்கி |
|---|---|---|
| 1 | வழங்கியவர் J.M.கிளார்க் | வழங்கியவர் F.A.கான் |
| 2 | தூண்டப்பெற்ற முதலீட்டு மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கும் உள்ள வீதமே முடுக்கி எனப்படும். | வருமான மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதமே பெருக்கி எனப்படும். |
| 3 | $\beta = \Delta I / \Delta C$ | $K = \Delta Y / \Delta I$ |

www.Padasalai.Net

| | |
|---|---|
| **34)** | **மிகைப் பெருக்கி விளக்குக.**<br>* உருவாக்கியவர் J.R.ஹிக்ஸ்.<br>* பெருக்கி மற்றும் முடுக்கியை இணைத்து உருவாக்கப்பட்டது.<br>* பெருக்கி மற்றும் முடுக்கியின் தாக்கம் இணைந்து செயல்படுவதால் **நெம்புகோல் இயக்க விளைவு** எனப்படும்.<br>* தன்னிச்சை முதலீடு ( $I_A$ ) மற்றும் தூண்டப்பட்ட தனியார் முதலீடு ( $I_P$ ) ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும்.<br>$Y = C + I_A + I_P$ |
| **35)** | **பெருக்கிக் கருத்தின் குறைபாடுகளைக் ( கசிவுகள் ) குறிப்பிடுக.**<br>**1. பழைய கடன்களைத் திரும்பச் செலுத்துதல்**<br>பழைய கடன்களைத் திரும்பச் செலுத்துவதற்காக அதிகரித்த வருமானம் பயன்படுமானால் MPC குறைந்து, பெருக்கியின் மதிப்பு தடைபடும்.<br>**2. செல்வத்தை வாங்குதல்**<br>அதிகரித்த வருமானம் நிலம், கட்டடம், பங்குகள் முதலியவற்றை வாங்குவதற்காகப் பயன்படுத்தினால் பெருக்கியின் மதிப்பு பாதிக்கும்.<br>**3. பண்டங்களையும் பணிகளையும் இறக்குமதி செய்தல்**<br>பண்டங்களையும் பணிகயையும் இறக்குமதி செய்தால் பணம் நாட்டைவிட்டு வெளியேறும். ஆதலால் இறக்குமதி பெருக்கியின் மதிப்பைக் குறைக்கும். |
| **35 A)** | **பெருக்கியின் பயன்களைக் கூறுக.**<br>1. வருமானம் மற்றும் வேலைவாய்ப்புக் கோட்பாட்டில் முதலீட்டின் முக்கியத்துவத்தைப் பெருக்கி சுட்டிக்காட்டுகிறது.<br>2. வணிகச் சுழற்சியின் பல்வேறு நிலைகளுக்கான காரணங்களை விளக்குகிறது.<br>3. சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் இடையே சமநிலை ஏற்பட உதவுகிறது.<br>4. அரசின் கொள்கைகளை வகுக்க உதவிபுரிகிறது.<br>5. வேலையில்லாநிலையைப் போக்கவும், முழுவேலைவாய்ப்புநிலையை அடையவும் உதவுகிறது.<br>**( ஏதேனும் மூன்று பயன்கள் மட்டும் )** |
| **35 B)** | **பெருக்கியின் வகைகள் யாவை?**<br>**1. இயங்காப் பெருக்கி**<br>* உடன்நிகழ் பெருக்கி, காலமில்லாப் பெருக்கி, தர்க்கரீதிப் பெருக்கி எனவும் அழைக்கப்படுகிறது.<br>* முதலீடு மாற்றமும் வருமான மாற்றமும் உடன் நிகழ்வதால் காலதாமதம் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை.<br>* பொருளாதாரம் ஒருசமநிலையிலிருந்து மறுசமநிலை வருமானத்திற்குப் போகும்போது **MPC** மாறாது.<br>**2. இயங்கும் பெருக்கி**<br>* தொடர்நிகழ் பெருக்கி எனவும் அழைக்கப்படுகிறது.<br>* உண்மையில் முதலீடு செய்தவுடனே வருவாய் கூடிவிடுவதில்லை. காலதாமதம் ஆகலாம்.<br>* வருமானம் கூடுவதற்கும் நுகர்வு கூடுவதற்கும் இடையிலான கால இடைவெளியைக் கருத்தில்கொள்கிறது. |

www.Padasalai.Net

**ஐந்து மதிப்பெண் வினா -- விடை**

**36)** **கீன்சின் நுகர்வுச்சார்பின் உளவியல் விதியினை வரைபடம்மூலம் விளக்குக.**

**கீன்சின் உளவியல் விதி**

* வருவாய் உயரும்போது நுகர்வு அதிகரிக்கும். ஆனால் வருவாய் உயர்ந்த அளவுக்கு நுகர்வு அதிகரிக்காது.

**அனுமானங்கள்**

1. மற்றவை மாறாதது. 2. சூமூகமான சூழல் நிலவுகிறது.
3. முதலாளித்துவத்தில் தலையிடாக்கொள்கை கடைபிடிக்கப்படுகிறது.

**கருத்துகள்**

1. வருமானம் உயரும்போது, நுகர்வுச்செலவும் அதிகரிக்கும். ஆனால் குறைந்த அளவே அதிகரிக்கும்.
2. அதிகரித்த வருமானம் நுகர்வுச்செலவிற்கும், சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகின்றது.
3. அதிகரிக்கின்ற வருமானம் எப்போதும் நுகர்வையும் சேமிப்பையும் அதிகரிக்கச் செய்யும்.

**விதியின் மூன்று கருத்துரைகள்.**

| வருமானம் Y | நுகர்வு C | சேமிப்பு S = Y – C |
|---|---|---|
| 120 | 120 | 0 |
| 180 | 170 | 10 |
| 240 | 220 | 20 |

**கருத்துரை - 1**


* வருமானம் ₹120-லிருந்து ₹180 கோடிகளாக அதிகரிக்கும்போது வருமானம் ₹60 கோடிகளாகவும், நுகர்வு ₹50 கோடிகளாகவும் அதிகரிக்கிறது.

**கருத்துரை - 2**

* வருமானம் ₹180-லிருந்து ₹240 கோடிகளாக அதிகரிக்கும்போது , அதிகரித்த ₹60 கோடி வருமானம் ₹50 கோடி நுகர்வாகவும் ₹10 கோடி சேமிப்பாகவும் பிரிகிறது.

**கருத்துரை - 3**


* வருமானம் ₹180-லிருந்து ₹240 கோடிகளாக அதிகரிக்கும்போது நுகர்வும் சேமிப்பும் அதிகரிக்கிறதே தவிர குறையவில்லை.




www.Padasalai.Net

| | |
|---|---|
| 36) | **வரைபட விளக்கம்**<br>**கருத்துரை - 1**<br>* வருமானம் ₹180-லிருந்து ₹240 கோடிகளாக அதிகரிக்கும்போது நுகர்வும் ₹120-லிருந்து ₹170 கோடிகளாக அதிகரித்து ₹10 கோடி சேமிக்கப்படுகிறது.<br>**கருத்துரை - 2**<br>* வருமானம் ₹180-லிருந்து ₹240 கோடிகளாக அதிகரிக்கும்போது, நுகர்வு ₹170-லிருந்து ₹220 கோடிகளாகவும், சேமிப்பு ₹10-லிருந்து ₹20 கோடிகளாகவும் பிரிகிறது.<br>**கருத்துரை - 3**<br>* வருமானம் ₹180-லிருந்து ₹240 கோடிகளாக அதிகரிக்கும்போது, நுகர்வை ₹170-லிருந்து ₹220 கோடிகளாகவும், சேமிப்பை ₹10-லிருந்து ₹20 கோடிகளாகவும் அதிகரிக்கச்செய்கிறது.<br>* C கோட்டிற்கும் 45° கோட்டிற்கும் இடையே உள்ள அகன்ற பகுதி சேமிப்பைக் காட்டுகிறது |
| 37) | **நுகர்வுச்சார்பின் அக மற்றும் புறக்காரணிகளை விளக்குக.**<br>**அகக்காரணிகள்**<br>**1. முன்னெச்சரிக்கை நோக்கம்**<br>எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காகக் கையில் ரொக்கமாக வைத்திருப்பது.<br>எ.கா -- விபத்து, உடல்நலமின்மை<br>**2. எதிர்பார்க்கும் நோக்கம்**<br>எதிர்காலத் தேவைக்கான விருப்பம். எ.கா -- வயதான காலம்<br>**3. கணிக்கும் நோக்கம்**<br>விருப்பம் மற்றும் பாராட்டை அனுபவிப்பதற்கான விருப்பம்.<br>**4. முன்னேறும் நோக்கம்**<br>வாழ்க்கைத்தரத்தை முன்னேற்ற விரும்புதல் சார்ந்த விருப்பம்.<br>**5. வாணிப நோக்கம்**<br>வியாபாரத்தை முன்னேற்றுவதற்கான விருப்பம்.<br>**புறக்காரணிகள்**<br>**1. வருமானப் பகிர்வு**<br>செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் நுகர்வு குறையும்.<br>**2. விலை அளவு**<br>விலை வீழ்ச்சியடையும்போது மக்கள் அதிகமான நுகர்வர். அதனால் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்.<br>**3. கூலி அளவு**<br>கூலி அதிகரிக்கும்போது நுகர்வுச்செலவும் அதிகரிக்கும்.<br>**4. வட்டி விகிதம்**<br>அதிக வட்டிவிகிதம் பணத்தைச் சேமிக்க ஊக்கமளிக்கும். ஆகவே நுகர்வைக் குறைக்கும்.<br>**5. நிதிக்கொள்கை**<br>அரசு வரியைக் குறைக்கும்போது செலவிடத்தக்க வருமானம் அதிகரித்து நுகர்வு அதிகரிக்கும். |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 38) | **பெருக்கி இயங்கும்விதத்தினை விவரி.**<br>**பெருக்கி :** வருமான மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதமே பெருக்கி எனப்படும். $\mathbf{K = \Delta Y / \Delta I}$<br>* பெருக்கியின் மதிப்பு MPC-யைப் பொருத்து அமையும்.<br>$\mathbf{K = 1 / 1 - MPC}$ அல்லது $\mathbf{K = 1 / MPS}$<br>**பெருக்கி இயங்கும்விதம்**<br>* அரசு ₹100 கோடி பொதுப்பணிக்காகச் செலவிடுகிறதெனில் அந்த ₹100 கோடி உழைப்பாளர்களுக்கு வருமானம்.<br>* MPC = 0.8 எனில், ₹80 கோடி நுகர்வுக்கும் ₹20 கோடி சேமிக்கவும் செய்வர்.<br>* நுகர்வுச்செலவு சங்கிலித்தொடர்போல சென்றுகொண்டே இருக்கும்.<br>* உதாரணமாக, C = 100 + 0.8Y எனில் முதலீடு ₹100 கோடி அதிகரிக்கப்பட்டால் வருமான மாற்றம் ₹1000 கோடியாக இருக்கும்.<br>* முதலீடு ₹110 கோடி அதிகரிக்கப்பட்டால் வருமான மாற்றம் ₹1050 கோடி<br>* ஆகவே முதலீடு ₹10 அதிகரித்தால் வருமானம் ₹50 அதிகரிக்கும். இது பெருக்கியின் விளைவாகும்.<br><br> |
| | $C = 100 + 0.8Y,\ I = 100$ எனில்<br>$Y = C + I$<br>$Y = 100 + 0.8Y + 100$<br>$1Y - 0.8Y = 100 + 100$<br>$0.2Y = 200$<br>$\mathbf{Y} = \frac{200}{0.2} = 1000 \rightarrow$ புள்ளி B |
| | $I = 110$ எனில்<br>$Y = C + I$<br>$Y = 100 + 0.8Y + 110$<br>$1Y - 0.8Y = 100 + 110$<br>$0.2Y = 210$<br>$\mathbf{Y} = \frac{210}{0.2} = 1050 \rightarrow$ புள்ளி D |
| | 1) புள்ளி **A** இல் $Y = C = 500$, $C = 100 + 0.8Y = 100 + 0.8(500)$<br>$C = 100 + 400 = 500,\ S = 0 = I$<br>2) புள்ளி **B** இல் $Y = 1000$, $Y = 100 + 0.8(1000) = 900,\ I = 100$<br>3) புள்ளி **D** இல் $Y = 1050$, $Y = 100 + 0.8(1050) = 940,\ I = 110$<br>**I** இன் மதிப்பு ₹10 அதிகரிக்கும்போது **Y** இன் மதிப்பு ₹50 அதிகரிக்கும். இதுவே பெருக்கியின் விளைவாகும்.<br>$\mathbf{K} = \frac{1}{0.2} = 50$ |

www.Padasalai.Net

39)

**முடுக்கி இயங்கும்விதத்தினை விவரி.**

**முடுக்கி :**


தூண்டப்படுகின்ற முதலீட்டு மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கும் உள்ள வீதமே முடுக்கி எனப்படும்.

$$\text{முடுக்கி } (\beta) = \frac{\Delta I}{\Delta C}$$

**முடுக்கி இயங்கும்விதம்**

* 1000 நுகர்வுப் பொருள்களைத் தயாரிப்பதற்கு 100 இயந்திரங்கள் தேவை.
* இயந்திரங்களின் வாழ்நாள் 10 வருடங்கள். ஒவ்வொரு வருடமும் 10 இயந்திரங்களை மாற்றியமைக்கப்படுகிறது.
* நுகர்வுப்பொருள்களின் தேவை 10% அதிகரித்தால் 100 இயந்திரங்களின் தேவை அதிகரிக்கும். எனவே மொத்த இயந்திரங்களின் தேவை 20 ஆகும்.
* சிறிய நுகர்வு மாற்றம் அதிகப்படியான முதலீட்டு மாற்றத்திற்கு வழிவகுக்கும்.

**வரைபடம்**




**வரைபட விளக்கம்**

* SS என்பது சேமிப்புக்கோடு, II என்பது முதலீட்டுக்கோடு.
* $E_1$ புள்ளியில் பொருளாதாரம் $OY_1$ வருமானத்துடன் சமநிலையில் உள்ளது.
* சேமிப்பும் முதலீடும் $OY_2$ -இல் சமநிலையில் உள்ளது.
* முதலீடு $OI_2$ -இலிருந்து $OI_4$ ஆகஅதிகரிக்கும்போது வருமானம் $OY_1$ இலிருந்து $OY_2$ -ஆக அதிகரிக்கிறது.
* $E_3$ - புள்ளியில் முதலீடு $I_2 I_4$ ஆக வெளிப்புறக்காரணியில் அதிகரிக்கும்போது வருமானமும் $Y_1 Y_3$ ஆக முடுக்கியின் விளைவாக அதிகரிக்கிறது.
* வெளிப்புற முதலீடு $I_2I_3$ , தூண்டப்பட்ட முதலீடு $I_3I_4$ ஆகவும் இருக்கிறது.
* அதிகரித்த வருமானம் $Y_1Y_2$ -ஆனது பெருக்கியின் விளைவாலும் அதிகரித்த வருமானம் $Y_2Y_3$-ஆனது முடுக்கியின் விளைவாலும் ஏற்படுகிறது.

www.Padasalai.Net

<table>
<tr><td rowspan="7">40)</td><td colspan="3">மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித்திறனுக்கும் ( MEC ) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித்திறனுக்கும் ( MEI ) உள்ள வேறுபாடுகள் யாவை?</td></tr>
<tr><td>வ.எண்.</td><td>மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித்திறன் ( MEC )</td><td>முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித்திறன் ( MEI )</td></tr>
<tr><td>1</td><td>மூலதனத்தின் அளிப்புவிலையைப் பொருத்து அமைகிறது.</td><td>மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், விலையைத் தூண்டும் மாற்றத்தைப் பொருத்து அமைகிறது.</td></tr>
<tr><td>2</td><td>ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தைக் கணக்கில் கொள்ளாமல் ஒவ்வொரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவைக் குறிக்கிறது.</td><td>ஆரம்ப மூலதனத்திற்குப் பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தைக் காட்டுகிறது.</td></tr>
<tr><td>3</td><td>வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது.</td><td>வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீட்டு அளவு அளக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>4</td><td>இருப்புக் ( STOCK ) கருத்துரு.</td><td>தடைபடா ஓட்டக் ( FLOW ) கருத்துரு.</td></tr>
<tr><td>5</td><td>ஒவ்வொரு வட்டிவீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை நிர்ணயிக்கிறது</td><td>ஒவ்வொரு வட்டிவீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது</td></tr>
</table>

www.Padasalai.Net

| K.J.கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி-- இராமநாதபுரம் மாவட்டம் | | |
|---|---|---|
| பன்னிரண்டாம் வகுப்பு -- பொருளியல் | | |
| இயல் -- 5 பணவியல் பொருளியல் | | |
| சரியான விடையைத் தெரிவு செய்க | | |
| 1) | இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமையகம் அமைந்துள்ள இடம் அ) டில்லி ஆ) சென்னை இ) மும்பை ஈ) பெங்களூரு | இ) மும்பை |
| 2) | பணம் என்பது<br>அ) உள்ளடக்க மதிப்பு இருந்தால் ஏற்றுக் கொள்ளப்படுவது<br>ஆ) நிலையான வாங்கும் சக்தியைக் கொண்டது<br>இ) அதிக நீர்மைத்தன்மை கொண்ட சொத்து ஆகும்<br>ஈ) வளங்களைப் பங்கிட்டுக்கொள்ள தேவைப்படுகிறது | இ) அதிக நீர்மைத்தன்மை கொண்ட சொத்து ஆகும் |
| 3) | காகிதப் பணமுறையை மேலாண்மை செய்வது<br>அ) மைய பணவியல் அமைப்பு ஆ) மாநில அரசு<br>இ) மைய அரசு ஈ) வங்கிகள் | அ) மைய பணவியல் அமைப்பு |
| 4) | M1 மற்றும் M2 ஆகிய இரண்டிற்கும் உள்ள வேறுபாடு<br>அ) அஞ்சலக அனைத்து வைப்புகள்<br>ஆ) அஞ்சலகச் சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள்<br>இ) வங்கியின் காலவைப்புகள்<br>ஈ) காகிதப்பணம் | ஆ) அஞ்சலகச் சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள் |
| 5) | இர்விங் பிஷரின் பணஅளவுக் கோட்பாடு புகழ்பெற்ற ஆண்டு<br>அ) 1908 ஆ) 1910 இ) 1911 ஈ) 1914 | **இ) 1911** |
| 6) | MV என்பது<br>அ) பணத்தேவை ஆ) சட்டப்படியான பணஅளிப்பு<br>இ) வங்கிப் பணஅளிப்பு ஈ) மொத்தப் பணஅளிப்பு | ஆ) சட்டப்படியான பணஅளிப்பு |
| 7) | பணவீக்கம் என்பது<br>அ) விலைகள் அதிகரிப்பு ஆ) விலைகள் குறைதல்<br>இ) பணமதிப்பு அதிகரிப்பு ஈ) விலைகள் மாறாதிருத்தல் | அ) விலைகள் அதிகரிப்பு |
| 8) | ---------------- பணவீக்கம் பணமதிப்பில் தீவிர மதிப்புக் குறைவினை ஏற்படுத்துகிறது<br>அ) தவழும் ஆ) நடக்கும் இ) ஓடும் ஈ) உயர் | ஈ) உயர் |
| 9) | கூலியும் மூலப்பொருள்கள் செலவும் கூடுவதால் பண்டங்களின் பொது விலைமட்டம் அதிகரிப்பது<br>--------------- பணவீக்கம் ஆகும் அ) செலவு உந்து<br>ஆ) தேவை இழுப்பு இ) ஓடும் ஈ) தாவும் | அ) செலவு உந்து |
| 10) | பணவீக்கத்தின்பொழுது பயனடைபவர்கள் யார்?<br>அ) கடன் பெற்றோர்கள் ஆ) கடன் வழங்கியோர்<br>இ) கூலி, சம்பளம் ஆகியன பெறுவோர் ஈ) அரசு | அ) கடன் பெற்றோர்கள் |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **11)** | ---------------- என்பது பணவீக்க விகிதம் குறைந்து செல்வது ஆகும்<br>அ) எதிர் பணவீக்கம் ஆ) பணவாட்டம்<br>இ) தேக்கவீக்கம் ஈ) மந்தம் | **அ) எதிர் பணவீக்கம்** |
| **12)** | தேக்கவீக்கத்தில் பணவீக்க விகிதத்துடன் இணைந்திருப்பது அ) தேக்கம்<br>ஆ) வேலைவாய்ப்பு இ) உற்பத்தி ஈ) விலை | **அ) தேக்கம்** |
| **13)** | பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை ---------------- அழைக்கின்றோம்<br>அ) பூரிப்பு ஆ) பின்னிறக்கம்<br>இ) மீட்சி ஈ) வணிகச்சுழற்சி | **ஈ) வணிகச்சுழற்சி** |
| **14)** | மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும்<br>அ) உயர்ந்தபட்சமாக ஆ) மிக மோசமாக<br>இ) மிகக் குறைந்தபட்சமாக ஈ) மிக நல்லநிலையில் | **இ) மிகக் குறைந்தபட்சமாக** |
| **15)** | பரிமாற்றங்களில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஓர் இடையீட்டுக்கருவியாகவும், அளவீடு, மதிப்பினை இருப்புவைத்தல் ஆகியவற்றினைச் செய்யும் ஒருபொருள் பணம் என்ற இலக்கணத்தை வழங்கியவர்<br>அ) கிரௌதர் இ) வாக்கர்<br>ஆ) பிகு ஈ) பிரான்சிஸ்டி பேக்கான் | **அ) கிரௌதர்** |
| **16)** | பற்று அட்டை என்பது ----------- எடுத்துக்காட்டு ஆகும்<br>அ) கட்டளைப்பண ஆ) காகிதப்பண<br>இ) நெகிழிப்பண ஈ) கடன்பண | **இ) நெகிழிப்பண** |
| **17)** | பிஷரின் பணஅளவுக் கோட்பாடு, பணத்தின் இந்தப்பணியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது<br>அ) மதிப்பளவு ஆ) மதிப்பின் நிலைகலன்<br>இ) பரிமாற்றக் கருவி<br>ஈ) வருங்காலச் செலுத்துதல்களுக்கான அடிப்படை | **இ) பரிமாற்றக் கருவி** |
| **18)** | $MV = PT$ என்ற சமன்பாட்டில், V என்பது<br>அ) வணிகத்தின் அளவு ஆ) பணத்தின் சுழற்சி வேகம்<br>இ)ரொக்கப்பணத்தின் அளவு ஈ)வங்கி,கடன்பண அளவு | **ஆ) பணத்தின் சுழற்சி வேகம்** |
| **19)** | விலைவாசி மெதுவாக உயரும்பொழுது ஏற்படுவது<br>அ) தாவும் பணவீக்கம் ஆ) மிதமான பணவீக்கம்<br>இ) உயர் பணவீக்கம் ஈ) பணவாட்டம் | **ஆ) மிதமான பணவீக்கம்** |
| **20)** | ---------------- பணவீக்கம் பொருளாதாரத்தினை எந்த வகையிலும் பாதிக்காது<br>அ) நடக்கும் ஆ) ஓடும் இ) தவழும் ஈ) தாவும் | **இ) தவழும்** |

www.Padasalai.Net

| | |
|---|---|
| **இரண்டு மதிப்பெண் வினா -- விடை** | |
| **21)** | **பணத்தின் இலக்கணம் வரைக.**<br>* பணம் எதைச் செய்கிறதோ, அதுவே பணம் என்கிறார் **வாக்கர்.** |
| **22)** | **பண்டமாற்று என்றால் என்ன?**<br>* பிறரிடம் உள்ள தங்களுக்குத் தேவையான பண்டங்களை அல்லது பணிகளைப் பெறுவதற்காக, தங்களிடம் உள்ள பண்டங்களை அல்லது பணிகளை மாற்றாக வழங்குவது. |
| **23)** | **பண்டப்பணம் என்றால் என்ன?**<br>* ஒருபண்டத்தைப் பணமாகப் பயன்படுத்தப்படுவது பண்டப்பணம்.<br>எ.கா - விலங்கின் தோல், உப்பு, அரிசி, கோதுமை, உரோமம், பாத்திரங்கள் |
| **24)** | **பொன்திட்டம் என்றால் என்ன?**<br>* ஒருபணத்தின் அலகு குறிப்பிட்ட எடையிலான பொன் அளவினால் வரையறுக்கப்பட்டிருப்பது. |
| **25)** | **நெகிழிப்பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.**<br>* காகிதப்பணத்திற்கு மாற்றாகத் தினந்தோறும் பயன்படுத்தும் வகையில் நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்டிருக்கும்.<br>* உதாரணம் -ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை, சூட்டிகை அட்டை |
| **26)** | **பணவீக்கம் என்பதன் இலக்கணம் தருக.**<br>* குறைந்தளவுப் பண்டங்களை அதிகளவுப் பணம் துரத்தும் நிலை<br>**- கோல்பர்ன்.** |
| **27)** | **தேக்கவீக்கம் என்றால் என்ன?**<br>* பொருளாதார வளர்ச்சியில் தேக்கநிலையும், வேலைவாய்ப்பின்மையும், அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை ஆகும். |
| **மூன்று மதிப்பெண் வினா -- விடை** | |
| **28)** | **உலோகப்பணம் பற்றி ஒரு குறிப்பு வரைக.**<br>* பண்டமாற்றுமுறை, பண்டப் பணமுறைக்குப்பின் தோன்றிய முதன்மைத்திட்டம்.<br>* தங்கம், வெள்ளி போன்ற உலோகம் பணத்தின் மதிப்பினை நிர்ணயிக்கப் பயன்படுத்தப்பட்டது.<br>* உலோக நாணயங்கள் பணமாக உருவாக்கப்பட்டன.<br>* முழு மதிப்பு அல்லது முழு நிறையுடைய சட்டமுறைப் பணமாக இருந்துவந்தன.<br>* முகமதிப்பு மற்றும் உள்ளடக்க மதிப்பு ஆகிய இரண்டும் சமமாக இருந்தன. |
| **29)** | **பண அளிப்பு என்றால் என்ன?**<br>* ஒருபொருாதாரத்தில் உள்ள மொத்தப் பணஅளவு.<br>* ஒருகுறிப்பிட்ட நேரத்தில் ஒருநாட்டில் புழக்கத்தில் உள்ள பண அளவு.<br>* வட்டி விகிதம், விலைவாசி ஆகியவற்றை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்காற்றுகிறது.<br>* குறிப்பிட்ட காலத்தில் இருப்புக் கருத்தாகவும், குறிப்பிட்ட கால இடைவெளியில் தடைபடா ஓட்டக் கருத்தாகவும் உள்ளது. |



www.Padasalai.Net

| | |
|---|---|
| 30) | **பண அளிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?**<br>1. ரொக்க வைப்பு விகிதம்<br>2. ரொக்க இருப்பு வைப்பு விகிதம்<br>3. ரொக்க இருப்பு விகிதம்<br>4. சட்டப்படியான நீர்மை விகிதம் |
| 31) | **பணவீக்கத்தின் வகைகள் பற்றி எழுதுக.**<br>1. **தவழும் பணவீக்கம் (அ) மிதமான பணவீக்கம்**<br>* மிகக்குறைவான (1 முதல் 2 % ) விகிதத்தில் இருப்பது.<br>* விலைவாசி உயர்வை எளிதில் உணரமுடியாத நிலை.<br>2. **நடக்கும் பணவீக்கம் (அ) நகரும் பணவீக்கம்**<br>* மிதமான வேகத்தில் ( 3 முதல் 9 % ) இருப்பது.<br>3. **ஓடும் பணவீக்கம்**<br>* 10 முதல் 20 விழுக்காட்டிற்குள் இருப்பது.<br>* வேகமான விலைவாசி அதிகரிப்பை ஓட்டத்துடன் உவமைப்படுத்திச் சொல்வதால் ஓடும் பணவீக்கம் என்று அழைக்கப்படுகிறது.<br>4. **தாவும் பணவீக்கம் (அ) உயர் பணவீக்கம்**<br>* சமாளிக்கமுடியாத அளவிற்கு பணவீக்கம் இருப்பது.<br>* 20 முதல் 100 விழுக்காட்டிற்குள் இருப்பது.<br>* உண்மையான பணவீக்கம் என்று கீன்சு குறிப்பிடுகிறார். |
| 32) | **தேவை - இழுப்பு பணவீக்கம், செலவு - உந்து பணவீக்கத்தைப் பற்றி விளக்குக.**<br>**தேவை - இழுப்புப் பணவீக்கம்**<br>* பணவீக்கத்தைத் தீர்மானிப்பதில் தேவை மற்றும் அளிப்பு முக்கியப் பங்காற்றுகிறது.<br>* அளிப்பு நிலையாக உள்ள நிலையில், பண்டங்களுக்கான தேவை அதிகரிக்கும்போது விலைவாசி உயருவது தேவை - இழுப்புப் பணவீக்கம்.<br>**செலவு - உந்துப் பணவீக்கம்**<br>* உற்பத்தியில் மூலப்பொருள்கள், இடுபொருள்கள் செலவு அதிகரிப்பதால் உற்பத்திச்செலவு கூடிப் பண்டங்களுக்கான விலை அதிகரிப்பதால் ஏற்படும் பணவீக்கம் செலவு - உந்துப் பணவீக்கம் ஆகும். |
| 33) | **பண மதிப்பு பற்றிய கேம்பிரிட்ஜ் சமன்பாடுகளை விளக்குக.** |
| | **மார்ஷலின் சமன்பாடு** |
| | **M = KPY** **M** = பணத்தின் அளவு<br>**K** = மக்கள் தங்கள் கையில் வைத்திருக்க விரும்பும் வருமானத்தின் ஒருபகுதி<br>**P** = பொது விலைமட்டம் **Y** = சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானம்<br>**P = M/ KY** என மாற்றியமைத்து பொதுவிலைமட்டம் காணப்படுகிறது.<br>**1/P = KY/M** என மாற்றியமைத்து பணமதிப்பினைக் கண்டறியலாம்.<br>பணமதிப்பினைத் தீர்மானிப்பதில் **K** என்ற கெழு முக்கியப்பங்காற்றுகிறது. |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 33) | **கீன்ஸின் சமன்பாடு** |
| | $n = pk$ (or) $p = n/k$<br>$n$ = மொத்த பண அளிப்பு  $p$ = நுகர்ச்சிப் பண்டங்களின் விலைமட்டம்<br>$k$ = மக்கள் தங்கள் கையில் வைத்திருக்க விரும்பும் வருமானத்தின் ஒருபகுதி ( நுகர்ச்சிப் பண்டங்களின் அலகுகளில் )<br>* மக்களின் ரொக்கக்கையிருப்பு நுகர்ச்சிப் பொருள்களின் அளவுகளில் கணக்கிடுவதால் $k$ உண்மை இருப்பாகும்.<br>* பண அளவை ($n$) நெறிப்படுத்துவதால் விலைவாசியைக் கட்டுப்படுத்திப் பணத்தின் மதிப்பை நிலைப்படுத்தலாம்.<br>$p = n/(k + rk^1)$<br>* $r$ = வங்கிகளின் ரொக்க இருப்பு விகிதம்<br>$k^1$ = வங்கி வைப்புகளாகச் சமுதாயம் வைத்திருக்கும் பணத்தின் அளவு<br>* $k, k^1, r$ ஆகியவை மாறாதிருக்கும்போது , பணத்தின் அளவை ($n$) மாற்றும்பொழுது, விலைமட்டம் ($p$) நேரடியாகவும் சமவிகிதத்திலும் மாறும். |
| 34) | **மீள்பணவீக்கம் பற்றி விளக்குக.**<br>* வேலைவாய்ப்பினைப் பாதிக்காத வகையில் கடன்களைக் கட்டுப்படுத்துவதன்மூலம் பணவீக்கம் குறைவது மீள்பணவீக்கம் ஆகும்.<br>**வரையறை**<br>*வேலைவாய்ப்பின்மையை ஏற்படுத்தாமலும், உற்பத்தி அளவுகள் குறையாமலும் பணவீக்கத்தைத் திருப்பும் செயல்முறையே மீள்பணவீக்கம் ஆகும். |
| **ஐந்து மதிப்பெண் வினா -- விடை** | |
| 35) | **இர்விங் பிஷரின் பணஅளவுக் கோட்பாட்டினை விளக்குக.**<br>**பணஅளவுக் கோட்பாடு**<br>* பணத்தின் அளவிற்கும், பணத்தின் மதிப்பிற்கும் இடையேயான தொடர்பினை எடுத்துரைப்பது பணஅளவுக் கோட்பாடு ஆகும்.<br>* தனது கோட்பாட்டினை **பரிமாற்றத்துக்கான சமன்பாடு** என்ற கணிதச் சமன்பாட்டின் வாயிலாக **இர்விங் பிஷர்** வழங்கியுள்ளார்.<br>**சமன்பாடு**<br>$MV = PT$<br>$M$ = மொத்த காகிதப் பணஅளவு  $V$ = பணத்தின் சுழற்சி வேகம்<br>$P$ = பொதுவிலைமட்டம்  $T$ = வணிபகத்தின் அளவு<br>* ஒருநாட்டில் குறிப்பிட்ட காலஅளவில் மொத்தப் பணஅளிப்பு ( $MV$ ) என்பது பணத்தேவைக்குச் ( $PT$ ) சமமாக இருக்கும் என்று குறிப்பிடுகிறார்.<br>* $PT = MV$,  $P = MV / T$<br>V-யும், T-யும் மாறாது நிலையாக இருக்கும் சூழ்நிலையில் பணத்தின் அளவு எவ்வகையில் பொதுவிலைமட்டத்தையும் பணத்தின் மதிப்பையும் நிர்ணயிக்கிறது என்பதை விளக்குகிறது.<br>**நவீன சமன்பாடு**<br>* புதிய வணிகப் பொருளாதாரத்தில் காகிதப்பணத்துடன் வங்கிப்பணத்தையும் சேர்த்து தனது சமன்பாட்டினை விரிவாக்கினார்<br>$PT = MV + M^1V^1$<br>$P = MV + M^1V^1 / T$<br>$M^1$ = வங்கிக் கடன்பணஅளவு  $V^1$ = வங்கிக் கடன்பணச் சுழற்சி வேகம் |

www.Padasalai.Net

<table>
<tr>
<td rowspan="2">35)</td>
<td>
</td>
<td>வரைபடம் (A) விளக்கம்<br>* பணஅளவு OM ஆக இருக்கும்போது விலைமட்டம் OP ஆக உள்ளது.<br>* பண அளவினை $OM_2$ என இரட்டிப்பு ஆக்கும்பொழுது விலைமட்டமும் $OP_2$ என இரட்டிப்பாகும்.<br>* பண அளவினை $OM_4$ என நான்கு மடங்காகும்பொழுது விலைமட்டமும் $OP_4$ என நான்கு மடங்காகிறது.<br>* விலைமட்டச்சார்பு OP = f(M) என்பது பணத்தின் அளவிற்கும் விலைமட்டத்திற்கும் உள்ள நேரடி சமவிகித உறவு விளங்குகிறது.</td>
</tr>
<tr>
<td>
</td>
<td>வரைபடம் (B) விளக்கம்<br>* பண அளவு OMஆக இருக்கும்பொழுது பணமதிப்பு $OP_1$ ஆக உள்ளது.<br>* பண அளவினை $OM_2$ என இரண்டு மடங்காக்கும் பொழுது பணமதிப்பு $OP_2$ என பாதியாகக் குறைகிறது.<br>* பண அளவினை $OM_4$ என நான்கு மடங்காகும்பொழுது பணமதிப்பு $OP_4$ என நான்கில் ஒருபகுதியாகக் குறைகிறது.<br>* பணமதிப்புச்சார்பு OP = f(M) என்பது பணத்தின் அளவிற்கும் பணத்தின் மதிப்பிற்கும் உள்ள எதிர்மறையான, சமவிகித தொடர்பினை விளக்குகிறது.</td>
</tr>
</table>

www.Padasalai.Net

| | |
|---|---|
| 36) | பணத்தின் பணிகளை விளக்குக.<br>முதன்மைப் பணிகள்<br>1. பரிமாற்றக் கருவி<br>* பணம் பொது ஏற்புத்தன்மை கொண்டது.<br>* பண்டங்களின் விற்பனை மற்றும் கொள்முதல் என அனைத்துப் பரிமாற்றங்களிலும் பணம் இடையீட்டுக்கருவியாகச் செயல்படுகிறது.<br>2. மதிப்பின் அளவுகோல்<br>* பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்புகளைப் பணஅலகில் விலைகளாக வெளிப்படுத்தப்படுகிறது.<br>* பணம் ஒரு பொது அளவுகோலாகப் பார்க்கப்படுகிறது.<br>இரண்டாம்நிலைப் பணிகள்<br>1. மதிப்பின் நிலைகலன்<br>* பணம் நீர்மைத்தன்மை கொண்டிருப்பதால் எப்பொழுது வேண்டுமானாலும் சொத்துகளாகவும், சொத்துகளை மீண்டும் பணமாகவும் மாற்றிக்கொள்ளலாம்<br>* பணம் சிறந்த மதிப்பின் நிலைக்கலனாகச் செயல்படுகிறது.<br>2. வருங்காலச் செலுத்துதல்களுக்கான அடிப்படை<br>* இன்றைய பொருளாதாரத்தில் கடன்களைப் பெறுவதையும் திரும்பச் செலுத்துவதையும் பணம் எளிதாக்குகிறது.<br>* பணம் வருங்காலச் செலுத்துதல்களுக்கு இடையீட்டுக் கருவியாகச் செயல்படுகிறது.<br>3. வாங்குதிறனை மாற்றிக்கொள்ளும் கருவி<br>* பண்டங்களின் பரிவர்த்தனை, தூரப்பகுதிகளுக்கு இடையிலும், எல்லை கடந்தும் நடைபெறுகிறது.<br>* வாங்குதிறனை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்ற பணம் உதவுகிறது.<br>துணைப் பணிகள்<br>1. கடனுக்கு அடிப்படையாக வணிகவங்கிகள் வாடிக்கையாளரின் ரொக்க இருப்பின் அளவைப்பொருத்தே கடனை உருவாக்குகின்றன.<br>2. காரணிகளுக்கான வருமானத்தை எளிதாகப் பகிர்ந்தளிக்க உதவுகிறது.<br>3. இறுதிநிலைப் பயன்பாடுகளையும் இறுதிநிலை உற்பத்தித்திறன்களையும் சமன் செய்திடப் பணம் பயன்படுகிறது.<br>4. பணம் மூலதனத்தின் உற்பத்தித்திறனை உயர்த்துகிறது.<br>இதரப் பணிகள்<br>1. திரும்பச் செலுத்தும் திறனைத் தக்கவைக்கப் பணம் உதவுகிறது.<br>2. பணம் பொதுமைப்படுத்தப்பட்ட வாங்குதிறனைக் குறிக்கிறது.<br>3. பணம் மூலதனத்திற்கு நீர்மைத்தன்மையைத் தருகிறது. |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 37) | **ஒருபொருளாதாரத்தில் பணவீக்கத்திற்கான காரணங்கள், விளைவுகள் யாவை?**<br><br>**பணவீக்கத்திற்கான காரணங்கள்**<br><br>**1. பண அளிப்பு உயர்வு**<br>* காகிதப் பண அளிப்பு உயர்வினால் மொத்தத்தேவை அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது.<br>**2. செலவிடத்தகுந்த வருமானம் உயர்வு**<br>* மக்களின் செலவிடத்தகுந்த வருமானம் உயரும்போது பண்டங்கள், பணிகளுக்கான தேவை அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது.<br>**3. உயர்ந்துவரும் பொதுச்செலவுகள்**<br>* வளர்ச்சித் திட்டங்கள், சமுதாய நலத்திட்டங்களை அமல்படுத்துவதால் அரசின் பொதுச்செலவுகளின் அளவு கூடிப் பணவீக்கம் ஏற்படுகிறது.<br>**4. நுகர்வோர் செலவு அதிகரித்தல்**<br>* தவணைமற்றும் கடன் கொள்முதல் முறைகளால் நுகர்வு அதிகரிப்பதன் காரணமாக விலைவாசி அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது.<br>**5. மலிவுப் பணக்கொள்கை**<br>* மலிவுப் பணக்கொள்கை பொருளாதாரத்தில் கடனளவை அதிகப்படுத்தும். இதனால் நுகர்வு அதிகரித்து விலைவாசி உயர்ந்து பணவீக்கம் ஏற்படுகிறது.<br><br>**பணவீக்கத்தின் விளைவுகள்**<br><br>**1. உற்பத்தியின்மீதான விளைவுகள்**<br>* மிதமான பணவீக்கம் உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு ஊக்கக் காரணியாகச் செயல்படும்.<br>* உயர் பணவீக்கம் பணத்தின் மதிப்பினைக் குறைப்பதன்மூலம் மக்களின் சேமிப்பைக் குறைக்கும்.<br>* வெளிநாட்டு மூலதனங்கள் நாட்டைவிட்டுத் திரும்பிச்செல்லும்.<br>**2. பகிர்வின்மீதான விளைவுகள்**<br>* பணவீக்கக் காலத்தில் கடன்பெற்றோர் ஆதாயமும், கடன் வழங்கியோர் இழப்பையும் சந்திக்கின்றனர்.<br>* நிலையான வருமானம் உடையோர் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.<br>* தொழில்முனைவோர்களுக்குப் பணவீக்கம் ஒருவரமாகவும், ஊக்கச் சக்தியாகவும் விளங்கி எதிர்பாராத ஆதாயம் கிடைக்கிறது. |

www.Padasalai.Net

38) **வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரி.**




**1. பூரிப்புக் கட்டம்**

* நீண்டகால இயல்பான வளர்ச்சிநிலைக்குமேல் பொருளாதார நடவடிக்கைகள் உயர்ந்து முழு வேலைவாய்ப்புநிலையை அடைவது பூரிப்புக் கட்டமாகும்.
* உற்பத்தி, பணக்கூலி, இலாபம், வட்டிவீதம், கடன் தேவைகள் உயரும்.
* அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளும் உச்சநிலையில் இருக்கும்.

**2. பின்னிறக்கம்**

* பூரிப்பில் வெடிப்புநிலை ஏற்பட்டு பொருளாதார நடவடிக்கைகள் பின்னோக்கித் திரும்புவது பின்னிறக்கம் என்கிறோம்.
* உற்பத்தி, பணக்கூலி, இலாபம், வட்டிவீதம் ஆகியன குறையத் துவங்கும்.
* அவநம்பிக்கைகள் தோன்ற ஆரம்பித்து முதலீடுகள் குறையத் துவங்கும்.
* நீர்மை விருப்பம் அதிகரித்து பணச்சந்தை நடவடிக்கைகள் சுருங்கும்.

**3. மந்தம்**

* பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குக்கீழ் குறைவது மந்தமாகும்.
* நிறுவனங்கள் நட்டமடைந்து, மூடப்படுவதுடன் வேலைவாய்ப்பின்மையை ஏற்படுத்தும்.
* வட்டி, இலாபம், கூலி ஆகியன மிகக் குறைந்தளவில் இருக்கும்.
* வணிகச் சுழற்சியின் மிக மோசமான கட்டம் மந்தமாகும்.
* மந்தத்தின் கீழ்நிலை **"தொட்டி"** என அழைக்கப்படுகிறது.

**4. மீட்சி**

* பொருளாதார நடவடிக்கைகள் மேல்நோக்கித் திரும்புவது மீட்சி ஆகும்.
* அரசின் தன்னிச்சை மூதலீடுகள்மூலம் வேலைவாய்ப்பு அதிகரித்து வருமானம் உயர்ந்து பண்டங்களுக்கான தேவை அதிகரிக்கும்.
* தனியார் முதலீடுகளும் மெதுவாக அதிகரித்து வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருமானம், கூலி, இலாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன.

www.Padasalai.Net

| K.J.கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி-- இராமநாதபுரம் மாவட்டம் | | |
|---|---|---|
| பன்னிரண்டாம் வகுப்பு -- பொருளியல் | | |
| இயல் -- ( 6 ) --- வங்கியியல் | | |
| சரியான விடையைத் தெரிவு செய்க | | |
| 1) | ஒருவங்கி என்பது<br>அ) நிதி நிறுவனம் ஆ) கூட்டுப்பங்கு நிறுவனம்<br>இ) தொழில் ஈ) தொண்டு நிறுவனம் | அ) நிதி நிறுவனம் |
| 2) | ஒருவணிக வங்கி செய்யும் பணி<br>அ) வைப்புகளை ஏற்றுக்கொள்வது இ) அ மற்றும் ஆ<br>ஆ) கடன் வழங்குவது ஈ) மேற்சொன்ன ஏதுவுமல்ல | இ) அ மற்றும் ஆ |
| 3) | வணிக வங்கிகளின் பணிகளின் இருபெரும் பிரிவு<br>அ) முதன்மைப் பணிகள்<br>ஆ) இரண்டாம்நிலைப் பணிகள் இ) மற்ற பணிகள்<br>ஈ) மேற்சொன்ன அனைத்தும் | ஈ) மேற்சொன்ன அனைத்தும் |
| 4) | வங்கிக்கடன் என்பது எதைக் குறிக்கிறது?<br>அ) கடன் பணம் ஆ) முன்பணம்<br>இ) கடன் பணமும் முன்பணமும் ஈ) கடன் பெறுதல் | இ) கடன் பணமும் முன்பணமும் |
| 5) | கடன் உருவாக்கம் என்பதன் பொருள்<br>அ) கடனும் முன்பணப் பெருக்கமும்<br>ஆ) வருவாய் இ) செலவு ஈ) சேமிப்பு | அ) கடனும் முன்பணப் பெருக்கமும் |
| 6) | வங்கியல்லா நிதிநிறுவனங்கள் ........................ வைத்திருப்பதில்லை<br>அ) வங்கி உரிமம் ஆ) அரசு ஏற்பு<br>இ) பணச்சந்தை ஏற்பு ஈ) நிதி அமைச்சக அனுமதி | அ) வங்கி உரிமம் |
| 7) | மையவங்கி நாட்டின் ..................... அதிகார அமைப்பு<br>அ) பணவியல் ஆ) நிதியியல்<br>இ) கூலி ஈ) தேசிய வருவாய் | அ) பணவியல் |
| 8) | வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது<br>அ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஆ) நபார்டு<br>இ) ICICI ஈ) இந்திய ரிசர்வ் வங்கி | ஈ) இந்திய ரிசர்வ் வங்கி |
| 9) | கடைசி நேரத்தில் உதவும் உற்ற நண்பன் என்ற பணியினைச் செய்வது<br>அ) மையவங்கி ஆ) வணிக வங்கிகள்<br>இ) நிலவள வங்கிகள் ஈ) கூட்டுறவு வங்கிகள் | அ) மையவங்கி |
| 10) | வங்கி விகிதம் என்பது<br>அ) முதல்நிலைப் பத்திரங்களை மறுதள்ளுபடி செய்வது<br>ஆ) வட்டி விகிதம் இ) அயல்நாட்டுச் செலாவணி<br>ஈ) வளர்ச்சி விகிதம் | அ) முதல்நிலைப் பத்திரங்களை மறுதள்ளுபடி செய்வது |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 11) | ரெப்போ விகிதம் என்பதன் பொருள்<br>அ) வணிக வங்கிகள் ரிசர்வ் வங்கிக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்<br>ஆ) ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்<br>இ) அயல்நாட்டுச் செலாவணி விகிதம்<br>ஈ) நாட்டின் வளர்ச்சி விகிதம் | ஆ) ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம் |
| 12) | நெறிமுறைத் தூண்டல் என்பது<br>அ) உத்தமநிலைப்படுத்தல் ஆ) உச்சநிலைப்படுத்தல்<br>இ)தூண்டுதல் நடவடிக்கை ஈ) குறைவுநிலைபடுத்துதல் | இ) தூண்டுதல் நடவடிக்கை |
| 13) | வேளாண் மறுநிதி மேம்பாட்டுக்கழகம் துவங்கப்பட்டது<br>அ) ஜீன் 3,1963 ஆ) ஜீலை 3,1963<br>இ) ஜீன் 1,1963 ஈ) ஜீலை 1,1963 | ஈ) ஜீலை **1,1963** |
| 14) | நபார்டு வங்கி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது<br>அ) ஜீலை 1962 ஆ) ஜீலை 1972<br>இ) ஜீலை 1982 ஈ) ஜீலை 1992 | இ) ஜீலை **1982** |
| 15) | ஏற்றுமதி - இறக்குமதி வங்கி துவங்கப்பட்டது<br>அ) ஜீன் 1982 ஆ) ஏப்ரல் 1982<br>இ) மே 1982 ஈ) மார்ச் 1982 | ஈ) மார்ச் **1982** |
| 16) | மாநில நிதிக்கழகம் எந்தச் சட்டத்தின்கீழ் துவங்கப்பட்டது?<br>அ) இந்திய அரசு ஆ) தமிழக அரசு<br>இ) ஒன்றியப்பகுதி ஈ) உள்துறை அரசு | அ) இந்திய அரசு |
| 17) | பணவியல் கொள்கையை வடிவமைப்பது<br>அ) கூட்டுறவு வங்கிகள் ஆ) வணிக வங்கிகள்<br>இ) மைய வங்கி ஈ) வெளிநாட்டு வங்கி | இ) மைய வங்கி |
| 18) | நிகழ்நிலை வங்கியகம் என்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது? அ) இ - வங்கி<br>ஆ) இணைய வங்கி இ) ஆர்.டி.ஜி.எஸ் ஈ) நெப்ட் | ஆ) இணைய வங்கி |
| 19) | ஏ.டி.எம் (ATM) என்பதன் விரிவாக்கம் என்ன?<br>அ) தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரம்<br>ஆ) சரிசெய்துப் பணம் வழங்கும் இயந்திரம்<br>இ) தானாகப் பணம் வழங்கும்முறை<br>ஈ) எந்த நேரமும் பணம் (Any Time Money ) | அ) தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரம் |
| 20) | 2016 இல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்புப் பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது?<br>அ) ₹ 500 மற்றும் ₹ 1000<br>ஆ) ₹ 1000 மற்றும் ₹ 2000<br>இ) ₹ 200 மற்றும் ₹ 500<br>ஈ) மேற்சொன்னவை அனைத்தும் | அ) ₹ 500 மற்றும் ₹ **1000** |

www.Padasalai.Net

| | |
|---|---|
| **இரண்டு மதிப்பெண் வினா -- விடை** | |
| **21)** | **வணிக வங்கிகள் என்பதனை வரையறு.**<br>* மக்களிடமிருந்து வைப்புகளைப்பெற்று, பேரளவில் உற்பத்தி செய்வோர், பெரிய நிறுவனங்களுக்கும், நடுத்தர நிறுவனங்களுக்கும் கடனை அளிக்கும் நிதி அமைப்பு. |
| **22)** | **கடன் உருவாக்கம் என்றால் என்ன?**<br>* கடன்களையும் முன்பண அளிப்பினையும் அதிகரிக்கும் ஒருசெயல்.<br>* மொத்தப் பண அளிப்பில் கடன்பணத்தின் அளவினை அதிகரிப்பது. |
| **23)** | **மைய வங்கி என்பதனை வரையறு.**<br>* அரசின் பணம், பண அளிப்பு, வட்டி விகிதம் ஆகியவற்றை மேலாண்மை செய்யக்கூடிய, வணிக வங்கிகளை மேற்பார்வையிடக்கூடிய ஒருநிறுவனம். |
| **24)** | **CRR மற்றும் SLR ஆகியவற்றினை வேறுபடுத்துக.**<br>**CRR ( ரொக்க இருப்பு விகிதம் )**: வணிக வங்கிகள் தங்கள் வைப்புகளில் ஒருகுறிப்பிட்ட சதவிகிதத்தை மைய வங்கியில் இருப்பாக வைக்கவேண்டும்.<br>**SLR ( சட்டப்படியான நீர்மை விகிதம் )**: வணிக வங்கிகள் தங்கள் வசம் வைத்திருக்கவேண்டிய நீர்மைச் சொத்துகளின் விகிதம். |
| **25)** | **வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறு.**<br>* மைய வங்கி, பொதுச்சந்தையில் அரசின் கடன் பத்திரங்களையும், தகுதிவாய்ந்த தனியார் நிறுவனப் பத்திரங்களையும் வெளியிடுவதும் திரும்பப் பெறுவதும் ஆகும். |
| **26)** | **கடன் விநியோகப் பகிர்வு என்றால் என்ன?**<br>* நாட்டின் பணஅளிப்புச் சூழ்நிலைக்கேற்பக் கடன் நோக்கங்களைப் பட்டியலிட்டு வரையறை செய்து கடன் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துவது.<br>* அவை **1)** மாறும் தொகுப்பு வரையறை<br>**2)** மாறும் மூலதன -- சொத்து விகிதம் |
| **27)** | **வேளாண் கடன் வழங்கும் துறையின் பணிகளைக் குறிப்பிடுக.**<br>• நிபுணத்துவம் பெற்ற அலுவலரை நியமித்து வேளாண் கடன் தொடர்பான அனைத்து வினாக்களையும் ஆய்வு செய்வது.<br>• மைய அரசு, மாநில அரசு, மாநிலக் கூட்டுறவு வங்கிகள், இதர வங்கிகளின் நடவடிக்கைகளில் நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனைகளை வழங்குவது.<br>• ஊரகத்துறைக்குத் தகுதிவாய்ந்த நிறுவனங்கள் மூலமாக வேளாண்மைக் கடன் வழங்குவதும் ஒருங்கிணைப்பதும். |

www.Padasalai.Net

| மூன்று மதிப்பெண் வினா -- விடை | |
|---|---|
| **28)** | **வணிக வங்கிகளின் கடன் உருவாக்க முறை நுட்பத்தினை எழுதுக.**<br>* வங்கிக்கடன் என்பது வாடிக்கையாளர்களின் வைப்புகளிலிருந்து தேவைப்படுவோருக்கு கடன் மற்றும் முன்பணம் கொடுப்பது ஆகும்.<br>* வங்கிகள் வழங்கும் கடன்கள் பொருளாதாரத்தில் நிகரப் பணஅளிப்பினை அதிகப்படுத்தும்.<br>* ஒருவர் வங்கியில் செலுத்தும் பணம் ₹ 1000 முதல்நிலை வைப்பாக இருக்கும்<br>* ரொக்க இருப்பு விகிதமான (20% ) ₹ 200 போக ₹ 800 - ஐ விண்ணப்பிக்கும் நபருக்குக் கடனாக அளிக்கப்படும்.<br>* கடன் பணத்தை ரொக்கமாக வழங்காமல் அன்னாரின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும். இது தருவிக்கப்பட்ட வைப்பாகும்.<br>* இம்முறையில் ₹ 1000 என்ற வைப்பு ₹ 5000 ஆகப் பெருகுகின்றது. |
| **29)** | **வங்கியல்லா நிதியமைப்புகளைப் பற்றிச் சிறுகுறிப்பு தருக.**<br>* முழு வங்கிக்கான உரிமம் பெறாத நிதி நிறுவனமாகும்.<br>* மைய வங்கியால் கண்காணிக்கப்படுவதில்லை.<br>* வங்கிப்பணிகளைச் செய்யாமல் நிதிப்பரிமாற்றங்களை மேற்கொள்கிறது.<br>* மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்றுக்கொண்டு கடன்களையும் , முதலீட்டு நடவடிக்கைகளுக்கு நிதியுதவியும் அளிக்கின்றது.<br>* பண அங்காடியிலும் மூலதன அங்காடியிலும் செயல்படுகின்றன.<br>* பங்குச்சந்தை , இதர நிதிநிறுவனங்கள் என இருவகைப்படும்.<br>* **எ.கா -- யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா, காப்பீட்டு நிறுவனங்கள்** |
| **30)** | **கடன் கட்டுப்பாட்டு முறைகளைக் கூறுக.** |

| கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள் | கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் |
|---|---|
| **1.** வங்கி விகிதக்கொள்கை | **1.** கடன் பங்கீடு |
| **2.** வெளி அங்காடி நடவடிக்கைகள் | **2.** நேரடி நடவடிக்கைகள் |
| **3.** மாறும் ரொக்க இருப்பு விகிதம்<br>அ) ரொக்க இருப்பு விகிதம்<br>ஆ) சட்டப்படியான நீர்மை விகிதம் | **3.** நெறிமுறைத் தூண்டல் |
| | **4.** விளம்பரப்படுத்துதல் |
| | **5.** நுகர்வோர் கடனை முறைப்படுத்துதல் |
| | **6.** ஈட்டுக்கடன்களில் விளிம்புநிலைத் தொகையை மாற்றுதல் |

www.Padasalai.Net

**31)** **நபார்டின் பணிகள் யாவை?**

1. வேளாண்மை, சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமத்தொழில்கள், கைவினை மற்றும் இதர ஊரகத்தொழில்களுக்கு மறுகடனை வழங்குகிறது.
2. மாநிலக் கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள், இந்திய ரிசர்வ் வங்கி ஆகியவற்றால் ஏற்பளிக்கப்பட்ட இதர நிதிநிறுவனங்கள் ஆகியவற்றிற்கு குறுகியகால, மத்தியகால, நீண்டகாலக் கடன்களை வழங்குகிறது.
3. கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களுக்கு பங்கு முதலீட்டை வழங்க மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்டகாலக் கடன்களை வழங்குகிறது.
4. வேளாண்மை, ஊரக வளர்ச்சி ஆகியவற்றிற்கான பங்கு மூலதனம் அல்லது கடன் பத்திரங்களைப் பெற்றிருக்கும் நிறுவனங்களுக்கு நீண்டகாலக் கடனை வழங்குகிறது.
5. வட்டார ஊரக வங்கிகள், துவக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களைத் தவிர்த்து அனைத்துக் கூட்டுறவு வங்கிகளையும் ஆய்வு செய்கிறது.

( ஏதேனும் மூன்று பணிகள் மட்டும் )

**32)** **இந்தியத் தொழில்நிதிக் கழகத்தின் பணிகளைக் குறிப்பிடுக.**

1. இந்திய ரூபாயிலும் வெளிநாட்டுப் பணத்திலும் நீண்டகாலக் கடன்களை வழங்குகிறது.
2. வெளியிடப்பட்ட சமஉரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றிற்கு ஒப்புறுதி அளிக்கிறது.
3. சமஉரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குகிறது.
4. இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்களுக்கும், இந்தியாவில் வாங்கப்படும் தொழிற்துறை இயந்திரங்களுக்குமான பணத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது.
5. வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து அந்நாட்டின் பணத்தில் வாங்கப்படும் கடன்களுக்கான உத்தரவாதத்தையும் அளிக்கிறது.

( ஏதேனும் மூன்று பணிகள் மட்டும் )

**33)** **பண அங்காடியையும் மூலதன அங்காடியையும் வேறுபடுத்துக.**

| வ. எண் | பண அங்காடி | மூலதன அங்காடி |
|---|---|---|
| 1) | அதிக நீர்மைத் தன்மை கொண்ட குறுகியகாலத்தில் முதிர்ச்சியுறும் நிதிக் கருவிகளை வணிகம் செய்யும் அங்காடி | நீண்டகால நிதிக்கருவிகளை வணிகம் செய்யும் அங்காடி |
| 2) | ஒருநாள் முதல் ஓராண்டு வரை முதிர்ச்சியடையும் நிதிக்கருவிகள் கையாளப்படுகிறது | ஓராண்டிற்குமேல் முதிர்ச்சியடையும் நிதிக்கருவிகள் கையாளப்படுகிறது |
| 3) | அரசுப் பத்திரங்கள், வணிகப் பத்திரங்கள், மாற்றுச்சீட்டுகள், அயல்நாட்டுச் செலாவணி, கருவூல உறுதிச்சீட்டுகள் ஆகியன குறுகியகால நிதிக்கருவிகள் | கடன் பத்திரங்கள், சம பங்குகள், அயல்நாட்டுச் செலாவணி, முன்பேர வர்த்தகம் ஆகியன நீண்டகால நிதிக்கருவிகள் |
| 4) | இந்திய ரிசர்வ் வங்கி, வெளிநாட்டு வங்கிகள், வணிக வங்கிகள், வட்டார வங்கிகள், மேம்பாட்டு வங்கிகள் ஆகியவை பண அங்காடி நிறுவனங்கள் | தனி முதலீட்டாளர்கள், பங்குச்சந்தைகள், நிதிக்கழகங்கள், நிதி மற்றும் தொழில் நிறுவனங்கள், வங்கிகள்ஆகியவை மூலதன அங்காடி நிறுவனங்கள் |

( ஏதேனும் மூன்று வேறுபாடுகள் மட்டும் )

www.Padasalai.Net

**34)** **பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.**

1. கருப்புப் பணத்தை ஒழிப்பது
2. இலஞ்சத்தைத் தடுப்பது
3. தீவிரவாதத்திற்குப் பணம் செல்வதைத் தடுப்பது
4. கள்ளப்பணத்தினைத் தடுப்பது

**ஐந்து மதிப்பெண் வினா -- விடை**

**35)** **நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.**

**1. மூலதனத் திரட்சி**

* நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனத் திரட்சி இன்றியமையாதது.
* வங்கிக் கிளைகளை அதிகமாக்கி மக்களின் சேமிப்புகளை வைப்புகளாகத் திரட்டி உற்பத்தி நோக்கத்திற்காகக் கடன்களாக வழங்குகின்றன.

**2. கடன் உருவாக்கம்**

* முன்னேற்றத்திட்டங்களுக்கு அதிக நிதியைப் பெற்றுத் தருகிறது.
* உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருமானம், விற்பனை ஆகியவை ஏற்றம்பெற்று விரைவான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டுவருகின்றது.

**3. அதிக உற்பத்தித்திறன்கொண்ட முதலீட்டை நோக்கிப் பணத்தை முறைப்படுத்துதல்**

* வங்கிகள் உற்பத்தி நோக்கில் பணத்தினை முதலீடு செய்கிறது.
* முதலீட்டின் உற்பத்தித்திறன் குறைவாக உள்ள துறைக்கு வழங்கப்படும் முதலீட்டுக் கடனைக் குறைத்துக்கொண்டு அதிக உற்பத்தித்திறன் கொண்ட துறைகளுக்கு கூடுதலாக முதலீட்டுக் கடனை மடைமாற்றுகிறது.

**4. சரியான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்**

* அதிகத்தேவை உள்ள பொருளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு கடன்களையும் முன்பணங்களையும் வழங்குகிறது.
* உற்பத்தியாளர்கள் உற்பத்தி முறைகளில் புதுமையைப் புகுத்தி நாட்டு வருமானம் உயர்வதற்கு வழிசெய்கின்றனர்.

**5. கடனைப் பணமாக்குதல்**

* வணிகத்தில் எழும் குறிப்பிட்ட காலக்கடன்களை இடையிலேயே ரொக்கமாக்கித் தருவதன்மூலம் உற்பத்தியிலும் வணிக நடவடிக்கைகளிலும் சுணக்கம் ஏற்படாமல் வணிக வங்கிகள் பாதுகாக்கிறது.
* கடன் விற்பனையில் கடனுக்கான உத்தரவாதமாக மாற்றுச்சீட்டுகளை வங்கிகள் கழிவுசெய்வதால் வணிக நிறுவனங்கள் எந்த இடையூறுமின்றிப் பொருளாதார நடவடிக்கைகளைத் தொடர முடிகிறது.

**6. அரசிற்கு நிதி வழங்குதல்**

* தொழில் வளர்ச்சியை மேம்படுத்த அரசிற்குத் தேவைப்படும் குறுகியகால, நீண்டகாலக் கடன்களை அரசு பத்திரங்களை ஏற்பதன்மூலம் வழங்குகிறது.
* 2018 – 2019 ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கி தனது உபரிநிதியிலிருந்து மத்திய அரசுக்கு ₹.68,000 கோடி வழங்கியுள்ளது.

**7. வேலைவாய்ப்பினை உருவாக்குதல்**

* நிறைய எண்ணிக்கையில் கிளைகள் திறக்கப்பட்டு கடன் பெருக்கத்தால் நிறைய வேலைவாய்ப்புகள் உருவாகிறது.

**8. தொழில்முனைவினை ஊக்கப்படுத்துதல்**

* இந்தியா போன்ற வளரும் நாடுகளில் அண்மைக்காலமாக வணிக வங்கிகள் தொழில்முனைவினை ஊக்கப்படுத்திவருகிறது.

**(ஏதேனும் ஐந்து தலைப்புகள் மட்டும்)**

www.Padasalai.Net

| | |
|---|---|
| 36) | **வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.**<br>**I - முதன்மைப்பணிகள்**<br>**1) வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்**<br>* பொதுமக்களால் செலுத்தப்படும் வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்.<br>**அ) கேட்பு வைப்புகள்**<br>* முன்னறிவிப்பின்றி பணம் பெறும் படிவம், காசோலை, ATM மூலம் பணத்தை தனது வைப்பிலிருந்து எடுத்துக்கொள்வது.<br>* சேமிப்புக் கணக்கு, நடப்புக் கணக்கு என இருவகைப்படும்.<br>**ஆ) கால வைப்புகள்**<br>* குறிப்பிட்ட காலவரையறைவரை மீளப்பெறாமல் இருக்கும் வைப்புகளாகும்.<br>* நிலை வைப்பு, தொடர் வைப்பு என இருவகைப்படும்.<br>**2) கடன் வழங்கல்**<br>* ரொக்கக்கடன், மாற்றுச்சீட்டுத் தள்ளுபடி, மிகைப்பற்று ஆகிய முறைகளில் தனிமனிதர்கள் மற்றும் வணிகத்திற்கான கடன்களை வழங்குகின்றன.<br>**II - இரண்டாம் நிலைப்பணிகள்**<br>**1) முகமைப்பணிகள்**<br>* வங்கி வாடிக்கையாளர்களுக்கு முகவராக இருந்து செய்யும் பணிகள் முகமைப்பணிகள் எனப்படும்.<br>**அ) காசோலைகளைப் பணமாக்குதல்**<br>* காசோலைகளையும் மாற்றுச்சீட்டுகளையும் வங்கித் தீர்வகங்களின்மூலம் வசூல் செய்து கொடுக்கின்றன.<br>**ஆ) வருமானத்தைப் பெறுதல்** -- * இலாப ஈவு, ஓய்வூதியம், சம்பளம், வாடகை, வட்டி ஆகியவற்றினை வசூலித்துத் தருகின்றன.<br>**இ) செலவுகளைச் செலுத்துதல்**<br>* தொலைபேசிக் கட்டணம், காப்பீட்டுக் கட்டணம், கல்விக் கட்டணம், வாடகைக் கட்டணம் ஆகிய செலவுகளைச் செலுத்துகின்றன.<br>**2) பொதுப் பயன்பாட்டுப்பணிகள்**<br>அ) பாதுகாப்புப் பெட்டக வசதி<br>* நகைகள், பங்குகள், கடன் பத்திரங்களைப் பாதுகாக்க, திருட்டு, இழப்புகளைத் தவிர்க்க பாதுகாப்புப் பெட்டக வசதியைச் செய்து தருகின்றன.<br>**ஆ) பயணக்காசோலைகளை வழங்குதல்** -- * பயணக் காசோலைகள் மூலம் வெளிநாட்டுப் பயணத்தின்போது பணப்பாதுகாப்பினை வழங்குகின்றன.<br>**இ) அயல்நாட்டுச் செலாவணியைக் கையாளுதல்**<br>* ஏற்றுமதி, இறக்குமதியில் ஈடுபடும் வணிகர்களுக்கு அயல்நாட்டுச் செலாவணி வசதியைச் செய்துகொடுக்கிறது.<br>**3) நிதி மாற்றுதல்**<br>* வரைவுக் காசோலைகள், தொலைபேசி, மின்னணுப் பரிமாற்றங்கள்மூலம் ஒரு வங்கியிலிருந்து மற்றொரு வங்கிக்கு நிதியை மாற்றுகிறது.<br>**4) கடன் உறுதியளிப்புக் கடிதம்**<br>அ) பத்திரங்களுக்கு எழுத்துறுதி வழங்குதல்<br>* பத்திரங்களுக்கான எழுத்துறுதி வழங்கும் பணியினைச் செய்கிறது.<br>ஆ) மின்னணு வங்கிமுறை<br>* மின்னணுமுறையைப் பின்பற்றி பற்று அட்டை, கடன் அட்டை, இணையவழி மூலம் விரைவான பணப்பரிவர்த்தனைகளைமேற்கொள்கின்றன. |

www.Padasalai.Net

37)

**இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.**

**1) பண அதிகார அமைப்பு ( ஏதேனும் ஐந்து பணிகள் மட்டும் )**

* பண அளிப்பினைக் கட்டுப்படுத்துவதன்மூலம் அயல்நாட்டுச் செலாவணிப் பரிமாற்ற விகிதத்தை நிலைப்படுத்துதல், சாதகமான செலுத்து நிலையைப் பேணுதல், நிதி நிலைத்தன்மையை ஏற்படுத்துதல், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல், வங்கியமைப்பை உறுதியாக்குதல் ஆகியவற்றைச் செய்கிறது.

**2) காகிதப் பண வெளியீடு**

* நாணயங்கள் மற்றும் ஒரு ரூபாய் காகிதப் பணத்தைத் தவிர அனைத்துக் காகிதப் பணத்தையும் வெளியிடுகிறது.
* பண அளவுகளையும், கடன் அளவுகளையும் மேலாண்மை செய்கிறது.
* போலிப் பணத்தினைக் கட்டுப்படுத்துகிறது.

**3) வங்கி உரிமங்கள் வழங்குபவர்**

* வங்கிகள் முறைப்படுத்தும் சட்டம் , பிரிவு 22-இன்படி வணிக வங்கிகளுக்கு வங்கித்தொழில் செய்ய உரிமம் வழங்குகிறது.

**4) அரசுக்கான வங்கி**

* மத்திய, மாநில அரசுகளுக்கு குறுகியகாலக் கடன்களையும், வங்கி, நிதி தொடர்பான ஆலோசனைகளையும் வழங்குகிறது.
* அரசுக் கடன்கள், அரசுக் கடன் தெடர்பான சேவைகள், கடன் பத்திரங்களை உருவாக்கி விற்பனை செய்தல் ஆகிய பணிகளைச் செய்கிறது.

**5) வங்கிகளின் வங்கி**

* வங்கிகளுக்கு வேண்டிய கடன்களை அளிக்கிறது.
* வைப்புகளை ஏற்கிறது. மாற்றுச்சீட்டுகளைத் தள்ளுபடி செய்கிறது.
* அனைத்து வங்கிகளின் தலைமை வங்கியாகச் செயல்படுகிறது.

**6) கடைநிலைக் கடன் ஈவோன்**

* வணிக வங்கிகளுக்கு தீர்க்க இயலாத நிதிச்சிக்கல்கள் ஏற்படும்பொழுதும், நிதிக்கான ஆதாரங்கள் இல்லாதபோதும் ஈட்டுக்கடனை அளிக்கிறது.

**7) தீர்வாகச் செயல்படுகிறது**

* வங்கிகளுக்கிடையே நடக்கும் பரிமாற்றங்களைத் தனது 14 தீர்வகங்களால் சமன்செய்கிறது.
* பரிமாற்றக் கருவிகளைப் பரிமாறிக்கொள்ள உதவுவதுடன், பரிமாற்றம் தொடர்பான அறிவுறுத்தல்களையும் வழங்குகிறது.

**8) அயல்நாட்டுச் செலாவணிப் பாதுகாவலன்**

* அயல்நாட்டுச் செலாவணி மேலாண்மைச்சட்டம் 1999 (FEMA) -இன்படி அயல்நாட்டுச் செலாவணியை மேலாண்மை செய்வதோடு இருப்புக்களையும் பாதுகாக்கிறது.
* இந்திய ரூபாயின் பரிமாற்ற விகிதத்தை நிலைப்படுத்த வெளிநாட்டுப் பணங்களை வாங்கி விற்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது.

**9) பொருளாதாரத்தை நெறிப்படுத்துகிறது**

* பணவியல் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு பொருளாதாரத்தை நெறிப்படுத்தி விரும்பத்தகுந்த பாதையில் கொண்டுசெல்கிறது.
* நாட்டு வருமானம், வேலைவாய்ப்பு, செலவு, சேமிப்பு, முதலீடு போன்ற குறியீடுகளைத் தொடர்ந்து கண்காணித்து நெறிப்படுத்துகிறது.

**10) அரசின் கடன் பத்திரங்களை நிர்வகிக்கிறது**

* குறிப்பிட்ட விழுக்காட்டுச் சொத்துக்களையும் பொறுப்புகளையும் அரசின் கடன் பத்திரங்களாகக் கொண்டுள்ள நிறுவனங்களைக் கண்காணிக்கிறது.

| | |
|---|---|
| 38) | **பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக.**<br>**1) பணத்தின் நடுநிலைத்தன்மை**<br>* பணவியல் அதிகாரஅமைப்பு பொருளாதாரத்தில் பணம் நடுநிலைத்தன்மை நோக்கம் கொண்டதாக இருக்கவேண்டும் என்று விக்ஸ்டெட், ஹேயக், ராபர்ட்சன் ஆகியோர் வலியுறுத்தினர்.<br>* பணத்தில் ஏற்படும் மாற்றமே பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணம்.<br>* பணவியல் மாற்றங்கள் சரியான பாதையில் சென்றுகொண்டிருக்கும் நாட்டின் பொருளாதார அமைப்பில் விலகலையும் இடையூறுகளையும் ஏற்படுத்தும்.<br>**2) பரிமாற்றவீத நிலைத்தன்மை**<br>* பொன்திட்டம் அமலில் இருந்த காலத்தில் இது முக்கியமான நோக்கமாகும்.<br>* நாட்டின் செலுத்துச் சமநிலையில் சமனற்றநிலை தோன்றும்போது தங்க நகர்வின் காரணமாக உள்வரும்போது பணமும் கடனும் விரிவடைந்தும் வெளிச்செல்லும்போது பணமும் கடனும் சுருங்கியும் தானாகச் சரிசெய்துகொள்கிறது.<br>**3) விலை நிலைத்தன்மை**<br>* விலை நிலைத்தன்மையை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் முக்கிய நோக்கம் என்று பொருளியலாளர்கள் காஸல், கீன்ஸ் கூறினர்.<br>* விலை நிலைத்தன்மை பொதுமக்களிடமும் வணிக நடவடிக்கைகளிலும் நம்பிக்கையை ஏற்படுத்தி, பொது அலையும் சமுதாய நலனும் நிறுவப்படும்.<br>* மிதமான விலையேற்றம் பொருளாதாரவளர்ச்சியின் ஊக்கசக்தியாக இருக்கும்.<br>**4) முழுவேலைவாய்ப்பு**<br>* வேலைவாய்ப்பின்மை சமுதாய அளவில் அபாயகரமானதும், பொருளாதார அளவில் வீணடிப்பையும், அறநெறியளவில் வருந்தத்தக்கதாகவும் இருந்தது<br>*1936-இல் வெளியிடப்பட்ட" வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணத்திற்கான பொதுக்கோட்பாடு " என்ற கீன்சின் நூல் முழுவேலைவாய்ப்பு என்ற பணவியல் கோட்பாட்டின் குறிக்கோளை முன்னிலைப்படுத்தியது.<br>**5) பொருளாதார வளர்ச்சி**<br>* நீண்டகாலத்தில் உண்மை தலா வருவாய் அதிகரித்துச் செல்லும் நடவடிக்கையே பொருளாதார வளர்ச்சியாகும்.<br>* சமநிலைப் பண அளவு, உற்பத்தி அளவுகள், சாதகமான சேமிப்பு - முதலீடு ஆகிய சூழ்நிலைகளைப் பராமரித்து நீடித்த பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் குறிக்கோளாகும்.<br>* தேவை -- அளிப்பு சமநிலையை ஏற்படுத்த பணவியல் கொள்கை ஒரு சிறந்த வழிமுறையாகும்.<br>**6) அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலையில் சமநிலையைப் பேணுதல்**<br>* உலகப் போர்களுக்குப் பிறகு உலக வணிகத்தில் சமனற்றநிலை அதிகரித்து அயல்நாட்டுச் செலாவணியில் பற்றாக்குறை ஏற்பட்டது.<br>* குறைவளர்ச்சி நாடுகள் தங்களுடைய இறக்குமதியைக் குறைப்பதால் பாதகமான பொருளாதார நிலைக்குத் தள்ளப்படுகிறது.<br>* பணவியல்கொள்கை செலுத்துச்சமநிலையில் சமநிலையைப் பேணுவதை தனது குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.<br>**( ஏதேனும் ஐந்து நோக்கங்கள் மட்டும் )** |

www.Padasalai.Net

| K.J.கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி-- இராமநாதபுரம் மாவட்டம் | | |
|---|---|---|
| பன்னிரண்டாம் வகுப்பு -- பொருளியல் | | |
| இயல் -- ( 7 ) -- பன்னாட்டுப் பொருளியல் | | |
| **சரியான விடையைத் தெரிவு செய்க** | | |
| **1)** | இரண்டு நாடுகளுக்கிடையிலான வாணிகம் என்பது<br>அ) வெளி வாணிகம் ஆ) உள் வாணிகம்<br>இ) மண்டலங்களுக்கிடையேயான வாணிகம்<br>ஈ) உள்நாட்டு வாணிகம் | **அ) வெளி வாணிகம்** |
| **2)** | கீழ்க்காண்பவற்றுள்வாணிகத்தைத் தீர்மானிக்கும் காரணி எது?<br>அ) ஒருபண்டத்தின் மேம்பாட்டுக் காலக்கட்டம்<br>ஆ) உற்பத்திக்காரணிகளின் ஒப்பீட்டு விலை<br>இ) அரசாங்கம் ஈ) மேற்கண்ட அனைத்தும் | **ஈ) மேற்கண்ட அனைத்தும்** |
| **3)** | பன்னாட்டு வாணிகம் உள்நாட்டு வாணிகத்திலிருந்து வேறுபடக் காரணம்<br>அ) வணிகக் கட்டுப்பாடுகள்<br>ஆ) உற்பத்திக் காரணிகள் இடம்பெயர இயலாமை<br>இ) நாடுகளின் கொள்கை வேறுபாடுகள்<br>ஈ) மேற்சொன்ன அனைத்தும் | **ஈ) மேற்சொன்ன அனைத்தும்** |
| **4)** | நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட அடிப்படைக் காரணம்<br>அ) ஒருநாடு ஒருகுறிப்பிட்ட பண்டத்தையும் வேறுநாடு மற்றொரு பண்டத்தையும் உற்பத்தி செய்ய விரும்புகிறது<br>ஆ) உற்பத்திவளங்கள் நாடுகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளன<br>இ) பன்னாட்டு வாணிகம் இலாபக் குவிப்பு வாய்ப்பை அதிகப்படுத்துகிறது<br>ஈ) நாடுகளில் நிலவும் வட்டிவீதமும் வெவ்வேறு அளவில் உள்ளது | **ஆ) உற்பத்தி வளங்கள் நாடுகளுக் கிடையே ஏற்றத்தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளன** |
| **5)** | புதிய பன்னாட்டு வாணிகக்கோட்பாடு எதன் அடிப்படையில் அமைந்தது?<br>அ) முழுமைச்செலவு ஆ) ஒப்புமைச்செலவு<br>இ) உற்பத்திக் காரணிக் கோட்பாடு ஈ) எதுவுமில்லை | **இ) உற்பத்திக் காரணிக் கோட்பாடு** |
| **6)** | பணமாற்றுவீதம் நிர்ணயமாகும் சந்தை<br>அ) பணச்சந்தை ஆ) அயல்நாட்டுச் செலாவணி<br>இ) பங்குச்சந்தை ஈ) மூலதனச்சந்தை | **ஆ) அயல்நாட்டுச் செலாவணி** |
| **7)** | கீழ்க்காணும் எந்தப் பரிமாற்றுவீத முறையில் அங்காடிச் சக்திகளான தேவையும் அளிப்பும் பரிமாற்றுவீதத்தை நிர்ணயிக்கின்றன.<br>அ) மாறாப் பணமாற்றுவீதம்<br>ஆ) மாறுகின்ற பணமாற்றுவீதம்<br>இ) நிலைத்த பணமாற்றுவீதம்<br>ஈ) அரசு ஒழுங்கமைப்புமுறை | **ஆ) மாறுகின்ற பணமாற்று வீதம்** |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **8)** | ஏற்றுமதி நிகரம் என்பது<br>அ) ஏற்றுமதி X இறக்குமதி ஆ) ஏற்றுமதி + இறக்குமதி<br>இ) ஏற்றுமதி -- இறக்குமதி ஈ) பணிகள் ஏற்றுமதி | **இ) ஏற்றுமதி – இறக்குமதி** |
| **9)** | கீழ்க்காணபவர்களில் யார் ஒற்றைக்காரணி வாணிகவீதத்தை வடிவமைத்தவர்<br>அ) ஜேக்கப் வைனர் ஆ) G.S.டோரன்ஸ்<br>இ) F.W.டாசிக் ஈ) ஜே.எஸ்.மில் | **அ) ஜேக்கப் வைனர்** |
| **10)** | வாணிகவீதம் ...................... பற்றிக் குறிப்பிடுகின்றது.<br>அ) பொருள் ஏற்றமதி இறக்குமதி விகிதம்<br>ஆ) இறக்குமதி வழி விகிதம் ஈ) (அ) வும் (இ) யும்<br>இ) ஏற்றுமதி விலை இறக்குமதி விலை விகிதம் | **இ) ஏற்றுமதி விலை இறக்குமதி விலை விகிதம்** |
| **11)** | சாதகமான வாணிகச் சூழலில் ஏற்றுமதி இறக்குமதியைவிட ......................... ஆக இருக்கும்.<br>அ) அதிகமாக ஆ) குறைவாக<br>இ) கிட்டத்தட்ட சமமாக ஈ) சமமாக | **அ) அதிகமாக** |
| **12)** | இறக்குமதி ஏற்றுமதியைவிட அதிகமாக இருத்தலை கீழ்க்காணும் வழிகளில் எது சரிசெய்யும்?<br>அ) சுங்கத்தீர்வையைக் குறைத்தல்<br>ஆ) ஏற்றுமதி வரியை அதிகரித்தல்<br>இ) ஏற்றுமதிக்கு ஊக்கமளித்தல்<br>ஈ) இறக்குமதிக்கு ஊக்கமளித்தல் | **இ) ஏற்றுமதிக்கு ஊக்கமளித்தல்** |
| **13)** | அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை உள்ளடக்கிய இனங்கள் அ) புலனாகும் பண்டங்கள் மட்டும்<br>ஆ) புலனாகாத பணிகள் மட்டும்<br>இ) அ மற்றும் ஆ ஈ) பண்ட வாணிகம் மட்டும் | **இ) அ மற்றும் ஆ** |
| **14)** | அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலைக் கூறுகள் கீழ்க்காண்பனவற்றில் எவை?<br>அ) நடப்புக் கணக்கு ஆ) மையவங்கி இருப்பு<br>இ) மூலதனக் கணக்கு ஈ) அ, ஆ, இ -- மூன்றும் | **ஈ) அ, ஆ, இ -- மூன்றும** |
| **15)** | வாணிகச் சமநிலை அறிக்கையில்<br>அ) பண்டப் பரிமாற்றம் மட்டும் பதிவாகிறது<br>ஆ) பண்டங்கள், பணிகள் பரிமாற்றங்கள் பதிவாகிறது<br>இ) மூலதனம் மற்றும் நிதிப் பரிமாற்றங்கள் பதிவாகிறது ஈ) மேற்கண்ட அனைத்தும் பதிவாகிறது | **அ) பண்டப் பரிமாற்றம் மட்டும் பதிவாகிறது** |
| **16)** | சுற்றுலாவும் வெளிநாட்டுப் பயணமும் தொடர்புடைய பரிமாற்றங்கள் அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலையின் எந்தக் கணக்கின்கீழ் பதிவாகின்றன?<br>அ) பண்டங்கள் வாணிகக் கணக்கு<br>ஆ) பணிகள் வாணிகக் கணக்கு<br>இ) பரிமாற்றக் கணக்கு ஈ) மூலதனக் கணக்கு | **ஆ) பணிகள் வாணிகக் கணக்கு** |
| **17)** | சுழற்சி அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை சமமற்ற நிலைக்கான காரணம் ஈ) அ மற்றும் ஆ<br>அ) வாணிகச் சுழற்சியின் மாறுபட்ட காலகட்டம்<br>ஆ) வருமானமும் விலைத்தேவைநெகிழ்ச்சியும் நாடுகளுக்கிடையே வேறுபடுதல்<br>இ) நீண்டகாலப் பொருளாதார மாற்றங்கள் | **ஈ) அ மற்றும் ஆ** |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **18)** | கீழ்க்காண்பனவற்றில் எவை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான எடுத்துக்காட்டாகக் கூறமுடியாது?<br>அ) வெளிநாட்டில் தன்னூர்தி ஆலை அமைத்தல்<br>ஆ) வெளிநாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இரும்பு உருக்காலையை வாங்குதல்<br>இ) வெளிநாட்டுத் துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது<br>ஈ) முழு தனிஉரிமையுடன் ஒருபுதிய நிறுவனத்தை வெளிநாட்டில் தொடங்குவது | **இ) வெளிநாட்டுத் துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது** |
| **19)** | இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை அ) வங்கி<br>ஆ) அணு ஆற்றல் இ) மருந்து உற்பத்தி ஈ) காப்பீடு | **ஆ) அணு ஆற்றல்** |
| **20)** | கோட்பாட்டு அடிப்படையில் வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகளாவன<br>அ) பொருளாதார வளர்ச்சி<br>ஆ) பன்னாட்டு வாணிக வளர்ச்சி<br>இ) வேலைவாய்ப்பும் திறன் அதிகரித்தலும்<br>ஈ) மேற்கண்ட அனைத்தும் | **ஈ) மேற்கண்ட அனைத்தும்** |

www.Padasalai.Net

**இரண்டு மதிப்பெண் வினா -- விடை**

**21)** **பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன?**

* பண்டங்கள், பணிகள் நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வது பற்றிய பொருளியலின் ஒரு பாடப்பிரிவாகும்.

**22)** **பன்னாட்டு வாணிகம் -- வரைவிலக்கணம் தருக.**

* பண்டங்கள், பணிகளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் பரிமாறிக் கொள்வது.
* வெளிவர்த்தகம் அல்லது மண்டலங்களுக்கிடையிலான வாணிகம் அல்லது அயல் வாணிகம் எனவும் அழைக்கலாம்.

**23)** **பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.**

**1) திறனுடைய உற்பத்தி**

* பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் அனைத்து நாடுகளும் முழு அல்லது ஒப்பீட்டுத் தனித் தேர்ச்சியை அடைகின்றன.

**2) நாடுகளிடையே விலை சமனடைதல்**

* அனைத்து வணிக நாடுகளிலும் சமநிலை நிலவ உதவுகிறது.

**3) பற்றாக்குறையுள்ள வளங்களைச் சமமாகப் பகிர்தல்**

* பற்றாக்குறையுள்ள வளங்களைச் சமமாகப் பகிர்ந்துகொள்ள உதவுகிறது.

**4) பன்னாட்டு வாணிகத்தின் பொதுவான நன்மைகள்**

* பலவகையான பண்டங்கள் கிடைக்க வழிவகுக்கிறது.
* போக்குவரத்து வசதிகள் வளருகிறது.

**24)** **பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளை விளக்குவதில் ஆடம் ஸ்மித்துக்கும் டேவிட் ரிகார்டோவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?**

| ஆடம் ஸ்மித் | டேவிட் ரிகார்டோ |
|---|---|
| முழுச் செலவுக் கோட்பாடு | ஒப்புமைச் செலவுக் கோட்பாடு |
| குறைந்த தனி அடக்கச் செலவில் பொருள் உற்பத்தி செய்யும் தேர்ச்சியை நாடுகள் பெற்றிருப்பது | இருபொருள்களை உற்பத்தி செய்து அதனை மற்ற நாட்டு உற்பத்திச்செலவுடன் ஒப்பிட்டுப் பொருள் உற்பத்தி செய்யும் தேர்ச்சியை நாடுகள் பெற்றிருப்பது |

**25)** **வணிக வீதத்தினை விளக்குக.**

* ஏற்றுமதிப் பண்டத்தின் விலைக்கும் இறக்குமதிப் பண்டத்தின் விலைக்கும் இடையிலான விகிதம்.

$$\text{வணிக வீதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைக்குறியீடு}}{\text{இறக்குமதி விலைக்குறியீடு}} \times 100$$

**26)** **வணிகச் செலுத்துநிலை பற்றி நீவிர் அறிவது யாது?**

* நாடுகளுக்கிடையே பண்டங்கள் மட்டுமல்லாமல் பணிகள், பணம், மூலதனம் ஆகியவற்றையும் பரிமாறிக்கொள்ளப்படுவது.
* ஒருநாடு குறிப்பிட்ட காலத்தில் உலகநாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதாரப் பரிவர்த்தனை அறிக்கை.

**27)** **செலாவணி மாற்றுவீதம் என்றால் என்ன?**

* ஓர் அலகு அயல்பணத்தைப் பெறுவதற்கு எத்தனை அலகு உள்நாட்டுப் பணத்தைக் கொடுக்கிறோம் என்பது.
* ஓர் அமெரிக்க டாலரைப் பெற, அதற்கு நிகரான இந்தியப் பணத்தைக் கொடுப்பது.

www.Padasalai.Net

**மூன்று மதிப்பெண் வினா -- விடை**

**28. பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தைப் பட்டியலிடுக.**

1) **தூய வணிகக் கோட்பாடு --** ஏற்றுமதி இறக்குமதிக்கான காரணங்கள், அயல் வாணிக விகிதம், பணமாற்று விகிதம், வாணிகச் செலுத்துநிலை , அயல்நாட்டுச் செலுத்துநிலை ஆகியவற்றை விவரிக்கிறது.

2) **கொள்கைச் சச்சரவுகள் --** அயல் வாணிகத்தின்மீது வரிவிதித்தல், மான்யம் வழங்குதல், பன்னாட்டு விலைபேதம், செலாவணிக் கட்டுப்பாடு, அயல்நாட்டு நேரடி முதலீடு ஆகியவற்றை விவரிக்கிறது.

3) **பன்னாட்டு வாணிகக் கூட்டமைப்பும் ஒன்றியங்களும்**
பன்னாட்டுக் கூட்டமைப்பு, சுங்கவரி ஒன்றியங்கள், பணவியல் ஒன்றியங்கள் பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றை விவரிக்கிறது.

4) **பன்னாட்டு நிதியும் வணிக ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களும்**
பன்னாட்டுப் பணநிதியம், உலக வங்கி, உலக வாணிக நிறுவனம், ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டு அமைப்பு ஆகியவற்றை விவரிக்கிறது.

**29. பன்னாட்டு வாணிகத் தொன்மைக் கோட்பாட்டிற்கும் புதிய கோட்பாட்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை எழுதுக.**

| வ. எண் | தொன்மைப் பன்னாட்டு வாணிகக் கோட்பாடு | புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாடு |
|---|---|---|
| 1) | பன்னாட்டு வணிகத்தை விளக்குவதற்கு உழைப்பு சார்ந்த மதிப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது | பன்னாட்டு வணிகத்தை விளக்குவதற்கு பொது மதிப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது |
| 2) | இது ஒரு காரணி ( உழைப்பு ) மாதிரியாகும் | இது இரு காரணி ( உழைப்பு, மூலதனம் ) மாதிரியாகும் |
| 3) | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உழைப்பாளர்களின் உற்பத்தித் திறன் வேறுபாடே காரணம் என்கிறது | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உற்பத்திக்காரணிகளின் கிடைப்பளவு வேறுபாடே காரணம் என்கிறது |

**30. மொத்த , நிகரப் பண்டப் பரிமாற்று வாணிகவீதத்தைச் சுருக்கமாக எழுதுக.**

| வ. எண் | நிகரப் பண்டமாற்று வாணிகவீதம் | மொத்தப் பண்டமாற்று வாணிகவீதம் |
|---|---|---|
| 1) | F.W.டாசிக் 1927-இல் வடிவமைத்தார் | F.W.டாசிக் 1927-இல் வடிவமைத்தார் |
| 2) | ஏற்றுமதிப் பண்டங்களின் விலைக் குறியீட்டெண்ணிற்கும் இறக்குமதிப் பண்டங்களின் விலைக் குறியீட்டெண்ணிற்கும் இடையிலான விகிதத்தை 100 ஆல் பெருக்கக் கிடைக்கும் தொகை | மொத்த ஏற்றுமதிப் பண்டங்களின் குறியீட்டெண்ணிற்கும் மொத்த இறக்குமதிப் பண்டங்களின் குறியீட்டெண்ணிற்கும் இடையிலான விகிதத்தை 100 ஆல் பெருக்கக் கிடைக்கும் தொகை |
| 3) | $Tn = ( Px / Pm ) X 100$ | $Tg = ( Qx / Qm ) X 100$ |

www.Padasalai.Net

**31)** **வாணிகக் கொடுப்பல்நிலைக்கும் அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலைக்கும் இடையிலான ஏதேனும் மூன்று வேறுபாடுகளைப் பட்டியலிடுக.**

| வ. எண் | வாணிகக் கொடுப்பல்நிலை | அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை |
|---|---|---|
| **1)** | நாடுகளுக்கிடையே பண்டங்கள் மட்டுமே பரிமாறிக் கொள்ளப்படுகிறது | நாடுகளுக்கிடையே பண்டங்கள், பணிகள், பணம், மூலதனம் பரிமாறிக் கொள்ளப்படுகிறது |
| **2)** | புலப்படும் வாணிகம் | பண்டங்கள் மற்றும் பணிகள் வாணிகம் |
| **3)** | ஒரு நாட்டின் குறிப்பிட்ட ஆண்டில் பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிப் பரிவர்த்தனை அறிக்கை | ஒரு நாடு குறிப்பிட்ட காலத்தில் உலகநாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதாரப் பரிவர்த்தனை அறிக்கை. |

**32)** **இறக்குமதிக் கட்டுப்பாடு என்றால் என்ன?**

* இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளில் ஒன்று.
* இறக்குமதிக் கட்டுப்பாடு என்பது இறக்குமதி அளவை நிர்ணயித்தலாகும்.
* இறக்குமதிமீதான வரிவிதித்தலை அதிகப்படுத்தலாம்.
* இறக்குமதி அளவை நிர்ணயித்து இறக்குமதியைக் குறைக்கலாம்.
* கட்டுப்பாடு என்ற முறையில் அத்தியாவசியமற்ற பண்டங்களைக் குறைப்பது.

**33)** **மாறுகின்ற பணமாற்றுவீதத்தின் பொருள் தருக.**

* பரிமாற்றுவீத நிர்ணய முறைகளில் ஒன்று.
* அயல்நாட்டுச் செலாவணிக்கான தேவையும் அளிப்பும் பரிமாற்றுவீதத்தை நிர்ணயிக்கும் முறை.
* நிலையற்ற அல்லது மிதக்கும் பரிமாற்றுவீதம் என்றும் அழைக்கலாம்.

**34)** **வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.**

1. விற்பனையை விரிவுபடுத்துதல்
2. இயற்கை வளங்களைக் கையகப்படுத்துதல்
3. வாணிகப் பரவலாக்கம்
4. போட்டி இடர்களைக் குறைத்தல்

www.Padasalai.Net

| ஐந்து மதிப்பெண் வினா -- விடை | | | |
|---|---|---|---|
| 35 | உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும். | | |
| | வ.எண் | உள்நாட்டு வாணிகம் | பன்னாட்டு வாணிகம் |
| | 1) | ஒரு நாட்டிற்குள் மக்களுக்கும் நிறுவனங்களுக்குமிடையே நடைபெறும் வாணிகம் | பல நாட்டின் மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையிலான வாணிகம் |
| | 2) | உழைப்பும் மூலதனமும் ஒருநாட்டின் பகுதிகளுக்கிடையே தடையில்லாமல் இடம் பெயர்தல் | உழைப்பும் மூலதனமும் நாடுகளுக்கிடையே தடைகளுடன் இடம் பெயர்தல் |
| | 3) | பண்டங்கள், பணிகள் இடம் பெயர்தலில் தடை ஏதுமில்லை | பண்டங்கள், பணிகள் இடம் பெயர்தலைச் சுங்கவரி, பங்களவு முதலான தடைகள் கடினமாக்குகின்றன |
| | 4) | விற்றல் வாங்கலில் ஒரேயொரு பணம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது | விற்றல் வாங்கலில் பலநாட்டுப் பணங்கள் பயன்படுத்தப்படுகின்றன |
| | 5) | புவியமைப்பும் காலநிலைச்சூழலும் கிட்டத்தட்ட ஒரேமாதிரி இருக்கும் | புவியமைப்பும் காலநிலைச்சூழலும் வேறுபடும் இயல்பு கொண்டவை |
| | 6) | வாணிகமும், நிதி நடைமுறைகளும் ஒரே மாதிரியானவை | வாணிகமும், நிதி நடைமுறைகளும் வேறுபடும் போக்குக் கொண்டவை |
| | 7) | அரசமைப்புமுறை, மக்களின் பழக்க வழக்கங்கள், அரசின் கொள்கைக ஆகியவற்றில் வேறுபாடில்லை | அரசமைப்புமுறை, மக்களின் பழக்க வழக்கங்கள், அரசின் கொள்கைக ஆகியவற்றில் வேறுபாடுகளிருக்கும் |
| ( ஏதேனும் ஐந்து மட்டும் ) | | | |

www.Padasalai.Net

36)

**ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை விவரி.**

**ஒப்புமைச் செலவுக் கோட்பாடு**

* டேவிட் ரிகார்டோ 1817 இல் வெளியிட்ட " அரசியல் பொருளாதாரமும் வரிவிதித்தலின் கோட்பாடுகளும்" என்ற நூலில் ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டை விளக்கி எழுதியுள்ளார்.
* பண்டங்களை உற்பத்திச்செய்ய செலவழிக்கப்படும் செலவு வேறுபாடே பன்னாட்டு வாணிபத்திற்கான அடிப்படை என்கிறார் டேவிட் ரிகார்டோ.
* ஒருநாடு உற்பத்திச் செய்யும் பண்டங்களுக்கிடையே தனியடக்கச் செலவில் வேறுபாடில்லை என்றாலும் ஒப்புமைச்செலவில் வேறுபாடு இருக்கும்.
* குறைந்த ஒப்புமைச் செலவில் உற்பத்தி செய்யும் நாடு பன்னாட்டு வாணிகத்தால் பயனடைய முடியும்.

**எடுகோள்கள்**

1) இரண்டு நாடுகள் இரண்டு பொருள்களை உற்பத்தி செய்கின்றன.
2) கூலிச்செலவு மட்டுமே உற்பத்திச் செலவாகும்.
3) உழைப்பாளர்கள் அனைவரும் சமமான திறன் பெற்றவர்கள்
4) உற்பத்தியளவு மாறா விளைவு விதிக்குட்பட்டது.
5) பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடுவதில்லை.

**எடுத்துக்காட்டு விளக்கம்**

| நாடு | துணி | கோதுமை | உள்நாட்டுப் பரிமாற்ற விகிதம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 100 | 120 | 1 மூட்டை கோதுமை = 1.2 மீ துணி |
| இந்தியா | 90 | 80 | 1 மூட்டை கோதுமை = 0.88 மீ துணி |

* இந்தியாவும் அமெரிக்காவும் இருபண்ட உற்பத்தியில் சிறந்து விளங்குகிறது.
* இவ்விரு நாடுகளும் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடாமல் இருந்தால் ஒருமூட்டைக் கோதுமையையும் ஒருமீட்டர் துணியையும் உற்பத்தி செய்ய அமெரிக்கா 220அலகு உழைப்பையும், இந்தியா 170அலகு உழைப்பையும் பயன்படுத்தவேண்டும்.
* மாறாக இவ்விரு நாடுகளும் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட்டால் அமெரிக்கா 200அலகு உழைப்பைப் பயன்படுத்தி இரண்டு மீட்டர் துணியை உற்பத்தி செய்து அதில் ஒருமீட்டர் துணியைக் கொடுத்து ஒருமூட்டைக் கோதுமையை இந்தியாவிடம் பரிமாறிக்கொள்ளலாம்.
* இந்தியா 160அலகு உழைப்பை பயன்படுத்தி இரண்டு மூட்டை கோதுமையை உற்பத்தி செய்து இதில் ஒருமூட்டை கோதுமையைக் கொடுத்து ஒருமீட்டர் துணியை அமெரிக்காவிடம் பரிமாறிக்கொள்ளலாம்.
* இதனால் அமெரிக்காவுக்கு 20அலகு உழைப்பும், இந்தியாவிற்கு 10அலகு உழைப்பும் மிச்சமாகிறது. இது பன்னாட்டு வாணிப நன்மையாகும்.

**திறனாய்வு**

1) உழைப்புச்செலவு உற்பத்திச்செலவில் ஒருபகுதிதான். உழைப்புச்செலவு அடிப்படையில் விவரிக்கப்பட்ட கோட்பாடு உண்மையை பிரதிபலிக்கவில்லை.
2) பல்வேறு நாட்டு உழைப்பாளர்கள் ஒரேயளவு திறன் பெற்றவர்கள் அல்லர்.

www.Padasalai.Net

**37)**

**புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாட்டினை விவாதிக்கவும்.**

**புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாடு**

* சுவீடன் நாட்டு இலி ஹெக்சர் 1919இல் பன்னாட்டு வாணிகக் கோட்பாட்டை விளக்கி, பெர்டில் ஓலின் விரிவுபடுத்தினார்
* நாடுகளுக்கிடையே நிலவும் உற்பத்திவள அளிப்பு வேறுபாடே பன்னாட்டு வாணிகத்திற்கான அடிப்படை என்கிறது புதிய கோட்பாடு.

**கோட்பாடு**

1) நாடுகள் பெற்றுள்ளஉற்பத்திக்காரணிகள் அளவு வேறுபடுகிறது.
2) உற்பத்திக்குத் தேவையான உற்பத்திக்காரணிகளின் விகிதம் வேறுபடுகிறது

இரண்டு காரணங்களால் ஒப்புமைச் செலவு வேறுபடுகிறது.

**எடுகோள்கள்**

1) இரண்டு நாடுகள் இரண்டு உற்பத்திக்காரணிகளைப் பயன்படுத்தி இரண்டு பண்டங்களை உற்பத்தி செய்கின்றன.
2) நாடுகள் வெவ்வேறு அளவுகளில் உற்பத்திக்காரணிகளைப் பெற்றுள்ளது.
3) ஒரேவிதமான உற்பத்தித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன.
4) ஒரே இயல்பான தேவையைப் பெற்று, நிறைவுப்போட்டி நிலவுகிறது.

**விளக்கம்**

* மூலதனம் மிகுதியாக உள்ள நாடு அதிக முதலீட்டில் உற்பத்தியாகும் பண்டங்களை ஏற்றுமதி செய்யும்.
* உழைப்பாளர்கள் மிகுதியாக உள்ள நாடு அதிக உழைப்பினால் உற்பத்தியாகும் பண்டங்களை ஏற்றுமதி செய்யும்.

| விவரங்கள் | இந்தியா | அமெரிக்கா |
|---|---|---|
| உழைப்பின் அளிப்பு | 50 | 24 |
| மூலதனத்தின் அளிப்பு | 40 | 30 |
| மூலதன --- உழைப்பு விகிதம் | 40/50 = 0.8 | 30/24 = 1.25 |

* ஒருநாட்டின் மூலதன அளவிற்கும், மற்ற உற்பத்திக்காரணிகளின் அளவிற்குமான மற்ற நாடுகளின் விகிதத்தைவிட அதிகமாக இருந்தால் அந்த நாட்டை மூலதனம் மிகுந்த நாடு எனக் கருதலாம்.
* இந்தியா அதிக மூலதனம் உள்ள நாடு (மூலதன -- உழைப்பு விகிதம் 0.8 ) போன்று தோன்றினாலும் அமெரிக்காவே அதிக மூலதனம் (மூலதன -- உழைப்பு விகிதம் 1.25 ) உள்ள நாடாகும்.

**குறைபாடுகள்**

**1)** உற்பத்திக்காரணிகளின் இருப்பளவு காலத்திற்கு ஏற்றாற்போல் மாறலாம்.
**2)** உற்பத்திக்காரணிகளின் திறன் நாடுகளிடையே வேறுபடலாம்.

38)

**ஜேக்கப் வைனரால் வடிவமைக்கப்பட்ட வாணிகவீத வகைகளை விவரி.**

* ஜேக்கப் வைனர் உற்பத்திக்காரணிகள் பரிமாற்றத்தின் அடிப்படையில் வாணிகவீதங்களை இருவகையாக வகைப்படுத்துகிறார்.

1) ஒற்றைக்காரணி வாணிகவீதம்
2) இரட்டைக்காரணி வாணிகவீதம்

**1) ஒற்றைக்காரணி வாணிகவீதம்**

* ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்ணிற்கும் இறக்குமதி விலைக் குறியீட்டு எண்ணிற்கும் இடையேயான விகிதத்தை ஏற்றுமதிக்கான உற்பத்தித் தொழில்துறையின் உற்பத்தித்திறன் குறியீட்டெண்ணின் மதிப்பால் மாற்றம் செய்யப்பட்ட வீதமே ஒற்றைக்காரணி வாணிகவீதம்.

$$T_f = (P_x / P_m) X F_x$$

$T_f$ --- ஒற்றைக்காரணி வாணிகவீதம்

$P_x$ --- ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்

$P_m$ --- இறக்குமதி விலைக் குறியீட்டெண்

$F_x$ --- ஏற்றுமதிக்குப் பொருள் உற்பத்தி செய்யும் தொழில்துறையின் உற்பத்தித்திறன் குறியீட்டெண்

**2) இரட்டைக்காரணி வாணிகவீதம்**

* ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்ணிற்கும் இறக்குமதி விலைக் குறியீட்டு எண்ணிற்கும் இடையேயான விகிதத்தை ஏற்றுமதிக்கான உற்பத்தித் தொழில் துறையின் உற்பத்தித்திறன் குறியீட்டெண் மற்றும் இறக்குமதிக்கான உற்பத்தித் தொழில் துறையின் உற்பத்தித்திறன் குறியீட்டெண்ணின் மதிப்பால் மாற்றம் செய்யப்பட்ட வீதமே இரட்டைக்காரணி வாணிகவீதம்.

$$T_{ff} = (P_x / P_m) X (F_x / F_m)$$

$T_{ff}$ --- இரட்டைக்காரணி வாணிகவீதம்

$P_x$ --- ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்

$P_m$ --- இறக்குமதி விலைக் குறியீட்டெண்

$F_x$ --- ஏற்றுமதிக்குப் பொருள் உற்பத்தி செய்யும் தொழில்துறையின் உற்பத்தித்திறன் குறியீட்டெண்

$F_m$ --- இறக்குமதிக்குப் பொருள் உற்பத்தி செய்யும் தொழில்துறையின் உற்பத்தித்திறன் குறியீட்டெண்

www.Padasalai.Net

<table>
<tr><td rowspan="5">39)</td><td colspan="3">அயல்நாட்டுச் செலுத்துநிலையின் கூறுகளை அட்டவணை வடிவில் விளக்குக.<br>* வரவு மற்றும் பற்று இனங்கள் நேர்க்கிடையாக அயல்நாட்டு செலுத்துநிலை அறிக்கையில் பதியப்பட்டு மூன்று இனங்களாக வகைப்படுத்தப்படுகிறது.</td></tr>
<tr><td>நடப்புக் கணக்கு</td><td>மூலதனக் கணக்கு</td><td>மையவங்கி நிதிச்சொத்துக் கையிருப்புக் கணக்கு</td></tr>
<tr><td>பன்னாட்டு பண்ட பரிமாற்றங்கள், பன்னாட்டுப் பணி பரிமாற்றங்கள், பன்னாட்டு ஒருதரப்புச் செலுத்துகைகள் இந்தக் கணக்கின்கீழ் பதியப்படுகிறது.</td><td>வெளிநாட்டுக் கடன், அயல்நாட்டு முதலீடு, பன்னாட்டு பண அங்காடி, பன்னாட்டு நிதி அங்காடி, விற்றல் வாங்கல் பரிமாற்றங்கள் இந்தக் கணக்கின்கீழ் பதியப்படுகிறது.</td><td>மையவங்கியின் கையிருப்பில் உள்ள செலாவணிச் சொத்துகளில் நடைபெறும் பரிமாற்றங்கள் இந்தக் கணக்கின்கீழ் பதியப்படுகிறது.<br><br>( தங்கத்தின் இருப்பு, வெளிநாட்டுப் பணம், சிறப்பு எடுப்புரிமை, பன்னாட்டுப்பணநிதியத்தின் நிகரக் கடன்பெறும் தகுதி நிலை ஆகியவை பதிவு செய்யப்படுகிறது )</td></tr>
<tr><td>உபரி எழும்</td><td>உபரி எழும்</td><td>நடப்பு மற்றும் மூலதனக்கணக்கில் உபரி எழுந்தால் கையிருப்புக்கணக்கில் சேர்க்கப்படும்</td></tr>
<tr><td>பற்றாக்குறை விழும்</td><td>பற்றாக்குறை விழும்</td><td>நடப்பு மற்றும் மூலதனக்கணக்கில் பற்றாக்குறை விழுந்தால் கையிருப்பிலிருந்து எடுத்துச் செலவிடப்படும். எனவே மைய வங்கித் தீர்வுக் கணக்கு என்ற பெயர் வழங்கப்பட்டது.</td></tr>
</table>

www.Padasalai.Net

| | |
|---|---|
| 40) | **அயல்நாட்டுச் செலுத்துநிலைச் சமமின்மையின் வகைகளை விவரி.**<br>**அயல்நாட்டுச் செலுத்துநிலைச் சமமின்மையின் வகைகள்**<br>* அயல்நாட்டுச் செலுத்துநிலை சமனற்ற நிலையினை மூன்று வகையாக வகைப்படுத்தப்படுகிறது.<br>* 1) சுழற்சி சமனற்ற நிலை<br>2) நீண்டகாலச் சமனற்ற நிலை<br>3) கட்டமைப்புச் சமனற்ற நிலை<br>**1) சுழற்சி சமனற்ற நிலை**<br>* வாணிகச் சுழற்சியின் விளைவாக எழும் அயல்நாட்டுச் செலுத்துச் சமனற்ற நிலையைச் சுழற்சி சமனற்ற நிலை என்கிறோம்.<br>* இரண்டு காரணங்களால் நிகழ்கிறது.<br>**1)** நாடுகள் வாணிகச் சுழற்சியின் வெவ்வேறு கட்டங்களில் இருப்பது<br>**2)** நாடுகளுக்கிடையே தேவை நெகிழ்வு அளவு மாறுபடுவது<br><br>**2) நீண்டகாலச் சமனற்ற நிலை**<br>* நாடுகள் பொருளாதார வளர்ச்சிப் படிநிலைகளில் முன்னேறும்பொழுது நீண்டகாலத் தலைகீழ் மாற்றங்கள் நிகழ்வதால் உண்டாகும் அயல்நாட்டுச் செலுத்துச் சமனற்ற நிலையை நீண்டகாலச் சமனற்ற நிலை என்கிறோம்.<br>* வளர்ச்சியின் துவக்கநிலையில் ஒருநாட்டின் உள்நாட்டு முதலீடு உள்நாட்டுச் சேமிப்பைவிடக் கூடுதலாக இருக்கும்.<br>* இறக்குமதி ஏற்றுமதியைவிட அதிகமாக இருக்கும்.<br>* இந்தியாவில் 1951-இலிருந்தே இந்தச் சூழ்நிலை நிலவுகிறது.<br><br>**3) கட்டமைப்புச் சமனற்ற நிலை**<br>* நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றங்களினால் நிகழும் அயல்நாட்டுச் செலுத்துச் சமனற்ற நிலையை கட்டமைப்புச் சமனற்ற நிலை என்கிறோம்.<br>* மாற்று வழங்கல் ஆதாரங்களைக் கண்டுபிடித்தல், செயற்கையான பதிலீட்டுப் பண்டங்களைக் கண்டுபிடித்தல், உற்பத்தி வளங்கள் தீர்ந்து போதல் அல்லது போக்குவரத்து வழிகளும் செலவுகளும் மாற்றமடைதல் போன்றவையே பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம் என்கிறோம். |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 41) | **பணமாற்று வீதம் எவ்வாறு இரண்டுமுறைகளில் நிர்ணயமாகிறது என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**<br>**பணமாற்று வீதம்**<br>* பணமாற்று வீதத்தை அயல்நாட்டுச் செலாவணி மாற்றுவீதம் என்றும் அழைக்கலாம்.<br>**அயல்நாட்டுச் செலாவணி இலக்கணம்**<br>* ஒருநாட்டின் பணத்தை மற்ற நாட்டுப் பணமாக மாற்றுவது மற்றும் ஒருநாட்டிலிருந்து பிற நாட்டிற்குப் பணத்தை அனுப்பும் முறையே ஆகும்.<br>* பரிமாற்றுவீதம் இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது.<br>1) நிலையான பரிமாற்றுவீதம்<br>2) நிலையற்ற ( மாறுபடும் ) பரிமாற்றுவீதம்<br><br>**1) நிலையான பரிமாற்றுவீதம்**<br>* ஒருநாட்டின் அரசாங்கம் மைய வங்கியின்மூலம் பரிமாற்று வீதத்தை நிர்ணயித்தால் அதை நிலையான பரிமாற்றுவீதம் என்கிறோம்.<br>* தங்கமாற்றுப் பன்னாட்டுப் பணவியல் முறையில் (**Gold Standard** ) நாடுகளின் பரிமாற்று மதிப்பு தங்கத்தின் அளவில் நிர்ணயிக்கப்பட்டது.<br>* மாறாத பரிமாற்றுவீதம் என்றும், நிலைநிறுத்தப்பட்ட பரிமாற்றுவீதம் என்றும் அழைக்கப்படுகிறது.<br><br>**2) நிலையற்ற ( மாறுபடும் ) பரிமாற்றுவீதம்**<br>* அந்நியச் செலாவணிச் சந்தை விசைகளான மாறுகின்ற அயல்நாட்டுச் செலாவணிக்கான தேவையும் அளிப்பும் பரிமாற்றுவீதத்தை நிர்ணயிக்கும் முறையே மாறுகின்ற பரிமாற்றுவீதமாகும்.<br>* மிதக்கும் பரிமாற்றுவீதம் என்றும் அழைக்கலாம். |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 42) | **வெளிநாட்டு நேரடி முதலீட்டினால் ஏற்படும் நன்மைகளைக் குறிப்பிடுக.**<br>**வெளிநாட்டு நேரடி முதலீடு**<br>* வேறுநாட்டில் முதலீடு செய்து நிறுவனத்தின் மேலாண்மையை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதையே வெளிநாட்டு நேரடி முதலீடு என்கிறோம்.<br>**வெளிநாட்டு நேரடி முதலீட்டினால் ஏற்படும் நன்மைகள்**<br>1) வெளிநாட்டு நேரடி மூலதனம், அது சென்றடையும் நாட்டின் மூலதன அளவை உயர்த்தி வேலைவாய்ப்பு, வருமான அளவையும் அதிகரிக்கும்.<br>2) வெளிநாட்டு நேரடி மூலதனம் சென்றடையும் நாட்டிற்குப் புதிய தொழில்நுட்பத்தைக் கொண்டுவருகிறது.<br>3) வெளிநாட்டு நேரடி முதலீடு நுழையும் நாட்டின் அரசுக்கு நிறுவன இலாபவரி செலுத்துவதன்மூலம் வருவாயைக் கொண்டுவருகிறது.<br>4) இலாபத்தின் ஒருபகுதியை மறுமுதலீடு செய்வதன்மூலம் தொழில்வளம் பெருகும்.<br>5) புதிய தொழில் மேலாண்மை முறைகளை அறிமுகப்படுத்தும்.<br>6) ஏற்றுமதியை அதிகப்படுத்தி இறக்குமதிக்கான அவசியத்தைக் குறைத்து அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலைச் சமமின்மையை நீக்கும்.<br>7) போட்டியை உருவாக்கி உள்நாட்டு முற்றுரிமையைத் தகர்க்கும்.<br>8) வெளிநாட்டு நேரடி மூலதனம் முதலீட்டையும் அயல்நாட்டுச் செலாவணியையும் கொண்டுவருவதன்மூலம் சேமிப்பு, முதலீடு இடைவெளியையும் நிரப்ப உதவுகிறது.<br>9) உள்நாட்டுத் துணைத்தொழில் நிறுவனங்கள் வளரவும், வெளிநாட்டு நிறுவனங்களோடு இணைந்து உள்நாட்டுச் சிறுதொழில்கள் வளர உதவும்.<br>10) உள்நாட்டுத் தொழில்முனைவோர்களை வெளிநாட்டு மூலதனம் மற்ற நாடுகளில் முதலீடு செய்யத் தூண்டுகிறது. |
| | **( ஏதேனும் ஐந்து மட்டும் )** |

www.Padasalai.Net

## K.J.கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி-- இராமநாதபுரம் மாவட்டம்

### பன்னிரண்டாம் வகுப்பு -- பொருளியல்

### இயல் -- ( 8 ) -- பன்னாட்டுப் பொருளாதார அமைப்புகள்

**சரியான விடையைத் தெரிவு செய்க**

| | | |
|---|---|---|
| **1)** | பன்னாட்டுப் பண நிதியம் கீழ்க்காணும் இந்த மாநாட்டில் உருவாக்கப்பட்டது.<br>அ) பாண்டுங் மாநாடு ஆ) சிங்கப்பூர்<br>இ) பிரிட்டன் வூட்ஸ் மாநாடு ஈ) தோஹா மாநாடு | **இ) பிரிட்டன் வூட்ஸ் மாநாடு** |
| **2)** | பன்னாட்டுப் பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்<br>அ) வாஷிங்டன் டி.சி ஆ) நியூயார்க்<br>இ) வியன்னா ஈ) ஜெனிவா | **அ) வாஷிங்டன் டி.சி** |
| **3)** | ஐபிஆர்டி இவ்வாறாகவும் அழைக்கப்படுகிறது<br>அ) பன்னாட்டுப் பண நிதியம் ஆ) உலக வங்கி<br>இ) ஆசியான் ஈ) பன்னாட்டு நிதிக்கழகம் | **ஆ) உலக வங்கி** |
| **4)** | சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர்<br>அ) தாள் தங்கம் ஆ) பங்களவுகள் இ) தன் விருப்ப ஏற்றுமதித் தடைகள் ஈ) இவை ஏதுமில்லை | **அ) தாள் தங்கம்** |
| **5)** | நீண்டகாலக் கடன் வழங்கும் நிதி நிறுவனம்<br>**அ) உலக வங்கி** ஆ) பன்னாட்டுப் பண நிதியம்<br>இ) உலக வர்த்தக அமைப்பு ஈ) பிரிக்ஸ் | **அ) உலக வங்கி** |
| **6)** | கீழ்க்காணும் நாடுகள் எது சார்க் அமைப்பின் உறுப்பினர் இல்லை?<br>அ) இலங்கை ஆ) ஜப்பான்<br>இ) வங்காளதேசம் ஈ) ஆப்கானிஸ்தான் | **ஆ) ஜப்பான்** |
| **7)** | பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு கீழ்க்காணும் இதன் துணை அமைப்பாகும்.<br>அ) பன்னாட்டுப் பண நிதியம் ஆ) உலக வங்கி<br>இ) சார்க் ஈ) ஆசியான் | **ஆ) உலக வங்கி** |
| **8)** | காப்புரிமை, பதிப்புரிமை, வாணிக இரகசியம் போன்றவை ........................... உடன் தொடர்புடையவை.<br>அ) வணிகம்சார் சொத்துரிமை ஆ) வணிகம் சார்ந்த முதலீட்டு வழிமுறைகள் இ) காட்ஸ் ஈ) NAMA | **அ) வணிகம்சார் சொத்துரிமை** |
| **9)** | உலக வாணிக அமைப்பின் முதலாவது அமைச்சர்கள் அளவிலான மாநாடு நடைபெற்ற இடம்<br>அ) சிங்கப்பூர் ஆ) ஜெனிவா<br>இ) சியாட்டில் ஈ) டோஹா | **அ) சிங்கப்பூர்** |
| **10)** | ஆசியான் கூட்டங்கள் ......................... ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்.<br>அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5 | **ஆ) 3** |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **11)** | கீழ்க்காண்பவற்றில் எது SAARC உறுப்பினர் நாடு அல்ல?<br>அ) பாகிஸ்தான் ஆ) ஸ்ரீலங்கா இ) பூடான் ஈ) சீனா | **ஈ) சீனா** |
| **12)** | சார்க் உச்சி மாநாடு ...................... ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது.<br>அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5 | **அ) 2** |
| **13)** | ஆசியான் அமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்<br>அ) ஜகார்த்தா ஆ) புது டெல்லி<br>இ) கொழும்பு ஈ) டோக்கியோ | **அ) ஜகார்த்தா** |
| **14)** | பிரிக் ( BRIC ) என்ற சுருக்கச்சொல் கோர்க்கப்பட்ட ஆண்டு<br>அ) 2001 ஆ) 2005 இ) 2008 ஈ) 2010 | **அ) 2001** |
| **15)** | ஆசியான் அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு<br>அ) 1965 ஆ) 1967 இ) 1972 ஈ) 1997 | **ஆ) 1967** |
| **16)** | பத்தாவது பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாடு ஜீலை 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற இடம்<br>அ) பீஜிங் ஆ) மாஸ்கோ<br>இ) ஜோகன்ஸ்பர்க் ஈ) பிரசிலியா | **இ) ஜோகன்ஸ்பர்க்** |
| **17)** | புதிய மேம்பாட்டு வங்கி இந்த அமைப்புடன் தொடர்புடையது<br>அ) பிரிக்ஸ் ஆ) டபிள்யூ.டி.ஓ<br>இ) சார்க் ஈ) ஆசியான் | **அ) பிரிக்ஸ்** |
| **18)** | ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும் ஆறு நாடுகளில் சேராத நாடு<br>அ) சீனா ஆ) ஜப்பான்<br>இ) இந்தியா ஈ) வடகொரியா | **ஈ) வடகொரியா** |
| **19)** | சார்க் வேளாண் தகவல் மையம் துவங்கிய ஆண்டு<br>அ) 1985 ஆ) 1988 இ) 1992 ஈ) 1998 | **ஆ) 1988** |
| **20)** | பெனிலக்ஸ் ( BENELUX ) என்பது இதன் வடிவமாகும்.<br>அ) தடையற்ற வாணிகப்பகுதி<br>ஆ) பொருளாதார ஒன்றியம்<br>இ) பொது அங்காடி ஈ) சுங்கவரி ஒன்றியம் | **ஈ) சுங்கவரி ஒன்றியம்** |

www.Padasalai.Net

| இரண்டு மதிப்பெண் வினா -- விடை | |
|---|---|
| **21)** | **சிறப்பு எடுப்புரிமைகள் என்பதன் பொருளை எழுதுக.**<br>* பன்னாட்டு நீர்மைத்தன்மையை உருவாக்க 1969--இல் நிதியம் பன்னாட்டுப் பண இருப்புகளை ஏற்படுத்தியது.<br>* பன்னாட்டு மதிப்பளவையாகவும் செலுத்துநிலையாகவும் செயல்படுகின்றது. |
| **22)** | **ஆசியானின் இரண்டு நோக்கங்களைக் குறிப்பிடுக.**<br>**1)** பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி, பண்பாட்டு மாற்றம் ஆகியவற்றை விரைவுபடுத்துவது<br>**2)** ஐநாசபையின் கொள்கைகளைக் கடைபிடித்து தென்கிழக்காசியப் பகுதியில் அமைதியையும், உறுதியான அரசியல் சூழ்நிலையையும் மேம்படுத்துவது |
| **23)** | **ஐபிஆர்டி - இன் ஏதேனும் இரண்டு கடன் திட்டங்களின் பெயர்களைச் சுட்டிக்காட்டுக.**<br>**1)** உலக வங்கியின் இருப்பிலுள்ள சொந்த நிதியிலிருந்து கடன் வழங்குவது<br>**2)** கடன் நிதியிலிருந்து கடன் வழங்குவது<br>**3)** ஈட்டுறுதி வழங்கிக் கடன் பெற்றுத் தருவது |
| **24)** | **பொது அங்காடி -- வரையறு.**<br>* புவியின் குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வாணிகத்துக்காகவும், உற்பத்திக்காரணிகளின் இடப்பெயர்வுக்காகவும் அமைக்கும் அமைப்பு<br>* **எ.கா --** ஐரோப்பிய பொது அங்காடி |
| **25)** | **தடையற்ற வாணிகப் பகுதி என்றால் என்ன?**<br>* இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பினர் நாடுகள் அனைத்தும் ஒரே மண்டலமாகக்கருதி வாணிகத் தடைகளைக் குறைக்க ஒத்துழைப்பது.<br>* **எ.கா --** SAFTA, EFTA |
| **26)** | **எங்கு, எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவக்கப்பட்டது?**<br>* நேபாளத் தலைநகரம் காட்மண்டு இதன் தலைமைச் செயலகமாக ஜனவரி 16, 1987 முதல் செயல்படத் துவங்கியது |
| **27)** | **உலக வங்கிக் குழுமத்தின்கீழ் செயல்படும் இரண்டு துணை நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**<br>**1)** பன்னாட்டு நிதிக் கழகம் ( **IFC – 1956** )<br>**2)** பன்முக முதலீட்டு ஒப்புறுதி முகமை ( **MIGA – 1958** )<br>**3)** பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு ( **IDA – 1960** )<br>**4)** முதலீட்டுச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான பன்னாட்டு மையம் ( **ICSID –1966** ) |

www.Padasalai.Net

| மூன்று மதிப்பெண் வினா -- விடை | |
|---|---|
| 28) | **பொருளாதார ஒருங்கிணைப்பின் பல்வேறு வடிவங்களைக் குறிப்பிடுக.**<br>**1) தடையற்ற வாணிகப்பகுதி**<br>* இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பினர் நாடுகள் அனைத்தும் ஒரே மண்டலமாகக்கருதி வாணிகத் தடைகளைக் குறைக்க ஒத்துழைப்பது.<br>* **எ.கா --** SAFTA, EFTA<br>**2) சுங்கவரி ஒன்றியம்**<br>* உறுப்பினர்களுக்கிடையேயான வாணிகத்தில் வரி விதிக்காமலும், உறுப்பினர் அல்லாதவர்களுடனான வாணிகத்தில் பொது வரிவிதிக்கும் அமைப்பு<br>* **எ.கா --** BENELUX<br>**3) பொது அங்காடி**<br>* புவியின் குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வாணிகத்துக்காகவும், உற்பத்திக்காரணிகளின் இடப்பெயர்வுக்காகவும் அமைக்கும் அமைப்பு<br>* **எ.கா --** ஐரோப்பிய பொது அங்காடி<br>**4) பொருளாதார ஒன்றியம்**<br>* பொது அங்காடியையும் சுங்கவரி ஒன்றியத்தையும் ஒன்றிணைத்து உருவாக்கப்படும் அமைப்பு<br>* பண்டங்கள், பணிகள் உற்பத்தி, பண்டங்கள், பணிகள், காரணிகள் இடப்பெயர்வு, உறுப்பினரல்லாத நாடுகளின்மீது வரி ஆகியவை உண்டு.<br>* எடுத்துக்காட்டு -- ஐரோப்பியப் பொருளாதார ஒன்றியம் |
| 29) | **வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள் என்றால் என்ன?**<br>* சிலநாடுகள் வாணிகத்தில் போட்டியைத் தவிர்க்க பிறநாட்டுப் பொருளாதாரத்துடன் தங்களுடைய பொருளாதாரத்தை இணைத்துப் புதிய வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்கின்றன<br>* நாடுகளுக்கிடையே சுமூக நன்மை தரும் வாணிகத் தொகுதிகள் பலவிதங்களில் அமைகின்றன<br>* சமூக நன்மைக்காக நாடுகள் அமைக்கும் வாணிகத் தொகுதிகள் பரஸ்பர நல்லிணக்கத்திற்கு உதவுகிறது<br>* தடையற்ற வாணிகப்பகுதி, சுங்கவரி ஒன்றியம், பொது அங்காடி, பொருளாதார ஒன்றியம் ஆகிய வடிவங்களில் ஒருங்கிணைப்பு நிகழ்கிறது |
| 30) | **ஐஎம்எப் - இன் கடன் வழங்கும் திட்டங்களில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக**<br>**1) விரிவாக்கப்பட்ட நிதி வசதி**<br>* உறுப்பு நாடுகள் தங்களின் மூலதனப் பங்குத்தொகையில் 140% அளவுக்கு அடிப்படைக் கடன் தொகைக்குமேல் கடன் பெற அனுமதிப்பது<br>* மூன்று ஆண்டுகளில் குறைந்த வட்டியில் திரும்பச்செலுத்தும் கடன் திட்டம்<br>**2) தாங்கிருப்பு வசதி**<br>* 1969 இல் உணவு தானியங்கள் விளைவிக்கும் நாடுகள், தானிய சேமிப்புக் கிடங்குகள் அமைத்து உணவுப் பொருள்கள் விலையைக் கட்டுப்படுத்த வழங்கப்படும் கடன் வசதி.<br>**3) துணை நிதி வசதி**<br>* மூலதனப் பங்களவு சிறிதாக உள்ள உறுப்பு நாடுகள் அயல்நாட்டுச் செலுத்துநிலை இடர்களிலிருந்து விடுபடுவதற்கான நிதி உதவித் திட்டம் |

www.Padasalai.Net

| | |
|---|---|
| **31)** | **பலதரப்பு ஒப்பந்தம் என்றால் என்ன?**<br>* பன்னாட்டு வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள்<br>* பன்னாட்டு வாணிகத்தில் ஒரே குழுவாக ஒன்றிணைந்து செயல்படும் நாடுகளின் கூட்டமைப்பு<br>* வழக்கமாக தடையற்ற வாணிக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு செயல்படுபவர்கள் |
| **32)** | **பிரிக்ஸ் மாநாடு 2018 இன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக.**<br>* பிரேசில், ரஷ்யா, சீனா, இந்தியா, தென்னாப்பிரிக்கா ஆகிய வேகமாக வளர்ந்துவரும் நாடுகளின் முதலெழுத்துகளின் சுருக்கப்பெயரே **BRICS.**<br>* 2009 இலிருந்து ஆண்டுக்கொருமுறை உச்சி மாநாடுகளை நடத்தி வருகிறது.<br>* தென்னாப்பிரிக்காவின் ஜோகன்ஸ்பர்க்கில் ஜீலை2018இல் 10ஆவது உச்சி மாநாடு நடைபெற்றது<br>* உள்ளடக்கிய வளர்ச்சி, வாணிகச் சிக்கல்கள், பகிரத்தக்க வளமை, உலகளாவிய அரசு நிர்வாகம், நாடுகளின் அமைதி, பாதுகாப்பு ஆகியவை மாநாட்டின் விவாதத் தலைப்புகள் ஆகும். |
| **33)** | **சார்க்கின் பணிகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.**<br>**1.** தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பைப் பராமரித்தல்<br>**2.** உறுப்பினர் நாடுகளின் பொதுவான சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல்<br>**3.** உறுப்பினர் நாடுகளிடையிலான உறவை மேம்படுத்துதல்<br>**4.** வறுமை ஒழிப்புத் திட்டங்கள்மூலம் ஏழ்மையை ஒழிப்பது<br>**5.** பயங்கரவாதச் செயல்களைத் தடுப்பது |
| **34)** | **பிரிக்ஸ் அமைப்பின் சாதனைகளைப் பட்டியலிடுக.**<br>**1.** அவசரகாலக் கையிருப்பு வசதியை உருவாக்கியதால் உறுப்பு நாடுகளின் பொருளாதார, நிதித்துறைகளில் ஒன்றிணைந்து செயல்படுதலை பலப்படுத்தியது.<br>**2.** ஆசிய வளர்ச்சி வங்கி, உலக வங்கி போன்று செயல்படும் புதிய வளர்ச்சி வங்கியை சீனாவின் சாங்காயில் தலைமை அலுவலகத்துடன் செயல்படும் விதமாக ஆறாவது உச்சி மாநாட்டின்படி அமைக்கப்பட்டது.<br>**3.** பிரிக்ஸ் நாடுகளின் பொருளாதாரப் பலமும், மக்கள்தொகை வளமும் உலக அளவில் பன்னாட்டு உறவு நிர்வாகத்தில் கூடுதல் ஆதிக்கம் பெறும் நிலைமை பெற்றுள்ளது. |
| **ஐந்து மதிப்பெண் வினா -- விடை** | |
| **35)** | **பன்னாட்டுப் பணநிதியத்தின் நோக்கங்களை விளக்குக.**<br>**1.** உறுப்பு நாடுகளிடையே பன்னாட்டுப் பரிமாற்றத்தில் பணவியல் ஒத்துழைப்பை மேம்படுத்துவது<br>**2.** பன்னாட்டு வணிகம் வேகமாகவும் சமச்சீராகவும் வளர உதவுவது<br>**3.** பண மதிப்பிறக்கம் செய்வதைத் தடுத்து, நாணய மாற்றுவிகிதம் நிலையாக இருக்கச் செய்தல்<br>**4.** உறுப்பு நாடுகள் விதிக்கும் செலாவணிக் கட்டுப்பாடுகளைக் குறைத்தல்<br>**5.** அனைத்து நாடுகளுக்கிடையிலான பலதரப்பு நடப்புக் கணக்கு, பணப் பரிமாற்றமுறையை நிறுவுவது<br>**6.** வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகளில் மூலதனம் செய்வதை எளிதாக்குவதன்மூலம், வளரும் நாடுகளின் உற்பத்தி வளங்களையும் மக்களின் வாழ்க்கைத்தரத்தையும் மேம்படுத்துவது<br>**7.** பன்னாட்டு நீர்மைச் சிக்கலுக்குத் தீர்வு காண்பது |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 36) | **உலக வங்கியின் பணிகளை வெளிக் கொணர்க.**<br>**உலக வங்கியின் பணிகள் :**<br>* உறுப்புநாடுகளின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நீண்டகாலக் கடன் வழங்கும் பணியைச் செய்கிறது.<br>* உலகவங்கி ஒப்பந்தத்தின் முதல் பிரிவின்படி கீழ்க்காணும் பணிகளைச் செய்கிறது.<br>**1) உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் முதலீட்டுக்கான கடன் உதவி**<br>* உறுப்பு நாடுகளின் நில எல்லைக்குட்பட்டபகுதிகளின் மறுகட்டமைப்பு க்கும் மேம்பாட்டுக்கும் உதவி செய்யும் பணியைச் செய்கிறது<br>* பின்தங்கிய நாடுகளில் உற்பத்தி வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவுகிறது<br>**2) பன்னாட்டு வாணிகத்தின் சரிவிகித வளர்ச்சி**<br>* பன்னாட்டுக் கடன் மூலதனம் வழங்கி உறுப்பு நாடுகள் அனைத்தும் சரிவிகிதப் பன்னாட்டு வாணிப நீண்டகால வளர்ச்சியடைய உதவுவதால் அயல்நாட்டுச் செலுத்துநிலை சமநிலையை அடையும்.<br>**3) கடன் மற்றும் ஈட்டுறுதி வழங்குதல்**<br>* முக்கியமான திட்டங்களுக்கு கடன் வழங்குகிறது<br>* பிறவழிகளில் கடன்பெற ஈட்டுறுதி வழங்குகிறது<br>**4) வெளிநாட்டுத் தனியார் முதலீட்டிற்கு ஊக்கமளித்தல்**<br>* தனியார் வெளிநாட்டு முதலீட்டாளர்கள்மூலம் உலக வங்கியின் உறுப்பு நாடுகளுக்குக் கடன் வழங்க ஈட்டுறுதிகள் வழங்கும் பணியைச் செய்து வெளிநாட்டு மூலதனத்திற்கு ஊக்கமளிக்கிறது<br>* வெளிநாட்டுத் தனியார் மூலதனத்துடன் சேர்ந்து சொந்த நிதியிலிருந்தும் கடன் நிதியிலிருந்தும் கடன் வழங்குகிறது<br>**5) தொழில்நுட்பப் பணிகள்**<br>* வாஷிங்டனில் அமைந்துள்ள பணியாளர் கல்லூரி நிபுணர்களைக்கொண்டு உறுப்பு நாடுகளுக்குத் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குகிறது |
| 37) | **இந்தியச் சமூகப் பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூ.டி.ஓ - இன் பங்கினை விவாதிக்க.**<br>* உலக வணிக அமைப்பு செயல்படத் தொடங்கிய ஆண்டிலிருந்தே இந்தியா உறுப்புநாடாகும்<br>* உலக வணிக அமைப்பில் உறுப்பினரானதால் இந்தியா கீழ்க்கண்ட நன்மைகளைப் பெற்றுள்ளது<br>1. இறக்குமதிவரி குறைக்கப்பட்டதால் இடுபொருள்கள், உதிரிபாகங்கள், இயந்திரங்கள் ஆகியன இந்தியாவுக்குக் குறைவான விலையில் அதிகமாகக் கிடைத்துள்ளன.<br>2. நாடுகளுடன் தனித்தனியே ஒப்பந்தம் போடாமல் பலநாடுகளில் இந்தியா பண்டங்களைவிற்பனை செய்யமுடிகிறது<br>3. குறைந்த செலவில் உயர்வகைத் தொழில்நுட்பம் கிடைத்துள்ளது<br>4. பன்னாட்டுப் பரிமாற்றம் தொடர்புள்ள புகார்களுக்கு எளிதில் தீர்வு கிடைக்கும்நிலை உருவாகியுள்ளது<br>5. பரந்த அங்காடித் தகவலிலிருந்து இந்திய ஏற்றுமதியாளர்கள் பலனடைகின்றனர் |

www.Padasalai.Net

| | |
|---|---|
| **38)** | **குறிப்பு எழுதுக -- அ) சார்க் ஆ) பிரிக்ஸ்**<br>**அ) சார்க் ( SAARC )**<br>* தெற்காசிய நாடுகளின் பொருளாதார, சமூக, பண்பாட்டு ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி, வளரும் நாடுகளுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ள டிசம்பர் 8, 1985 இல் துவக்கப்பட்டது<br>* இந்தியா, வங்காளதேசம், பூட்டான், மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய ஏழு நாடுகள் உறுப்பு நாடுகள்<br>* ஏப்ரல் 2007 இல் ஆப்கானிஸ்தான் எட்டாவது நாடாக இணைந்தது<br>* பொருளாதார, சமூக மேம்பாடு அடைவது அடிப்படைக் குறிக்கோள்<br>* ஜனவரி 16, 1987 இல் நேபாளம் -- காட்மண்டில் தலைமைச் செயலகம் செயல்படத் துவங்கியது<br>* 1985இல் முதல் உச்சி மாநாடு வங்காளதேசம் -- டாக்காவில் நடைபெற்றது<br>* இரண்டாண்டுக்கு ஒருமுறை உச்சி மாநாடு நடைபெறுகிறது<br>* 2018இல் இருபதாவது உச்சி மாநாடு இலங்கையில் நடைபெற்றது<br><br>**ஆ) பிரிக்ஸ் ( BRICS )**<br>* பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய வளர்ந்துவரும் நாடுகளின் முதல் எழுத்தைக்கொண்டு சுருக்கப்பெயர் பிரிக் **(BRIC)** என்று அழைக்கப்பட்டது<br>* பிரிக் என்ற சுருக்கப்பெயர் 2001 இல் பயன்பாட்டுக்கு வந்தது<br>* 2010 இல் தென்னாப்பிரிக்காவை உள்ளடக்கி **BRICS** என்று அழைக்கப்பட்டது<br>* சீனாவின் ஷாங்காய் நகரில் தலைமை அலுவலகம் செயல்படுகிறது<br>* ஆண்டுக்கு ஒருமுறை உச்சி மாநாடு நடைபெறுகிறது<br>* 2009இல் முதல் உச்சி மாநாடு ரஷ்யாவின் மாஸ்கோவில் நடைபெற்றது<br>* இந்தியாவில் 4-ஆவது மாநாடு 2012-இலும், 8-ஆவது மாநாடு 2016-இலும், தென்னப்பிரிக்காவில் 10-ஆவது மாநாடு ஜீலை 2018-இலும் நடைபெற்றது<br>* புதிய மேம்பாட்டு வங்கி என்ற பெயரில் உறுப்பினர் நாட்டு அரசாங்கங்கள் ஒன்று சேர்ந்து பிரிக்ஸ் மேம்பாட்டு வங்கியைத் தொடங்கியுள்ளனர்<br>* வணிகப் பிரச்சனைகள், உலகளாவிய அரசு நிர்வாகம், பகிரத்தக்க வளமை, நாடுகளின் அமைதி, பாதுகாப்பு ஆகியன மாநாட்டின் விவாதத் தலைப்புகள். |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **K.J.கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி-- இராமநாதபுரம் மாவட்டம்** | | |
| **பன்னிரண்டாம் வகுப்பு -- பொருளியல்** | | |
| **அத்தியாயம் -- 9 நிதிப் பொருளியல்** | | |
| **சரியான விடையைத் தெரிவு செய்க** | | |
| **1)** | தற்கால அரசு எனப்படுவது<br>அ) தலையிடா அரசு<br>ஆ) மேல்மட்டத்தில் உள்ளவர்களின் அரசு<br>இ) நலம் பேணும் அரசு ஈ) காவல் அரசு | **இ) நலம் பேணும் அரசு** |
| **2)** | கீழ்வருவனவற்றுள் தனியார்நிதியின் பண்புகளில் இல்லாதது<br>அ) வருமானம் -- செலவு சமம் ஆ) இரகசியம்<br>இ) வருமானத்தின் ஒருபகுதியைச் சேமித்தல்<br>ஈ) விளம்பரப்படுத்துதல் | **ஈ) விளம்பரப்படுத்துதல்** |
| **3)** | வரி கீழ்க்காணும் குணங்களைக்கொண்டது<br>அ) கட்டாயத்தன்மை ஆ) பிரதிபலன் கருதாமை<br>இ) வரி மறுப்பு ஒரு குற்றம்<br>ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும் | **ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்** |
| **4)** | ஆடம் ஸ்மித்தால் கூறப்படாத புனித வரிவிதிப்பு விதி எது?<br>அ) சமத்துவ விதி ஆ) நிச்சயத்தன்மை விதி<br>இ) வசதி விதி ஈ) எளிமை விதி | **ஈ) எளிமை விதி** |
| **5)** | கீழே உள்ள வாக்கியங்களைக் கருத்தில்கொண்டு, சரியான ஒன்றை அடையாளம் காண்க.<br>i) மாநிலப் பட்டியலிலோ, இணைப்புப் பட்டியலிலோ குறிப்பிடப்படாத வரியை விதிப்பதற்கு மைய அரசுக்குத் தனி உரிமையில்லை<br>ii) அரசியலமைப்பு சில வரிகளை மைய அரசுப் பட்டியலிலிருந்து மாநில அரசுப் பட்டியலுக்கு மாற்ற வசதி செய்கிறது.<br>அ) i மட்டும் ஆ) ii மட்டும்<br>இ) இரண்டும் ஈ) ஏதுமில்லை | **ஆ) ii மட்டும்** |
| **6)** | GST எதற்குச் சமம்?<br>அ) விற்பனை வரி ஆ) தொழிற்குழும வரி<br>இ) வருமான வரி ஈ) உள்ளாட்சி வரி | **அ) விற்பனை வரி** |
| **7)** | இந்த நன்மையை நேர்முகவரி கொண்டிருக்கவில்லை<br>அ) சமத்துவம் ஆ) வசதி<br>இ) நிச்சயத்தன்மை ஈ) நாட்டுப்பற்று | **ஆ) வசதி** |
| **8)** | கீழ்வருவனவற்றுள் எது நேர்முக வரி?<br>அ) கலால் வரி ஆ) வருமான வரி<br>இ) சுங்க வரி ஈ) சேவை வரி | **ஆ) வருமான வரி** |
| **9)** | கீழே உள்ளவற்றில் எந்த வரி மைய அரசின் பட்டியலில் இல்லை?<br>அ) தனிமனிதர் வருமான வரி ஆ) நிறுவன வரி<br>இ) வேளாண்மை வருமான வரி ஈ) கலால் வரி | **இ) வேளாண்மை வருமான வரி** |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **10)** | அரசின் வருவாய் வரவு ( Revenue Receipts ) கணக்கில் சேராதது<br>அ) வட்டி ஆ) இலாபமும் இலாப ஈவும்<br>இ) கடன்களைத் திரும்பப் பெறுதல்<br>ஈ) சொத்திலிருந்து கிடைக்கிற வாரம் | ஈ) சொத்திலிருந்து கிடைக்கிற வாரம் |
| **11)** | வருவாய் செலவு ( Revenue Expenditure ) வருவாய் வரவைவிட ( Revenue Receipts ) அதிகமாக இருந்தால், அது<br>அ) வருவாய்ப் பற்றாக்குறை<br>ஆ) நிதிப் பற்றாக்குறை<br>இ) வரவு செலவுப் பற்றாக்குறை<br>ஈ) அடிப்படைப் பற்றாக்குறை | அ) வருவாய்ப் பற்றாக்குறை |
| **12)** | மொத்தச்செலவு, கடன் அல்லாத மொத்த வருவாயைவிட அதிகமாக இருந்தால், அது<br>அ) நிதிப் பற்றாக்குறை<br>ஆ) வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை<br>இ) முதன்மைப் பற்றாக்குறை<br>ஈ) வருவாய்ப் பற்றாக்குறை | அ) நிதிப் பற்றாக்குறை |
| **13)** | பற்றாக்குறை நிதியாக்கத்தின் அடிப்படை நோக்கம்<br>அ) பொருளாதார முன்னேற்றம்<br>ஆ) பொருளாதார நிலைத்தன்மை<br>இ) பொருளாதாரச் சமத்துவம்<br>ஈ) வேலைவாய்ப்பை உருவாக்குதல் | அ) பொருளாதார முன்னேற்றம் |
| **14)** | பற்றாக்குறை வரவு -- செலவுத்திட்டம் என்பதன் பொருளாவது<br>அ) அரசின் செலவைவிட அரசின் வருவாய் அதிகம்<br>ஆ) அரசின் நடப்புக்கணக்குச்செலவு நடப்புக் கணக்கு வருவாயைவிட அதிகம்<br>இ) அரசின் மொத்தச்செலவு அரசின் மொத்த வருவாயைவிட அதிகம்<br>ஈ) மேலே கூறியவற்றில் எதுவுமில்லை | இ) அரசின் மொத்தச்செலவு அரசின் மொத்த வருவாயைவிட அதிகம் |
| **15)** | பொதுக்கடனைத் திரும்பிச் செலுத்தும்முறை<br>அ) கடனை மாற்றுதல் ஆ) மூழ்கும் நிதி<br>இ) பகுதியாகச் செலுத்துதல் ஈ) இவை அனைத்தும் | ஈ) இவை அனைத்தும் |
| **16)** | பொதுக்கடனை மாற்றுதல் என்பது<br>அ) பழைய கடன்பத்திரங்களுக்குப் பதிலாகப் புதிய கடன்பத்திரங்களை மாற்றுதல்<br>ஆ) அதிக வட்டிவீதம்கொண்ட கடன் பத்திரங்களுக்குப் பதிலாகக் குறைவான வட்டிவீதம்கொண்ட கடன்பத்திரங்களைக் கொடுத்தல்<br>இ) குறுகியகாலப் பத்திரங்களுக்குப் பதிலாக நீண்டகாலப் பத்திரங்களைத் தருதல்<br>ஈ) மேற்கூறிய அனைத்தும் | ஆ) அதிக வட்டிவீதம் கொண்ட கடன் பத்திரங்களுக்குப் பதிலாகக் குறைவான வட்டிவீதம கொண்ட கடன் பத்திரங்களைக் கொடுத்தல் |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 17) | பட்ஜெட் என்ற பதம் பிரெஞ்சு சொல்லான பௌஜெட்டிலிருந்து ( Bougette ) பெறப்பட்டது, அதன் பொருள்<br>அ) சிறிய பை ஆ) பெரிய பெட்டி<br>இ) காகிதங்கள் அடங்கிய பை<br>ஈ) மேற்கூறிய எதுவுமில்லை | **அ) சிறிய பை** |
| 18) | கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது இந்தியாவில் பெரிய பற்றாக்குறையாக இருக்கும்?<br>அ) வருவாய்ப் பற்றாக்குறை<br>ஆ) வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை<br>இ) நிதிப் பற்றாக்குறை<br>ஈ) முதன்மைப் பற்றாக்குறை | **இ) நிதிப் பற்றாக்குறை** |
| 19) | நிதிக்குழு நிர்ணயம் செய்வது எது?<br>அ) இந்திய அரசின் நிதியினை<br>ஆ) நிதிவளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்<br>இ) பல்வேறு துறைகளுக்கு நிதியை மாற்றுதல்<br>ஈ) மேற்கூறப்பட்ட எதுவுமில்லை | **ஆ) நிதிவளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்** |
| 20) | கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது சரியான சொற்றொடர் எனக் கண்டுபிடி?<br>i) ஜனாதிபதியால் நிதிக்குழு பணியமர்த்தப்படுகிறது<br>ii) ஒரு நிதிக்குழுவின் காலம் 5 ஆண்டுகள்<br>அ) i மட்டும் ஆ) ii மட்டும்<br>இ) இரண்டும் ஈ) இரண்டுமில்லை | **இ) இரண்டும்** |

**இரண்டு மதிப்பெண் வினா -- விடை**

**21) பொது நிதி -- வரையறு**

* அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்பையும் கொள்கைகளையும் ஆராய்வதே பொது நிதியியல் ஆகும் ---- **ஆடம் ஸ்மித்**

**22) பொது வருவாய் என்றால் என்ன?**

* அனைத்து மூலங்களின் வழியாக அரசு பெறும் வருமானத்தைக் குறிக்கும்

**23) வரி, கட்டணம் வேறுபடுத்து**

| வ.எண் | வரி | கட்டணம் |
|---|---|---|
| 1 | எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராமல் அரசிற்குக் கட்டாயமாகச் செலுத்தக் கூடியது | வரியைப்போல் கட்டாயமாகச் செலுத்தக்கூடியது அல்ல |
| 2 | அரசால் சட்டப்படி வரி செலுத்துவோர்மீது விதிக்கப்படுகிறது | அரசானது சில சேவையைச் செய்வதற்காக வசூலிப்பது |
| 3 | எ.டு -- வருமான வரி, சுங்க வரி | எ.டு -- ஓட்டுநர் உரிமக்கட்டணம் |

| | |
|---|---|
| 24) | " சுழிய அடிப்படை வரவு -- செலவுத் திட்டம் " குறிப்பு வரைக<br>* ஒவ்வொரு செலவினமும் புதியதாகக் கருதப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் மதிப்பீடு செய்யப்படும்<br>* சமூகப் பொருளாதார நோக்கங்களின் பார்வையில் சமூகத்தின் முந்தைய முன்னுரிமைகள் மறுஆய்வு செய்யப்படும்.<br>* இந்திய அரசு 1987 – 88 இல் தாக்கல் செய்தது |
| 25) | நேர்முக வரிக்கு இரு உதாரணங்கள் தருக.<br>1) வருமான வரி 2) சொத்து வரி 3) வெகுமதி வரி |
| 26) | GST - இன் கூறுகள் யாவை?<br>1. CGST<br>* மாநிலத்திற்குள் நடைபெறும் விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவது<br>2. SGST<br>* மாநிலத்திற்குள் நடைபெறும் விற்பனையில் மாநில அரசால் வசூலிக்கப்படுவது<br>3. IGST<br>* மாநில அரசுகளுக்கிடையேயான விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவது |
| 27) | பொதுக்கடன் என்பதன் பொருள் யாது?<br>* கடன் என்பது அரசு கருவூலத்தால் கடன் வழங்கியவர்களுக்கு வட்டியும், அசலும் கொடுக்கப்படுவதற்கான உத்தரவாதம் ஆகும்<br>* நடப்பு நிதிப் பற்றாக்குறையைச் சரிசெய்வதற்காகத் திரட்டப்படும் நிதி ஆகும்<br>-- பிலிப் E.டெய்லர் |

www.Padasalai.Net

| மூன்று மதிப்பெண் வினா -- விடை | |
|---|---|
| 28) | வரி விதிப்பு விதிகளை விவரிக்க<br>1) செலுத்தும் திறன் பற்றிய விதி<br>* மக்களின் வரி செலுத்தும் திறனுக்கேற்ப அரசு வரி விதிக்கவேண்டும்<br>2) நிச்சயத்தன்மை விதி<br>* வரிவீதம் அல்லது செலுத்தும் காலம் குறித்து நிச்சயமற்றதன்மை இல்லாத வகையில் அரசு வரி விதித்து உறுதிப்படுத்தவேண்டும்<br>3) வசதி விதி<br>* வரி வசூலிக்கும்முறையும் வரி செலுத்தும் காலமும் மக்களின் வசதிக்கேற்ப அமையவேண்டும்<br>4) சிக்கன விதி<br>* ஆடம் ஸ்மித் கருத்துப்படி வரி வசூலிக்கும் செலவுகள் குறைவாக இருக்கும் வரிகளை மட்டுமே அரசு விதிக்கவேண்டும் |
| 29) | தனியார் நிதிக்கும் பொதுநிதிக்கும் உள்ள மூன்று ஒற்றுமைகளை எழுதுக<br>1) பகுத்தறியும் தன்மை<br>* குறைந்த செலவில் அதிக நலத்தைப் பெறும் பகுத்தறிவைக் கொண்டவை<br>2) கடனுக்கான வரையறை<br>* தங்களது வருவாய்க்கு அப்பால் கடன்களைப் பெறுவதில் வரையறையைப் பெற்றுள்ளது<br>3) வளங்களின் பயன்பாடு<br>* வரையறுக்கப்பட்ட மற்றும் உத்தம அளவிலேயே தங்களது வளங்களைப் பயன்படுத்த முனைகின்றன.<br>4) நிர்வாகம்<br>* செயல்திறனோடும் ஊழலற்ற தன்மையோடும் நிர்வாகத்தை மேற்கொள்கிறது |
| 30) | தற்கால அரசின் பணிகள் யாவை?<br>1) பாதுகாப்பு<br>* காவல் மற்றும் இராணுவ நிலைகளைப் பராமரித்து உள்நாடு மற்றும் வெளிநாட்டு அழிவிலிருந்து மக்களைப் பாதுகாப்பது அரசின் பணியாகும்.<br>2) நீதி<br>* அனைத்து வகுப்பினரும் சமநீதி பெறும்வகையில் நீதி அமைப்பை ஏற்படுத்தி நீதி வழங்குதல், தகராறுகளைத் தீர்த்தல் அரசின் பணியாகும்.<br>3) நிறுவனங்கள்<br>* அரசு தனது நிறுவனங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதும், தனியார் நிறுவனங்கள்மீது ஒழுங்குமுறைகளும் கட்டுப்பாடுகளும் விதிப்பதும் அரசின் பொறுப்புகளாகும்.<br>4) சமூக நலன்<br>* நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக கல்வி, சமூகப் பாதுகாப்பு, சமூகக் காப்பீடு, உடல்நலம், துப்புரவு ஆகியவற்றை ஏற்படுத்துவது அரசின் கடமையாகும்.<br>5) கட்டமைப்பு<br>* சமூக, பொருளாதாரக் கட்டமைப்புகளை உருவாக்குவதன்மூலம் பொருளாதார முன்னேற்றத்திற்கான அடித்தளத்தை அமைக்கிறது . |

www.Padasalai.Net

**31)**

**வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக**

* அரசுக்குக் கட்டாயமாகச் செலுத்த வேண்டிய தொகை.
* எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் செலுத்த வேண்டிய தொகை.
* வரி செலுத்துவோரின் தியாகத்தை உள்ளடக்கியது.
* சட்டத்தை மீறியதற்கான தண்டத்தொகை அல்ல.

**32)**

**நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளைக் கூறு**

| வ. எண் | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| 1 | ஒருவரின் வருமானம், செல்வத்தின் மீது விதிக்கப்பட்டு நேரடியாக அரசுக்குச் செலுத்துவது | பண்டங்கள், பணிகள்மீது விதிக்கப்பட்டு மறைமுகமாக அரசுக்குச் செலுத்துவது |
| 2 | வளர்வீத தன்மை கொண்டது | தேய்வீத தன்மை கொண்டது |
| 3 | வரியின் சுமையை மற்றவர்மீது மாற்ற இயலாது | வரியின் சுமையை மற்றவர்மீது மாற்ற இயலும் |
| 4 | பணவீக்கத்தைக் குறைக்க உதவுகிறது | விலை உந்துப் பணவீக்கத்தை ஏற்படுத்துகிறது |
| 5 | ஒருவர்மீது விழுகிறது | பல்வேறு நபர்கள்மீது விழுகிறது |

**33)**

**முதன்மைப் பற்றாக்குறை என்றால் என்ன?**

* நிதிப் பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்துதலைக் கழித்தபின் உள்ள பற்றாக்குறை.
* அரசின் கடனுக்கான வட்டி செலுத்துதலுக்கான தேவையைக் குறிக்கும்
* முதன்மைப்பற்றாக்குறை ( PD) = நிதிப்பற்றாக்குறை ( FD ) – வட்டி செலுத்துதல் ( IP )

**34)**

**பொதுக்கடனைத் திரும்பச் செலுத்துவதற்கான மூன்று முறைகளைக் கூறுக**

**1) மூழ்கும் நிதி**

* தனியொரு நிதியினை ஏற்படுத்திக் கடனைத் திரும்பச் செலுத்துவது

**2) கடனை மாற்றுதல்**

* பழைய கடனைப் புதிய கடனாக மாற்றி வட்டியின் பளுவைக் குறைப்பது

**3) வரவு -- செலவுத் திட்ட உபரி**

* உபரியைக் கடனைத் திருப்பிச் செலுத்தப் பயன்படுத்திக் கொள்கிறது

**4) பகுதியாகச் செலுத்துதல்**

* சம ஆண்டுத் தவணைகளாகச் செலுத்துகிறது

**5) கடன் மறுப்பு**

* கடனைச் செலுத்த மறுக்கும் தன்மையால் நாணயத்தன்மையைப் பாதிக்கும்

**6) வட்டிவீதத்தைக் குறைத்தல்**

* நிதிச்சிக்கலின்போது வட்டியைக் குறைத்துக் கடன் செலுத்தும் தன்மை

**7) மூலதனத் தீர்வை**

* மூலதனச் சொத்தின்மீது வரிவிதித்து போர்க்காலக் கடனைச் செலுத்துவது

( ஏதேனும் மூன்று முறைகள் மட்டும் )

| ஐந்து மதிப்பெண் வினா -- விடை | |
|---|---|
| 35) | **பொதுநிதியின் எல்லைகளை ( பாடப்பொருள்கள் ) விவரி**<br>**பொதுநிதியின் எல்லைகள்**<br>**1) பொது வருவாய்**<br>* வருவாயைப் பெருக்கக்கூடிய வரி வருவாய், வரியல்லா வருவாய், வரிக்கொள்கை, வரிவிகிதம், வரியின் சுமை, வரியின் தாக்கம், வரியின் விளைவுகள் ஆகியவற்றை விளக்குகிறது.<br>**2) பொதுச்செலவு**<br>* அரசின் செலவு, பொதுச்செலவின் விளைவுகள், பொதுச்செலவைக் கட்டுப்படுத்துதல் போன்ற அடிப்படைக் கோட்பாடுகளை விளக்குகிறது.<br>**3) பொதுக்கடன்**<br>* உள்நாடுகளிலும் வெளிநாடுகளிலும் பெறக்கூடிய கடன்களின் வளங்கள், பொதுக்கடன்களின் சுமை, விளைவுகள், திரும்பச் செலுத்தும் முறை ஆகியவற்றை விளக்குகிறது.<br>**4) நிதி நிர்வாகம்**<br>* அரசின் வரவு -- செலவுத் திட்டத்தின் பல்வேறு பகுதிகள், நோக்கங்கள், தயாரிக்கும் வழிமுறைகள், நிதி ஒதுக்கீடு, மதிப்பீடு, தணிக்கை ஆகியவற்றை விளக்குகிறது.<br>**5) நிதிக்கொள்கை**<br>* வரிகள், மான்யங்கள், பொதுக்கடன், பொதுச்செலவு ஆகிய நிதிக்கொள்கையின் கருவிகளைப்பற்றி விளக்குகிறது. |
| 36) | **மறைமுக வரிகளின் நன்மைகள் யாவை?**<br>**மறைமுக வரிகளின் நன்மைகள்**<br>**1) பரந்து காணப்படுதல்**<br>* அதிக நுகர்வோர்களை உள்ளடக்கியுள்ள மறைமுக வரியை ஏழை, பணக்காரர் என யாராக இருந்தாலும் செலுத்த வேண்டும்<br>* நேர்முகவரி செலுத்துவோரைவிட அதிகமானோர் மறைமுகவரியைச் செலுத்துகின்றனர்.<br>**2) சமத்துவம்**<br>* ஆடம்பரப் பண்டங்கள்மீது அதிக வரி சுமத்தப்படுவதால் மறைமுகவரி சமத்துவ விதியின் அடிப்படையில் அமைகிறது .<br>**3) சிக்கனத் தன்மை**<br>* உற்பத்தியாளர்களும், விற்பனையாளர்களும் வரியை வசூலித்து அரசுக்குச் செலுத்துவதால் செலவானது குறைந்து சிக்கனத் தன்மை ஏற்படுகிறது .<br>**4) உடலுக்குத் தீங்கான பண்டங்களின் நுகர்வைக் குறைக்கிறது**<br>* உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய புகையிலை, மது போன்ற பண்டங்கள்மீது பாவ வரி விதிக்கப்படுகிறது.<br>**5) வசதியானது**<br>* பண்டங்கள், பணிகள்மீது விதிக்கப்படுவதால் நுகர்வோருக்கு வரிச்சுமை தெரிவதில்லை. |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 37) | **கடன் திரும்பச் செலுத்தும் முறைகளை விளக்குக**<br>**1) மூழ்கும் நிதி**<br>* இங்கிலாந்தின் வால்போல் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.<br>* தனியொரு நிதியினை ஏற்படுத்திக் கடனைத் திரும்பச் செலுத்துவது.<br>**2) கடனை மாற்றுதல்**<br>* பழைய கடனைப் புதிய கடனாக மாற்றி வட்டியின் பளுவைக் குறைக்கிறது என்கிறார் டால்டன்.<br>**3) வரவு -- செலவுத் திட்ட உபரி**<br>* உபரியைக் கடனைத் திருப்பிச் செலுத்தப் பயன்படுத்திக் கொள்கிறது.<br>**4) பகுதியாகச் செலுத்துதல்**<br>* சம ஆண்டுத் தவணைகளாகச் செலுத்துகிறது.<br>**5) கடன் மறுப்பு**<br>* கடனைச் செலுத்த மறுக்கும் தன்மையால் நாணயத்தன்மையைப் பாதிக்கும்<br>**6) வட்டிவீதத்தைக் குறைத்தல்**<br>* நிதிச்சிக்கலின்போது வட்டியைக் குறைத்துக் கடன் செலுத்தும் தன்மை.<br>**7) மூலதனத் தீர்வை**<br>* மூலதனச் சொத்தின்மீது வரிவிதித்து போர்க்காலக் கடனைச் செலுத்துவது.<br>**( ஏதேனும் ஐந்து முறைகள் மட்டும் )** |
| 38) | **நிதிக்கொள்கையின் கருவிகள் எவை ? விளக்குக**<br>**நிதிக்கொள்கை**<br>* நாட்டு வருமானத்தின்மீது விரும்பத்தகுந்த விளைவை ஏற்படுத்தவும், விரும்பத்தகாத விளைவைத் தவிர்க்கவும் அரசின் வருவாய், செலவினங்கள் பற்றிய கொள்கையாகும் -- **ஆர்தர் ஸ்மித்ஸ்**<br><br>**நிதிக்கொள்கையின் கருவிகள்**<br>1. வரி விதித்தல் 2. பொதுச்செலவு 3. பொதுக்கடன்<br><br>**1) வரி விதித்தல்**<br>* நேர்முக வரிகள், மறைமுக வரிகள், வருமானத்தை மக்களிடமிருந்து அரசிற்கு மாற்றுகிறது.<br>* வரி அதிகரிப்பால் செலவிடத்தக்க வருமானம் குறைவதோடு பணவீக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது.<br>* மந்த காலத்தில் வரிகள் குறைக்கப்படவேண்டும்.<br>**2) பொதுச்செலவு**<br>* பணியாளர்களின் கூலியையும் சம்பளத்தையும் அதிகரிக்கும்போது பண்டங்கள், பணிகளுக்கான மொத்தத்தேவை உயருகிறது.<br>* பின்னிறக்கத்தையும் பணவீக்கத்தையும் கட்டுப்படுத்த உதவுகிறது.<br>**3) பொதுக்கடன்**<br>* கடன் மூலம் மக்களிடமிருந்து அரசிற்கும், வட்டி மூலம் அரசிடமிருந்து மக்களுக்கும் பணம் மாற்றப்படுகிறது. |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 39) | **கூட்டாட்சி நிதியின் கொள்கைகளை விளக்குக.**<br>**1) சுதந்திரம்**<br>* ஒவ்வோர் அரசும் வருவாய் ஆதாரங்கள், வரி விதிப்பதற்கான அதிகாரம், கடன் வாங்குவது, செலவினைச் சமாளிப்பது முதலானவை பற்றி தன்னாட்சி பெற்றிருக்கவேண்டும்.<br>**2) சமத்துவம்**<br>* மாநிலங்கள் வருவாய்ப் பங்கினைப்பெற, சமத்துவ நீதியின் அடிப்படையில் வளங்கள் பங்கீடு செய்யப்படவேண்டும்.<br>**3) ஒரே மாதிரியான தன்மை**<br>* ஒவ்வொரு மாநிலமும் கூட்டாட்சிமுறையில் சமஅளவில் வரி செலுத்தும் தன்மை வேண்டும்.<br>**4) போதுமான வளங்களைப் பெற்றிருத்தல்**<br>* தற்போதைய, எதிர்காலத் தேவையைக் கருத்தில்கொண்டு போதுமான வளங்களைப் பெற்றிருத்தல்வேண்டும்.<br>* போர், வெள்ளம் ஏற்படும் சூழ்நிலைகளைச் சமாளிக்கும் தன்மையைப் பெற்றிருத்தல்வேண்டும்.<br>**5) நிதி வசதி**<br>* அரசின் பெருகிவரும் பொறுப்புகளுக்கேற்றவாறு புதிய வரி ஆதாரங்களைப் பெருக்கிக்கொள்ளவேண்டும்.<br>**6) ஒருங்கிணைத்தலும் ஒன்றுபடுதலும்**<br>* நாட்டின் பல்வேறு அடுக்களுக்கிடையே உள்ள அனைத்து நிதிமுறைகளும் நல்லமுறையில் ஒருங்கிணைக்கப்படவேண்டும்.<br>* ஒருங்கிணைப்பு நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை முன்னேற்ற உதவும்.<br>**7) செயல்திறன்**<br>* நிதிமுறைகளை ஒன்றாக ஒருங்கிணைத்துத் திறமையானமுறையில் நிர்வகிக்கப்படவேண்டும்.<br>* வரி ஏய்ப்பு, மோசடி ஆகியவற்றுக்கான வாய்ப்புகள் இருக்கக்கூடாது<br>* இரட்டை வரி முறை இருக்கக்கூடாது.<br>**8) நிர்வாகச் சிக்கனம்**<br>* வரி வசூலிக்கும் செலவைக் குறைத்து, அதிக வருவாயைப்பெற்றுப் பிறதுறைகளுக்குச் செலவிட ஏதுவாக அமையவேண்டும்.<br>**9) பொறுப்புணர்வு**<br>* நிதிசார் முடிவுகளுக்கு மத்திய அரசு பாராளுமன்றத்திற்கும், மாநில அரசு சட்டமன்றத்திற்கும் பொறுப்பேற்கவேண்டும்.<br>**( ஏதேனும் ஐந்து கொள்கைகள் மட்டும் )** |

40)

**வரவு -- செலவுத் திட்டத்தில் உள்ள பலவகைப் பற்றாக்குறைகளை விளக்குக.**

**வரவு -- செலவுத் திட்டப் பற்றாக்குறை**

* வரவு -- செலவுத் திட்டத்தில் வருவாய், செலவைவிடக் குறைவாக இருப்பது பற்றாக்குறை என அழைக்கப்படுகிறது.
* இந்திய அரசின் வரவு -- செலவுத் திட்டத்தில் நான்கு வகையான பற்றாக்குறைகள் உள்ளன.

**1) வருவாய்ப் பற்றாக்குறை**

* அரசின் வருவாய்ச் செலவினம் வருவாய் வரவைவிட அதிகமாக இருப்பது வருவாய்ப் பற்றாக்குறை எனப்படும்.
* மூலதன வரவு, மூலதனச் செலவு கணக்கில் கொள்ளப்படமாட்டாது.
* அரசின் அன்றாடப் பணிகளை நடத்துவதற்குத் தேவையானதைவிடக் குறைவாக உள்ளதைக் காட்டுவது.

**வருவாய்ப் பற்றாக்குறை ( RD ) = மொத்த வருவாய்ச் செலவினம் ( RE ) -- மொத்த வருவாய் வரவுகள் ( RR )**

**2) வரவு -- செலவுத் திட்டப் பற்றாக்குறை**

* வருவாய்க் கணக்குகள், மூலதனக் கணக்குகளின் மொத்த வரவுக்கும் செலவுக்குமுள்ள இடைவெளியே வரவு -- செலவுத் திட்டப் பற்றாக்குறை.

**வரவு -- செலவுத் திட்டப் பற்றாக்குறை = மொத்தச் செலவு -- மொத்த வரவு**

**3) நிதிப் பற்றாக்குறை**

* நிதிப்பற்றாக்குறை வரவு -- செலவுத் திட்டப் பற்றாக்குறையைவிட அதிகமாக இருக்கும்.

**நிதிப் பற்றாக்குறை = வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை -- அரசின் அங்காடிக் கடன்களும் ஏனைய பொறுப்புகளும்**

**4) முதன்மைப் பற்றாக்குறை**

* நிதிப் பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்துதலைக் கழித்தபின் கிடைப்பது
* அரசின் உண்மையான சுமையைக் காட்டும்.
* அரசின் கடனுக்கான வட்டி செலுத்துதலுக்கான தேவையைக் குறிக்கும்.
* நிதிப்பற்றாக்குறை முதன்மைப் பற்றாக்குறையைவிட அதிகமாக இருக்கும்.

**முதன்மைப்பற்றாக்குறை ( PD) = நிதிப்பற்றாக்குறை ( FD ) – வட்டி செலுத்துதல் ( IP )**

| | |
|---|---|
| 41) | அரசுச் செலவு அதிகரிப்புகளுக்கான காரணங்கள் யாவை?<br>**1) மக்கள்தொகை வளர்ச்சி**<br>* மக்கள்தொகை வளர்ச்சியினால் உடல்நலம், கல்வி, சட்டம் - ஒழுங்கு போன்றவற்றிற்காக பேரளவு முதலீடு தேவைப்படுகிறது.<br>* இளைஞர்களுக்கான கல்வி, பணிகள், முதியோர்களுக்கான ஓய்வூதியம், சமூகப் பாதுகாப்பு, உடல்நலத்திற்காக அதிக செலவாகிறது.<br>**2) பாதுகாப்புச் செலவு**<br>* இராணுவத் தளவாடங்களை நவீனமயமாக்க 1990 – 91இல் 10,874 கோடியிலிருந்து 2018 – 19இல் 2,95,511 கோடியாக அதிகரித்துள்ளது.<br>**3) அரசு மான்யங்கள்**<br>* உணவு, உரங்கள், முன்னுரிமை துறைக்கான கடன் வழங்கல், ஏற்றுமதி, கல்வி போன்றவற்றிற்கான மான்யங்களால் செலவு அதிகரித்துள்ளது.<br>* 1990 – 91இல் 9,581 கோடியிலிருந்து 2018 – 19இல் 2,29,716 கோடியாக மான்யம் அதிகரித்துள்ளது.<br>**4) கடன் சேவைகள்**<br>* உள்நாடுகளிலும் அயல்நாடுகளிலும் அதிகளவு கடன் பெற்றுள்ளதால் கடனைத் திரும்பச் செலுத்த அதிகப் பணம் தேவைப்படுகிறது.<br>* 1990 – 91இல் 21,500 கோடியிலிருந்து 2018 – 19இல் 5,75,794 கோடியாக கடன் அதிகரித்துள்ளது.<br>**5) வளர்ச்சித் திட்டங்கள்**<br>* நீர்ப்பாசனம், இரும்பு - எஃகு, கனரக எந்திரங்கள், எரிசக்தி, தொலைதொடர்பு ஆகிய வளர்ச்சித்திட்டங்களுக்கு அதிக முதலீடு தேவைப்படுகிறது.<br>**6) நகரமயமாதல்**<br>* நகர்ப்புற மக்கள்தொகை 17% இலிருந்து 43% ஆக அதிகரித்துள்ளது.<br>* ஒருமில்லியன் மக்கள்தொகைக்குமேல் 54 நகரங்கள் உள்ளது.<br>* சட்டம் -- ஒழுங்கு பராமரிப்பு, கல்வி, குடிமை வசதிகளை மேற்கொள்ள அதிகச் செலவு ஏற்படுகிறது.<br>**7) தொழில்மயமாக்கல்**<br>* அடிப்படை, கனரகத் தொழில்களுக்கு அதிக மூலதனம் தேவைப்படுகிறது.<br>* போக்குவரத்து, தகவல் தொடர்பு, எரிசக்தி, எரிபொருள் ஆகிய அடிப்படை வசதிகளுக்காக அதிக செலவு ஏற்படுகிறது.<br>**8) மாநிலங்கள், ஒன்றியங்களுக்கான மான்யங்கள் அதிகரிப்பு**<br>* மாநிலங்களுக்கும், ஒன்றியப்பகுதிகளுக்கும் இயற்கைப் பேரழிவுகளை எதிர்கொள்ள வழங்கப்படும் மான்யங்கள் பெருமளவில்அதிகரித்துள்ளது.<br>**( ஏதேனும் ஐந்து காரணங்கள் மட்டும் )** |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| K.J.கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி-- இராமநாதபுரம் மாவட்டம் | | |
|---|---|---|
| பன்னிரண்டாம் வகுப்பு -- பொருளியல் | | |
| அத்தியாயம் -- 10 சுற்றுச்சூழல் பொருளியல் | | |
| சரியான விடையைத் தெரிவு செய்க | | |
| 1) | என்வைரான்மெண்ட் ( Environment ) என்ற வார்த்தை --------------- என்ற பொருள்கொள்ளும் எந்த பிரெஞ்ச் வார்த்தையிலிருந்து தோன்றியது?<br>அ) என்வைரான் ஆ) என்வைரான்ஸ்<br>இ) என்வைரோனியா ஈ) என்வைர் | இ) என்வைரோனியா |
| 2) | உயிர்சார்(Biotic) என்ற வார்த்தையின் பொருள் என்ன?<br>அ) உயிர் வாழ்வன ஆ) உயிரற்றவை<br>இ) பருப்பொருள் ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை | அ) உயிர் வாழ்வன |
| 3) | சூழலியல் என்பது எந்த ஒன்றின் சிறிய பகுதி?<br>அ) அயனோஸ்பியர் ஆ) லித்தோஸ்பியர்<br>இ) பையோஸ்பியர் ஈ) மெஸ்ஸோஸ்பியர் | இ) பையோஸ்பியர் |
| 4) | பொருள்சார் சமநிலை அணுகுமுறையை நிறுவியவர் யார்? அ) தாமஸ் மற்றும் பிக்கார்டி<br>ஆ) ஆலன் நீஸ் மற்றும் ஆர்.வி.அய்யர்ஸ்<br>இ) ஜோன் ராபின்சன் மற்றும் ஜே.எம்.கீன்ஸ்<br>ஈ) ஜோசப் ஸ்டிக்லிஸ் மற்றும் எட்வர்ட் சேம்பர்லின் | ஆ) ஆலன் நீஸ் மற்றும் ஆர்.வி.அய்யர்ஸ் |
| 5) | சுற்றுச்சூழல் பண்டங்கள் என்பவை ---------------<br>அ) அங்காடிப் பண்டங்கள்<br>ஆ) அங்காடியிடாப் பண்டங்கள்<br>இ) இரண்டும் ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை | ஆ) அங்காடியிடாப் பண்டங்கள் |
| 6) | தூய பொதுப்பொருள்களில், நுகர்ச்சி என்பது -----------<br>அ) போட்டி உடையது ஆ) போட்டியற்றது<br>இ) இரண்டும் ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை | ஆ) போட்டியற்றது |
| 7) | சுற்றுச்சூழல் பொருளியலின் அடிப்படை கருத்துகளில் ஒன்றும், அங்காடி தோல்விக்குக் காரணமானதும் ----------- ஆகும்.<br>அ) நேர்மறைப் புறவினைவுகள்<br>ஆ) எதிர்மறைப் புறவினைவுகள்<br>இ) இரண்டும் ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை | ஆ) எதிர்மறைப் புறவினைவுகள் |
| 8) | வெளிக் காற்றுமாசுவுக்கு ---------------- காரணமாகும்.<br>அ) சூடாக்குவதும் சமைப்பதும்<br>ஆ) பாரம்பரிய அடுப்புகள்<br>இ) மோட்டார் வாகனங்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும் | இ) மோட்டார் வாகனங்கள் |
| 9) | கார்பன் மோனாக்சைடு அதிகமாவதில் பங்களிப்பைச் செய்வது<br>அ)மோட்டார் வாகனங்கள் ஆ) தொழில் செயற்பாடுகள்<br>ஆ) தொழில் செயற்பாடுகள்<br>இ) நிலையாக எரிபொருள் எரிக்கும் கருவிகள்<br>ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை | அ) மோட்டார் வாகனங்கள் |

| | | |
|---|---|---|
| **10)** | பின்வரும் எது உலக வெப்பமயமாதலுக்கு காரணம்?<br>அ) பூமியின் ஈர்ப்புவிசை ஆ) ஆக்சிஜன்<br>இ) மையநோக்கு விசை ஈ) வெப்பநிலை அதிகமாதல் | **ஈ) வெப்பநிலை அதிகமாதல்** |
| **11)** | பின்வரும் எந்த ஒன்று புறஊதாக் கதிர்களிலிருந்து மனிதர்களைப் பாதுகாக்கிறது?<br>அ) UV -- A ஆ) UV – C இ) ஓசோன் படலம்<br>ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை | **இ) ஓசோன் படலம்** |
| **12)** | உலக வெப்பமயமாதல் ---------------- என்றும் குறிப்பிடப்படுகிறது. அ) சூழலியல் மாறுபாடு<br>ஆ) பருவநிலை மாறுபாடு இ) வளிமண்டல வேறுபாடு<br>ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை | **ஆ) பருவநிலை மாறுபாடு** |
| **13)** | பின்வரும் எந்த ஒன்று உலக வெப்பமயமாதலின் எதிர்பார்க்கப்படும் விளைவு?<br>அ) கடல் மட்டம் உயர்தல் ஆ) மழைப்பொழிவு மாறுதல்<br>இ) பாலைவனம் அதிகரித்தல்<br>ஈ) மேற்சொன்ன அனைத்தும் | **அ) கடல் மட்டம் உயர்தல்** |
| **14)** | சத்துக்களை அதிகரிக்கும் செயல் எப்படி அழைக்கப்படுகிறது?<br>அ) யூட்ரோபிகேசன் ஈ) சிஸ்டோஸ்மியாசிஸ்<br>ஆ) சத்துக்களைக் கட்டுப்படுத்துதல் இ) செறிவூட்டல் | **அ) யூட்ரோபிகேசன்** |
| **15)** | மண்மாசுவிற்கு முதல்நிலைக் காரணம் ----------------<br>அ) பூச்சியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்<br>ஆ) நில மேம்பாடு ஈ) இரசாயண உரங்கள்<br>இ) விவசாய நிலங்கள் வழியாகப் பாய்ந்தோடும் மழைநீர் | **ஈ) இரசாயண உரங்கள்** |
| **16)** | வன அழிவிற்கு முதன்மைக் காரணம் யாது?<br>அ) மரம் வெட்டும் தொழில் ஆ) இயற்கை வன அழிவு<br>இ) நிலத்தைச் சமப்படுத்துதல்<br>ஈ) தட்ப வெப்பநிலையைச் சமப்படுத்துதல் | **அ) மரம் வெட்டும் தொழில்** |
| **17)** | மின்னணுக் கழிவுகள் ---------------- என்று பொதுவாக குறிப்பிடப்படுகின்றன.<br>அ) திடக் கழிவுகள் ஆ) குப்பைக் கழிவுகள்<br>இ) இ -- கழிவுகள் ஈ) மருத்துவமனைக் கழிவுகள் | **இ) இ -- கழிவுகள்** |
| **18)** | அமில மழை ---------------- விளைவுகளில் ஒன்று.<br>அ) காற்று மாசு ஆ) நீர் மாசு<br>இ) நில மாசு ஈ) ஒலி மாசு | **அ) காற்று மாசு** |
| **19)** | நீடித்த வளர்ச்சி (அல்லது) வளங்குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்களை அடைய விதிக்கப்பட்டிருக்கும் காலம்<br>அ) 2020 ஆ) 2025 இ) 2030 ஈ) 2050 | **இ) 2030** |
| **20)** | கார நிலம் அதிகமாகக் காணப்படும் சமவெளி எது?<br>அ) சிந்து -- கங்கை ஆ) வட இந்திய<br>இ) கங்கை ஈ) மேற்கூறிய அனைத்தும் | **ஈ) மேற்கூறிய அனைத்தும்** |

| இரண்டு மதிப்பெண் வினா -- விடை | |
|---|---|
| 21) | **சுற்றுச்சூழல் என்பதன் பொருள் கூறுக**<br>* சுற்றியிருப்பவைகள் என்று பொருள்படும் "Environia" என்னும் பிரெஞ்சு சொல்லிலிருந்து தோன்றியது.<br>* நம்மைச் சுற்றியுள்ள காற்று, நீர், நிலம், இயற்கை வளங்கள், தாவரங்கள், அனைத்து உயிரினங்கள் அடங்கிய தொகுப்பும், அத்தொகுப்பில் உள்ளவைகளுக்கு இடையேயான பரஸ்பர உறவும் ஆகும். |
| 22) | **சூழலியல் என்றால் என்ன?**<br>* உயிரினங்களுக்கிடையேயான பரஸ்பர உறவும் அவைகளின் சுற்றுச்சூழலையும் பற்றிப் படிக்கும் இயல். |
| 23) | **தலா கரியமிலவாயு அதிகமாக வெளியேறும் நாடுகள் யாவை?**<br>* கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சவூதி அரேபியா, தென்கொரியா |
| 24) | **சுற்றுச்சூழல் பண்டங்கள் என்றால் என்ன? உதாரணம் கூறு.**<br>* தனியார் சொத்துரிமை இல்லாத அனைவராலும் பயன்படுத்தும் அங்காடியிடாப் பண்டங்களையே சுற்றுச்சூழல் பண்டங்கள் என்கிறோம்.<br>* உதாரணம் --தூய்மையான காற்று, பசுமையான போக்குவரத்து உள்கட்டமைப்பு பொதுப்பூங்காக்கள், ஆறுகள், மலைகள், காடுகள், கடற்கரைகள். |
| 25) | **ஒலிமாசுவினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கூறுக**<br>1) ஒலித் தடைகளை ஏற்படுத்துதுதல்<br>2) தரைப்போக்குவரத்திற்குப் புதிய சாலைகளை ஏற்படுத்துதல்<br>3) போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துதல்<br>4) வேலைசெய்யுமிடங்களில் ஒலித் தடுப்பானை நிறுவுதல்<br>5) கனரக வாகனங்கள் செல்லும் நேரத்தைக் கட்டுப்படுத்துதல்<br>6) ஒலிபெருக்கிகளைக் கட்டுப்படுத்துதல்<br>( ஏதேனும் மூன்று மட்டும் ) |
| 26) | **உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு**<br>* நிலத்திலும் நீரிலும் தற்பொழுது ஏற்பட்டுள்ள தட்ப வெப்பநிலை அதிகரிப்பே புவி வெப்பமயமாதல் என்கிறோம். |
| 27) | **விதைப்பந்து என்பதன் பொருள் கூறுக**<br>* ஒருவிதையை உரம் கலந்த களிமண்ணால் மூடிவைத்துப் பின் உலர்த்தப்பட்டு, எங்கு வேண்டுமோ அங்கு அதனை விதைப்பதை விதைப்பந்து என அழைப்பர்.<br>* மரங்கள் நடுவதற்கு விதைப்பந்துமுறை சிறந்த வழிமுறையாகும். |

www.Padasalai.Net

| மூன்று மதிப்பெண் வினா -- விடை | |
|---|---|
| 28) | **பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்குமுள்ள தொடர்பினைச் சுருக்கமாகக் கூறு**<br>* சமூக, அரசியல், அறவியல், தத்துவம், பொருளாதார அமைப்புமுறைகள் மனித வாழ்வினைத் தீர்மானிக்கிறது .<br>* மனிதன் தனது வாழ்வாதாரத்திற்காக இயற்கையிலுள்ள மற்ற உயிரினங்களுடனும் உயிரற்ற பொருள்களுடனும் இணைந்துள்ளதால் மனிதனின் வாழ்க்கைமுறையைச் சுற்றுச்சூழலே பெருமளவு தீர்மானிக்கிறது.<br>* பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பை **ஆலன் நீஸ், R.V.அய்யர்ஸ்** ஆகியோரின் பொருள்சார் சமநிலை அணுகுமுறை விளக்குகிறது. |
| 29) | **பொருள்சார் சமநிலை அணுகுமுறையின் பொருள் குறிப்பிடுக**<br>* பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பை விளக்க ஆலன் நீஸ் மற்றும் R.V.அய்யர்ஸ் "பொருள்சார் சமநிலை அணுகுமுறை"யை வகுத்துள்ளனர்.<br>* உற்பத்தி முறைக்குள் உள்நுழையும் எந்தவொன்றும் பிறகு வெளியேறித்தான் ஆகவேண்டும் -- வெப்ப இயக்கவியல் முதல்விதி.<br>* இவ்விதியை ஆதாரமாகக்கொண்டு சுற்றுச்சூழலுக்கும் பொருளாதாரத்திற்கும் இடையேயான தொடர்பை விளக்குவதே பொருள்சார் சமநிலை அணுகுமுறை. |
| 30) | **பல்வகையான காற்று மாசுக்களை விளக்குக**<br>**காற்று மாசுபடுதலின் வகைகள்**<br>**1) உட்புறக் காற்று மாசு**<br>* மனிதர்களின் வசிப்பிடத்திற்குள் தீங்கு விளைவிக்கக்கூடிய அசுத்தங்கள் காற்றில் கலந்திருப்பது உட்புறக் காற்று மாசு எனப்படும்.<br>* திட எரிபொருள்களைக்கொண்டு சமையல் செய்கின்றபொழுது உட்புறக் காற்று மாசு அடைகின்றது<br>**2) வெளிப்புறக் காற்று மாசு**<br>* காற்று மண்டலத்தில் திட, திரவ, வாயு வடிவ அசுத்தங்கள் காற்றில் கலந்திருப்பது வெளிப்புறக் காற்று மாசு எனப்படும்.<br>* தொழிற்சாலைகளாலும் மோட்டார் வாகனங்களாலும் வெளிப்புறக் காற்று மாசு அடைகின்றது. |
| 31) | **நீர் மாசுக்கான காரணங்கள் யாவை?**<br>1) கழிவுநீரும் தேவையற்ற நீரும் வெளியேற்றப்படுதல்<br>2) திடக்கழிவுகளைக் குவித்தல்<br>3) ஆலைக் கழிவுகளைக் கொட்டுதல்<br>4) எண்ணெய் சிந்துதல்<br>5) அமில மழை<br>6) புவி வெப்பமடைதல்<br>7) நீர்நிலைகளில் பிராண வாயு குறைதல் |

| | |
|---|---|
| 32) | **இ -- கழிவுகள் என்பதன் பொருள் தருக**<br>* தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் E – கழிவுகள் என்று அழைக்கப்படும் மின்னணுக் கழிவுகள் ஏற்படுகின்றன.<br>* குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுச் சீரமைப்பிகள், கைபேசிகள், கணினிகள், கேட்கும் கருவிகள், தொலைபேசி, VCR, DVD, தொலைநகல், நகலெடுக்கும் இயந்திரங்கள் போன்ற வீட்டு உபயோக மின்னணுப் பொருள்களைக் கழிக்கும்போதும், மறுசுழற்சி செய்யும்போதும் தோன்றுவது E – கழிவுகள் எனப்படும். |
| 33) | **நில மாசு என்றால் என்ன? அதற்கான காரணங்களைக் குறிப்பிடுக**<br>**நில மாசு**<br>* திட, திரவ, வாயு வடிவிலான கழிவுகளை நிலத்தில் கொட்டுவதால் நிலத்தின் தன்மையைக் கெடுத்துவிடுதல் நில மாசு ஆகும்.<br>**நில மாசுவிற்கான காரணங்கள்**<br>1) காடுகளை அழித்தல்<br>2) வேளாண்மை நடவடிக்கைகள்<br>3) சுரங்கத் தொழில்கள்<br>4) மண்ணில் புதைத்தல்<br>5) தொழில்மயமாதல்<br>6) கட்டுமானப் பணிகள்<br>7) அணுமின் கழிவுகள் |
| 34) | **குறிப்பு வரைக -- அ) பருவநிலை மாற்றம் ஆ) அமில மழை**<br>**அ) பருவநிலை மாற்றம்**<br>* வளிமண்டலத்தில் பசுமைக்குடில் வாயுக்களின் அளவுகள் வளர்ந்துகொண்டே செல்வதால் நீண்டகாலத்தில் ஏற்படும் பருவநிலை மாறுபாடுகளே காலநிலை மாற்றம் எனப்படும்.<br>**ஆ) அமில மழை**<br>* காற்று மாசுவின் விளைவால் அமில மழை ஏற்படுகிறது.<br>* தொழிற்சாலைகள், ஊர்திகள், கொதிப்பான்கள் முதலானவை வெளியிடும் வாயுக்கள் வளிமண்டலத்திலுள்ள நீர்த்துகள்களோடு இணைந்து மழையாகப் பொழிவது அமில மழை எனப்படும். |

www.Padasalai.Net

| ஐந்து மதிப்பெண் வினா -- விடை | |
|---|---|
| 35) | **மொத்த தேசிய உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் தரத்திற்கும் இடையேயான தொடர்பினைச் சுருக்கமாக விளக்குக**<br>* மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் இயற்கைச்சூழலுக்கும் இடையே உள்ள தொடர்பே சுற்றுச்சூழல் பொருளியல்<br>* இயற்கையிலுள்ள உயிரினங்கள், உயிரற்ற பொருள்களுடன் இணைந்து மனித வாழ்க்கையைச் சுற்றுச்சூழலே பெருமளவு தீர்மானிக்கிறது<br>* உற்பத்தி முறைக்குள் உள்நுழையும் எந்தவொன்றும் பிறகு வெளியேறித்தான் ஆகவேண்டும் -- வெப்ப இயக்கவியல் முதல்விதி<br>* இவ்விதியை ஆதாரமாகக்கொண்டு சுற்றுச்சூழலுக்கும் பொருளாதாரத்திற்கும் இடையேயான தொடர்பை விளக்குவதே பொருள்சார் சமநிலை அணுகுமுறை என்று ஆலன் நீஸ் மற்றும் R.V.அய்யர்ஸ் கூறியுள்ளனர்<br>* உற்பத்திக்கு ஆதாரமான இயற்கைச் சூழலிருந்து எடுக்கப்படும் மூலப்பொருள் உள்வருவதும், அவை உற்பத்தி செய்யப்பட்டு நுகர்வுத்துறைக்குச் செல்கிறது<br>* உற்பத்தி, நுகர்வுத்துறையின் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுகிறது<br>* மனிதன் மற்றும் இதர உயிரினங்களின்மீது பாதிப்பை ஏற்படுத்துவதால் சுற்றுச்சூழல் தரம் என்பது மிகக் கவனத்துடன் கையாளப்படவேண்டியதாயிற்று<br>* முதலாளித்துவச் செயல்முறைகளினால் சுற்றுச்சூழல் தரம் தொடர்ந்து சரிந்துகொண்டே வருகிறது<br>* சுற்றுச்சூழல் என்பது ஒரு பொதுப்பொருளாகும். இப்பொருள் அனைவராலும் நுகரப்படும்<br>* எந்தவொரு தனிப்பட்ட நபரையும் சுற்றுச்சூழலைப் பயன்படுத்துவதிலிருந்து விலக்கி வைக்கவும் முடியாது, மற்றவர்களுக்கு கிடைக்கும் அளவும் குறையாது<br>* சுற்றுச்சூழலில் வளங்கள் குறைந்துகொண்டே செல்கின்றன<br>* நாட்டு வருமானத்தில் இயற்கை வளங்களின் பங்களிப்பை தற்போதுள்ள நாட்டு வருமானக் கணக்கீட்டில் அளவிடப்படுவது இல்லை |

| | |
|---|---|
| 36) | **புறவிளைவுகள் என்ற கருத்தினையும் அதன் வகைப்பாடுகளையும் விளக்குக**<br><br>**புறவிளைவுகள்**<br>* தனிநபர்களின் நுகர்ச்சி, உற்பத்தி ஆகிய பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக, அந்நடவடிக்கைகளில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பங்குபெறாத சமுதாயத்திலுள்ள மற்றவர்களுக்கு ஏற்படும் செலவு அல்லது பயன் புறவிளைவுகள் எனப்படும்.<br>**புறவிளைவுகளின் வகைப்பாடுகள்**<br><br>**1) நேர்மறை நுகர்ச்சிப் புறவிளைவு**<br>* ஒருவருடைய நுகர்ச்சிச்சார்பு மற்றொருவருடைய நுகர்ச்சிச்சார்பில் சாதகமான விளைவை ஏற்படுத்துவது ஆகும்<br>* ஒருநகரில் உள்ள சிலர் ஏற்பாடு செய்கின்ற தனியார் பாதுகாப்பு, அப்பகுதியில் குடியிருக்கும் மற்றவர்களுக்கும் செலவில்லாமல் பாதுகாப்பை ஏற்படுத்துகிறது<br>**2) எதிர்மறை நுகர்ச்சிப் புறவிளைவு**<br>* ஒருவருடைய நுகர்ச்சிச்சார்பு மற்றொருவருடைய நுகர்ச்சிச்சார்பில் பாதகமான விளைவை ஏற்படுத்துவது ஆகும்<br>* தனது வீட்டில் ஒலிபெருக்கிமூலம் அதிக சத்தத்தில் கேட்கும் பாடல் அவருக்கு பயன்பாட்டைத் தருகிறது. ஆனால் அருகில் உள்ளவர்களுக்கு அந்த ஒலிமாசு தொந்தரவினைத் தருகிறது<br>**3) நேர்மறை உற்பத்திப் புறவிளைவு**<br>* ஒருவருடைய உற்பத்திச்சார்பு மற்றொருவருடைய உற்பத்திச்சார்பில் சாதகமான விளைவை ஏற்படுத்துவது ஆகும்<br>* ஒருவர் தேனீ வளர்ப்புத் தொழிலைச் செய்து வருமானம் ஈட்டுகிறார் மற்றொருவர் தனது பண்ணையில் பழமரங்களை வளர்த்து வருகின்றார்<br>* தேனீக்களினால் ஏற்படும் மகரந்தச் சேர்க்கையினால் இரண்டாமவருக்கு அதிகமான பழ விளைச்சலையும் வருமானத்தையும் பெற்றுத் தருகிறது<br>**4) எதிர்மறை உற்பத்திப் புறவிளைவு**<br>* ஒருவருடைய உற்பத்திச்சார்பு மற்றொருவருடைய உற்பத்திச்சார்பில் பாதகமான விளைவை ஏற்படுத்துவது ஆகும்<br>* சிமிண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் காற்று மாசுபாட்டினால் அருகிலுள்ள உழவரின் நெல்விளைச்சல் பாதிக்கப்படுகிறது |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 37) | **நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சியின் முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக**<br><br>**நீடித்த நிலையான மேம்பாடு**<br>* இப்போதுள்ள தலைமுறையினருக்கு மட்டுமின்றி, எதிர்காலத் தலைமுறையினருடன் வாழ்வதற்குத் தேவையான வளத்தை வைத்துவிட்டு அடைகின்ற மேம்பாடே நீடித்த நிலையான மேம்பாடு எனப்படும்<br><br>**வளம்குன்றா வளர்ச்சி**<br>* பொருளாதார வளர்ச்சி, சமூகச் சேர்ப்பு, சுற்றுப்புறப் பாதுகாப்பு ஆகிய மூன்று குறிக்கோள்களையும் சேர்ந்து சாதிப்பதே வளம்குன்றா வளர்ச்சி எனப்படும்<br><br>**நோக்கங்கள்**<br><br>1) வறுமையற்ற நிலையை உருவாக்குதல்<br>2) ஊட்டச்சத்தால் உயர்ந்த பட்டினியில்லாச் சமுதாயத்தை உருவாக்குதல்<br>3) சிறந்த உடல்நலமுள்ள மனித சமுதாயத்தை உருவாக்குதல்<br>4) தரமான கல்வியை அனைவருக்கும் தருதல்<br>5) பாலினச் சமன்பாட்டைச் சாதித்தல்<br>6) தூய்மையான குடிநீர் மற்றும் துப்புரவை உறுதிப்படுத்துதல்<br>7) தூய்மையான, மலிவான ஆற்றலை உறுதிபடுத்துதல்<br>8) நல்ல வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியை வழங்குதல்<br>9) தேவையான கட்டமைப்பு வழங்கல் மற்றும் புத்தாக்கம் புனைதல்<br>10) ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்<br>11) நிலைத்த நகரங்கள் மற்றும் சமுதாயத்தை ஏற்படுத்துதல்<br>12) பொறுப்பான உற்பத்தி மற்றும் நுகர்வை மேற்கொள்ளல்<br>13) தட்பவெப்பநிலை மாற்றத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்<br>14) சமுத்திரங்கள் மற்றும் கடல்வளங்களைப் பாதுகாத்தல்<br>15) காடுகளைப் பராமரித்தல், நிலம் அழிவதையும் உயிர் பன்முகத்தன்மை இழப்பையும் தடுத்து நிறுத்துதல்<br>16) அமைதியான சமூகநீதியுள்ள சமுதாயத்தை உருவாக்குதல்<br>17) நீடித்த நிலையான வளர்ச்சிக்காக உலக ஒத்துழைப்பை உறுதிப்படுத்துதல்<br>**( ஏதேனும் பத்து நோக்கங்கள் மட்டும் )** |

www.Padasalai.Net

| K.J.கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி-- இராமநாதபுரம் மாவட்டம் | | |
|---|---|---|
| பன்னிரண்டாம் வகுப்பு -- பொருளியல் | | |
| அத்தியாயம் -- 11 பொருளாதார மேம்பாடும் திட்டமிடலும் | | |
| சரியான விடையைத் தெரிவு செய்க | | |
| 1) | " வளர்ச்சியுடன் கூடிய மறுபகிர்வு " கீழ்க்காணும் எந்த அணுகுமுறையின் புகழ்பெற்ற முழக்கம் இது.<br>அ) பழைமையான அணுகுமுறை<br>ஆ) புதிய பொதுநல அணுகுமுறை<br>இ) தொழில் அணுகுமுறை ஈ) இவற்றில் எதுவுமில்லை | ஆ) புதிய பொதுநல அணுகுமுறை |
| 2) | பின்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சியின் தன்மை இல்லாதவை எவை?<br>அ) வளர்ந்த நாடுகளைப் பற்றியது<br>ஆ) படிப்படியான மாற்றம் ஈ) விரிவான கருத்து<br>இ) எண்களின் அடிப்படையில் அமைந்தது | ஈ) விரிவான கருத்து |
| 3) | கீழ்க்காண்பவற்றுள் எது பின்தங்கிய நாடுகளின் பண்புகளில் ஒன்றாகும்.<br>அ) வறுமை நச்சுச் சுழற்சி<br>ஆ) பெரும் நுகர்வை அதிகப்படுத்துதல்<br>இ) தொழிற்சாலைகள் வளர்ச்சி<br>ஈ) அதிக அளவில் நகர்மயமாதல் | அ) வறுமை நச்சுச் சுழற்சி |
| 4) | கீழ்க்காண்பவற்றுள் எந்தப் பொருளாதாரம் சாராத காரணி, பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கிறது.<br>அ) இயற்கை வளங்கள் ஆ) மனித வளங்கள்<br>இ) மூலதன உருவாக்கம் ஈ) பன்னாட்டு வாணிகம் | ஆ) மனித வளங்கள் |
| 5) | பொருளாதார வளர்ச்சி ------------- ஐ அளவிடுகிறது<br>அ) உற்பத்தித்திறன் வளர்ச்சி<br>ஆ) பெயரளவு வருமான அதிகரிப்பு<br>இ) உற்பத்தி அதிகரிப்பு ஈ) இவை எதுவுமில்லை | இ) உற்பத்தி அதிகரிப்பு |
| 6) | அளிப்புப் பக்கத்திலிருந்து இயங்கும் வறுமை நச்சுச் சுழற்சியின்படி ஏழை நாடுகள் ஏழையாகவே இருக்கின்றன ஏனென்றால்<br>அ) சேமிப்புக் குறைவாகவே உள்ளது<br>ஆ) முதலீடு குறைவாகவே உள்ளது<br>இ) திறன் மிக்க அரசு இல்லை ஈ) அ மற்றும் ஆ | ஈ) அ மற்றும் ஆ |
| 7) | கீழ்க்காணும் எந்தத் திட்டம், வேளாண்மையும் கிராமப் பொருளாதாரத்தையும் மையமாகக் கொண்டது?<br>அ) மக்கள் திட்டம் ஆ) பாம்பே திட்டம்<br>இ) காந்தியத் திட்டம் ஈ) விஸ்வேஸ்வரய்யா திட்டம் | இ) காந்தியத் திட்டம் |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **8)** | கீழ்க்காணும் திட்டங்களை அவை முன்மொழியப்பட்ட ஆண்டின் அடிப்படையில் காலவரிசைப்படி தொகுத்து விடையைத் தேர்ந்தெடுக்கவும்.<br>i) மக்கள் திட்டம் iii) ஜவஹர்லால் நேரு திட்டம்<br>ii) பாம்பே திட்டம் iv) விஸ்வேஸ்வரய்யா திட்டம்<br>அ) i) ii) iii) iv) ஆ) iv) iii) ii) i)<br>இ) i) ii) iv) iii) ஈ) ii) i) iv) iii) | **ஆ) iv) iii) ii) i)** |
| **9)** | எம்.என்.இராய் வழங்கிய திட்டம் கீழ்க்காண்பவைகளில் எது?<br>அ) காங்கிரஸ் திட்டம் ஆ) மக்கள் திட்டம்<br>இ) பாம்பே திட்டம் ஈ) இவை எதுவுமில்லை | **ஆ) மக்கள் திட்டம்** |
| **10)** | சுட்டிக்காட்டும் திட்டமிடலைச் செயல்படுத்திய நாடு<br>அ) பிரான்சு ஆ) ஜெர்மனி இ) இத்தாலி ஈ) இரஷ்யா | **அ) பிரான்சு** |
| **11)** | குறுகியகாலத் திட்டத்தின் இன்னொரு பெயர்<br>அ) கட்டுப்படுத்தும் திட்டம் ஈ) சுழற்சியற்ற திட்டம்<br>ஆ) கட்டுப்பாட்டை நீக்கும் திட்டம் இ) சுழல் திட்டம் | **அ) கட்டுப்படுத்தும் திட்டம்** |
| **12)** | நீண்டகாலத் திட்டத்தின் மற்றொரு பெயர்<br>அ) மேம்பாட்டுத் திட்டம் இ) முன்னோக்குத் திட்டம்<br>ஆ) மேம்பாடு இல்லாத திட்டம்<br>ஈ) முன்னோக்கமற்ற திட்டம் | **இ) முன்னோக்குத் திட்டம்** |
| **13)** | நீண்டகாலத் திட்டமிடலின் அடிப்படைக் கருத்து நாட்டின் ------------ மாற்றமாகும்.<br>அ) நிதி ஆ) வேளாண்மை<br>இ) தொழில் ஈ) கட்டமைப்பு | **ஈ) கட்டமைப்பு** |
| **14)** | சர்வோதயத் திட்டத்தை முன்மொழிந்தவர் யார்?<br>அ) மகாத்மா காந்தி ஆ) ஜெயபிரகாஷ் நாராயணன்<br>இ) எஸ்.என்.அகர்வால் ஈ) எம்.என்.இராய் | **ஆ) ஜெயபிரகாஷ் நாராயணன்** |
| **15)** | இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு<br>அ) 1950 ஆ) 1951 இ) 1947 ஈ) 1948 | **அ) 1950** |
| **16)** | “ அடிமைத் தனத்திற்கான பாதை ” என்னும் புத்தகத்தை எழுதியவர் யார்?<br>அ) பிரடெரிக் ஹேயக் ஆ) ஜெ.ஆர்.ஹிக்ஸ்<br>இ) டேவிட் ரிகார்டோ ஈ) டி.ஆர்.மால்தஸ் | **அ) பிரடெரிக் ஹேயக்** |
| **17)** | முன்னோக்குத் திட்டத்தின் மற்றொரு பெயர்<br>அ) குறுகியகாலத் திட்டமிடல்<br>ஆ) நடுத்தரக்காலத் திட்டமிடல்<br>இ) நீண்டகாலத் திட்டமிடல்<br>ஈ) இவை எதுவுமில்லை | **இ) நீண்டகாலத் திட்டமிடல்** |
| **18)** | நிதி ஆயோக் எதன் மூலம் அமைக்கப்பட்டது?<br>அ) குடியரசுத் தலைவரின் அவசர ஆணை<br>ஆ) குடியரசுத் தலைவரின் சுற்றறிக்கை<br>இ) அமைச்சரவைத் தீர்மானம் ஈ) இவை எதுவுமில்லை | **இ) அமைச்சரவைத் தீர்மானம்** |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **19)** | நிதி ஆயோக்கின் ( NITI Aayog ) சரியான ஆங்கில விரிவாக்கம்<br>அ) National Institute for Transport in India<br>ஆ) National Institute for Trade in India<br>இ) National Institute for Tomorrow's India<br>ஈ) National Institute for Transforming India | **ஈ) National Institution for Transforming India** |
| **20)** | சட்டப்படியாக நிதி ஆயோக்கின் தலைவராகக் கீழ்க்காணும் எந்தப் பதவியில் உள்ள ஒருவர் செயல்படுவார்? இ) உதவிக் குடியரசுத் தலைவர்<br>அ) பிரதமர் ஆ) குடியரசுத் தலைவர் ஈ) நிதி அமைச்சர் | **அ) பிரதமர்** |

**இரண்டு மதிப்பெண் வினா -- விடை**

**21)** **பொருளாதார முன்னேற்றம் வரையறு**

* சமூக அமைப்பு, பொதுமக்களின் மனநிலை, நாட்டின் நிறுவன அமைப்புகள் ஆகியவற்றில் நிகழும் பெரிய மாற்றங்கள் ஆகியவற்றோடு விரைவான வளர்ச்சி, வருவாய் ஏற்றத்தாழ்வினைக் குறைத்தல், வறுமை ஒழிப்பு ஆகிய அனைத்தையுமே பொருளாதார முன்னேற்றமாகக் கருதவேண்டும் என்கிறார் **மைக்கேல் பி.டொடாரோ**

**22)** **பொருளாதார முன்னேற்றத்தின் குறியீடுகளைக் குறிப்பிடுக**

**1)** மொத்த நாட்டு உற்பத்தி **2)** தலாவீத மொத்த நாட்டு உற்பத்தி
**3)** நலன் **4)** சமூகக் குறியீடுகள்

**23)** **பொருளாதார வளர்ச்சியிலிருந்து முன்னேற்றத்தை வேறுபடுத்துக**

| வ. எண் | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | வளர்ந்த நாடுகளின் பொருளாதாரப் பிரச்சனைகளைக் கையாளுகிறது | வளரும் நாடுகளின் பொருளாதாரப் பிரச்சனைகளைக் கையாளுகிறது |
| 2 | மாற்றங்கள் படிப்படியாகவும் நிதானமாகவும் நிகழ்கின்றன | தொடர்ச்சியற்ற தன்னிச்சையான மாற்றங்கள் நிகழ்கின்றன |
| 3 | அதிக அளவான உற்பத்தியைக் குறிக்கின்றன | உற்பத்தி அதிகரிப்பது மட்டுமல்லாது உற்பத்தியாகும் பொருள்களின் வகைகளும் மாறுகின்றன |

**24)** **மொத்த நாட்டு உற்பத்தி என்றால் என்ன?**

* ஒருநாட்டின் புவி எல்லைக்குள் குறிப்பிட்ட ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள், பணிகளின் அங்காடி மதிப்புடன் அந்நாட்டு மக்கள் வெளிநாடுகளில் ஈட்டிய வருமானத்திற்கும், வெளிநாட்டினர் சம்பாதித்து அவர்கள் நாட்டுக்கு அனுப்பிய வருமானத்திற்கும் இடையிலான வேறுபாட்டுத் தொகையைக் கூட்டினால் கிடைக்கும் மொத்த மதிப்பு

**25)** **பொருளாதாரத் திட்டமிடலின் வரைவிலக்கணம் எழுதுக**

* பொருளாதாரத் திட்டமிடல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளை அடைய உரிய பொறுப்பில் உள்ளவர்கள் நிதானமாகச் சிந்தித்து, இருக்கக்கூடிய பொருளாதார வளங்களை அதிக அளவில் பயன்படுத்த சுட்டிக்காட்டும் வழிமுறைகளே ஆகும் **-- டால்டன்**

www.Padasalai.Net

**26)** **பொருளாதார முன்னேற்றத்தின் சமூகக் குறியீடுகளைப் பட்டியலிடுக**

* மக்களின் அடிப்படைத் தேவைகளையும் கூட்டுத்தேவைகளையும் நிவர்த்தி செய்வதை சமூகக் குறியீடுகள் என அழைக்கப்படுகிறது
* மக்களின் நலவாழ்வு, கல்வி, உணவு, குடிநீர், துப்புரவு, வீட்டுவசதி ஆகியவை சமூகக் குறியீடுகளாகும்.


**27)** **நிதி ஆயோக் பற்றி குறிப்பு வரைக**

* **N**ational **I**nstitution for **T**ransforming **I**ndia என்பதன் சுருக்கமே.
* இந்தியாவை உருமாற்றம் செய்வதற்கான தேசிய நிறுவனம்
* ஆகஸ்டு 13,2014 அன்று திட்டக்குழுவிற்குப் பதிலாக உருவாக்க இந்திய அரசு முடிவெடுத்து, ஜனவரி 1,2015 அன்று அமைக்கப்பட்டது
* இந்தியப் பிரதமரே தலைவர்.
* துணைத்தலைவரே நிர்வாகத் தலைவர்.

**மூன்று மதிப்பெண் வினா -- விடை**

**28)** **வறுமையின் நச்சுச் சுழற்சிக்கான கரணங்களை வரைபடத்துடன் தெளிவுபடுத்துக**
**வறுமையின் நச்சுச் சுழற்சி**

* ஏழைநாடுகளைத் தொடர்ந்து வறுமை நிலையிலேயே வைத்திருக்கும்விதத்தில் செயல்படுவதே வறுமையின் நச்சுச் சுழற்சி என ராகனர் நர்க்ஸ் கூறுகிறார்
* வறுமையின் நச்சுச் சுழற்சி தேவை மற்றும் அளிப்பு பக்கத்தில் செயல்படும்




**அளிப்புப் பக்கம்**

* குறைவான உண்மை வருமானம் காரணமாக சேமிப்பு அளவு குறைகிறது
* இது முதலீட்டைக் குறைக்கச்செய்து, மூலதனப் பற்றாக்குறை ஏற்பட்டு, உற்பத்தித்திறன் குறைந்து வருமானமும் குறைகிறது

**தேவைப் பக்கம்**

* குறைவான உண்மை வருமானம் காரணமாக தேவையின் அளவு குறைகிறது
* இது முதலீட்டைக் குறைக்கச்செய்து, மூலதனப் பற்றாக்குறை ஏற்பட்டு, உற்பத்தித்திறன் குறைந்து வருமானமும் குறைகிறது

www.Padasalai.Net

| | |
|---|---|
| **29)** | **பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை?**<br><br><br>**( ஏதேனும் ஐந்து மட்டும் )** |
| **30)** | **வறுமையின் நச்சுச் சுழற்சியை எப்படி தடுப்பது?**<br>**அளிப்புப் பக்கம்**<br>* கடந்தகாலச் சராசரிச்சேமிப்பு விகிதத்தைவிட இறுதிநிலைசேமிப்பு அளவை அதிகமாக இருக்கச்செய்து வறுமையின் நச்சுச் சுழற்சியைத் தடுக்கலாம்<br>**தேவைப் பக்கம்**<br>* ஒரே நேரத்தில் பலவகைத் தொழில்களில் ஒருநாடு முதலீடு செய்யும்போது தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பதோடு நுகர்வோர்களாகவும் மாறுவர்<br>* மற்ற தொழிலாளர்களும் நுகர்வோர்களாக மாறும்போது சரிநிகர் சமமான முன்னேற்றம் ஏற்படும்.<br>* அனைத்துத் தொழில்களின் சரிநிகர் சமமான வளர்ச்சியின்மூலம் வறுமையின் நச்சுச் சுழற்சியைத் தடுக்கலாம் |
| **31)** | **இந்தியாவில் பொருளாதாரத் திட்டமிடல் படிநிலை வளர்ச்சியை மதிப்பிடுக.**<br>**படிநிலை வளர்ச்சி**<br>**1) சர்.எம்.விஸ்வேஸ்வரய்யா (1934)**<br>* இந்தியாவில் திட்டமிடலுக்கான அடித்தளத்தை அமைத்தவர்<br>* பத்தாண்டுத்திட்டம் ஒன்றினை " இந்தியப் பொருளாதாரத் திட்டமிடல் " என்ற தனது புத்தகத்தில் விளக்கியுள்ளார்<br>**2) ஜவஹர்லால் நேரு (1938)**<br>* தேசிய திட்டக் குழுவை அமைத்தார்<br>**3) பாம்பே திட்டம் (1940)**<br>* மும்பையின் தொழிலதிபர்கள் பதினைந்து ஆண்டுகளுக்கான தொழில் முதலீட்டுத் திட்டமான பாம்பே திட்டத்தை 1940-இல் முன்மொழிந்தனர்<br>**4) எஸ்.என்.அகர்வால் (1944)**<br>* வேளாண்மை மற்றும் கிராமியப் பொருளாதார முன்னேற்றத்திற்கான காந்தியத் திட்டத்தை வழங்கினார். |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 31) | **5) எம்.என்.ராய் (1945 )**<br>* வேளாண்மை உற்பத்தி மற்றும் விநியோகத்தை இயந்திரமயமாக்கவும், நுகர்வுப் பொருள்களை அரசே விநியோகிக்கவும் வலியுறுத்தி மக்கள் திட்டத்தை வடிவமைத்தார்<br>**6) ஜெயப்பிரகாஷ் நாராயணன் (1950 )**<br>* விவசாயம், சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் ஊக்கமளிக்க சர்வோதயத் திட்டத்தை முன்மொழிந்தார்<br>**( ஏதேனும் மூன்று தலைப்புகள் மட்டும் )** |
| 32) | **திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துகளை விவரி**<br>**1) நாட்டின் அங்காடிகளின் இயக்கத்தை முடுக்கிவிடுதலும் உறுதியாக்குதலும்**<br>* பின்தங்கிய நாடுகளில் அங்காடிச் சக்திகள் சரிவர இயங்கவில்லை<br>* பொருள்கள், உற்பத்திக்காரணிகள், பண அங்காடிகள், மூலதன அங்காடிகள் அமைப்புமுறை ஒழுங்குற அமைக்கப்படவில்லை<br>* திட்டமிடப்பட்ட பொருளாதாரமே சிறந்த மாற்றாகக் கருதப்படுகிறது<br>**2) வேலையின்மையை அகற்றுதல்**<br>* மூலதனக்குறைவால் அதிகரிக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வேலைவாய்ப்பை உருவாக்குவது அரசுக்கு சவாலாக உள்ளது<br>* பின்தங்கிய நாடுகளில் வேலையின்மை, மறைமுகவேலையின்மையை அகற்ற திட்டமிடுதல் அவசியமாகும்<br>**3) சமமான முன்னேற்றம் ஏற்படுத்துதல்**<br>* பெரிய நிறுவனங்கள் இல்லாத சூழ்நிலையில் திட்டக்குழுவே சரிசம முன்னேற்றத்தை ஏற்படுத்த உதவும்<br>* பின்தங்கிய நாடுகளில் வேளாண்மை, தொழில், கட்டமைப்பு, பண அங்காடி, மூலதன அங்காடி, உள்நாடு (ம) பன்னாட்டு வாணிகம் ஆகிய துறைகளின் முன்னேற்றம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவைப்படுகிறது<br>**4) வறுமையையும் ஏற்றத்தாழ்வையும் குறைக்கும்**<br>* திட்டமிடல் என்பது மட்டுமே பின்தங்கிய நாடுகள், நாட்டு வருமானம், தலா வருமானத்தை அதிகரிக்கவும், வறுமை மற்றும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும், வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும் செய்கிறது<br>**( ஏதேனும் மூன்று கருத்துகள் மட்டும் )** |
| 33) | **செயல்பாட்டுத் திட்டமிடலுக்கும் அமைப்புமுறைத் திட்டமிடலுக்கும் இடையேயான வேறுபாடுகளை எழுதுக**<br>**செயல்பாட்டுத் திட்டமிடல்**<br>* ஒருநாடு பெற்றுள்ள பொருளாதார, சமூகக் கட்டமைப்புமுறையை மாற்றாமல் பொருளாதாரச் சீர்கேடுகளை நீக்குவதற்கு வழிகாட்டுதல்கள் செய்வது.<br>* பணிகள் திட்டமிடல் என்றும் அழைக்கப்படுகிறது<br>**அமைப்புமுறைத் திட்டமிடல்**<br>* ஒருநாடு பெற்றுள்ள பொருளாதார அமைப்புமுறையில் பொருத்தமான மாற்றங்களைச்செய்து இலக்குகளை அடைவதற்கான திட்டமாகும்.<br>* கட்டமைப்புத் திட்டமிடல் என்றும் அழைக்கப்படும் இத்திட்டம் பின்தங்கிய நாடுகளில் காணப்படுகிறது. |

| | |
|---|---|
| 34) | **நிதி ஆயோக்கின் பணிகள் யாவை?**<br><br>**நிதி ஆயோக்கின் பணிகள்**<br>**1)** கூட்டுறவும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சயுமி<br>**2)** நாட்டின் நிகழ்வுகளில் மாநிலங்களைப் பங்கெடுக்கவைத்தல்<br>**3)** பரவலாக்கப்பட்ட திட்டமிடல்<br>**4)** தொலைநோக்கும் காட்சித் திட்டமிடலும்<br>**5)** நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்<br>**6)** உகந்ததாக்குதல்<br>**7)** சச்சரவு தீர்த்தல்<br>**8)** வெளியுலகத் தொடர்பை ஒருங்கிணைத்தல்<br>**9)** உள்நாட்டு ஆலோசனைகளை வழங்குதல்<br>**10)** திறன் உருவாக்குதல்<br>**11)** கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்<br>**( ஏதேனும் ஐந்து மட்டும் )** |

www.Padasalai.Net

| ஐந்து மதிப்பெண் வினா -- விடை | |
|---|---|
| 35) | **பொருளாதார முன்னேற்றத்தைத் தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும்**<br>**பொருளாதாரம் சார்ந்த காரணிகள்**<br>**1) இயற்கை வளங்கள்**<br>* ஒருநாடு பெற்றுள்ள இயற்கைவளங்களின் அளவு அந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் காரணியாகும்<br>* இயற்கைவளங்கள் பற்றாக்குறையான நாடு விரைவாக முன்னேற இயலாது<br>**2) மூலதன உருவாக்கம்**<br>* அனைத்துப் பொருளாதாரச்செயல்பாட்டிற்கும் அடிப்படை மூலதனமே<br>* ஏற்கனவே உள்ள இருப்புடன் தற்போது கூடும் நிகர அளவு மூலதனமே மூலதன உருவாக்கம் எனப்படும்<br>* தொழிலாளர் உற்பத்தித்திறன் அதிகரிப்பு, தொழில்மயமாக்கல், அங்காடி விரிவாக்கம் ஆகியவற்றிற்கு மூலதன உருவாக்கம் உதவுகிறது<br>**3) சந்தையின் அளவு**<br>* பெரிய அளவிலான சந்தை கூடுதலான உற்பத்தி, அதிக வேலைவாய்ப்பு, தலாவருமான உயர்வு ஆகியவற்றைத் துாண்டுகிறது<br>* அங்காடி அளவை வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்வதன்மூலம் பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவுகிறது<br>**4) கட்டமைப்பு மாற்றம்**<br>* தொழில் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றமே கட்டமைப்பு மாற்றம் எனப்படும்<br>* விவசாயம், தொழில்கள், பணிகள் ஆகியன முறையே முதன்மை, இரண்டாம் மற்றும் மூன்றாம் துறைகளாகும்<br>* வேளாண்மையை மட்டும் சார்ந்திருக்கும் நாடு பின்தங்கியே இருக்கும்<br>**5) நிதியியல்முறை**<br>* சிறந்தமுறையில் கட்டமைக்கப்பட்ட வங்கிமுறையே நிதியியல்முறையாகும்<br>* ஒழுங்குற அமைக்கப்பட்ட பணஅங்காடி தேவையான மூலதனத்தை வழங்கும்<br>**6) விற்பனைக்குரிய உபரி**<br>* வேளாண்துறையில் குடும்பத்திற்கான நுகர்வுத்தேவையைவிடக் கூடுதலாக உற்பத்தி செய்வது விற்பனைக்குரிய உபரி ஆகும்<br>* இதனால் பொருள் உற்பத்தி அதிகரித்து வேலைவாய்ப்பும் நாட்டுவருமானமும் உயர்ந்து நாடு முன்னேற்றமடையும்<br>**7) பன்னாட்டு வாணிகம்**<br>* சாதகமான பன்னாட்டு வாணிகத்தால் அந்நியச் செலாவணிக் கையிருப்பு அதிகரித்து நாட்டின் பணமாற்றவீதம் ஏற்ற இறக்கமின்றி நிலைத்திருக்கும்<br>**8) பொருளாதார அமைப்புமுறை**<br>* ஒருநாடு தடையில்லாப் பொருளாதாரக்கொள்கையைக் கடைபிடித்தால் கட்டளைப் பொருளாதாரத்தைவிட வேகமான வளர்ச்சி பெறும்<br>**( ஏதேனும் ஐந்து காரணிகள் மட்டும் )** |

www.Padasalai.Net

36)

**பல்வேறு வகையான திட்டமிடல் வகைகளை விவரி**

**1) a) மக்களாட்சித் திட்டமிடல்**

* திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதலில் உள்ள அனைத்து நிலைகளிலும் மக்கள் பங்கெடுத்துக்கொள்ளும் திட்டமாகும்
* அரசு, தனியார், பொதுமக்கள் ஆகியோரின் ஆலோசனைகளைப்பெற்றுத் தயரிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும் திட்டமிடல்முறை

**1) b) சர்வாதிகாரத் திட்டமிடல்**

* மத்திய கட்டுப்பாடு மற்றும் வழிகாட்டுதலின்படியான திட்டமிடல்முறை
* நுகர்வு, பரிமாற்றம், பகிர்வு ஆகிய அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டிலிருக்கும்
* இலக்குகள், செயல்முறைகள், ஒதுக்கீடுகள், செயல்படுத்துதல் ஆகியவற்றை அதிகாரமிக்க திட்டக்குழுவே முடிவு செய்யும்

**2) a) மையப்படுத்தப்பட்ட திட்டமிடல்**

* திட்ட நடவடிக்கைகள் மையத்திட்டக்குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும்
* திட்டம் தீட்டுதல், நோக்கங்களை நிர்ணயித்தல், இலக்குகளைக் கண்டறிதல், தீர்மானித்தல் ஆகியவற்றைத் திட்டக்குழுவே செய்யும்
* மேலிருந்து திட்டமிடல் என்று அழைக்கப்படுகிறது

**2) b) பரவலாக்கப்பட்ட திட்டமிடல்**

* உள்ளூர் அமைப்புகளும் உள்ளூர் நிறுவனங்களும் திட்டங்களைத் தீட்டுதல், செயல்படுத்துதல், கண்காணித்தல் ஆகியவற்றைச் செய்யும்
* கீழிருந்து திட்டமிடல் என்று அழைக்கப்படுகிறது

**3) a) வழிகாட்டும் திட்டமிடல்**

* திட்டக்குழு வழிகாட்டுதல் வழங்கித் திட்டங்களைத் தயாரித்து திட்டத்தை ஆணையிடுதல்மூலம் செயல்படுத்துவது
* முன்பே முடிவுசெய்த இலக்குகள், முன்னுரிமை அடிப்படையில் செயல்படும்

**3) b) தூண்டும் திட்டமிடல்**

* திட்டக்குழு நிர்ணயம் செய்த இலக்குகளை நிதியியல் மற்றும் பணவியல் வழிமுறைகள்மூலம் ஊக்கங்கள் அளித்து, மக்களால் மேற்கொள்வது
* தனிமனித விடுதலையைக் குறைக்காமல் அதே பலனைப் பெறவைக்கும் தன்மை கொண்டது

**4) a) சுட்டிக்காட்டும் திட்டமிடல்**

* திட்டக்குழு இலக்குகளை அடையும் வழிமுறைகளைக் குறிப்புரைகளாகத் தயாரித்து, தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள்,தொழிற்சங்கத்தலைவர்கள் நுகர்வோர் குழுக்கள், நிதிநிறுவனங்கள், பிறதுறை நிபுணர்கள் ஆகியேரிடம் கலந்து ஆலோசித்து செயல்படுத்தும் திட்டமிடல்
* மோனட் திட்டம் என்ற பெயரில் பிரான்ஸ் 1947 -1950 வரை செயல்படுத்தியது

**4) b) கண்டிப்பானத் திட்டமிடல்**

* திட்டம் தயாரித்தலிலும் செயல்படுத்துவதிலும் அரசே அதிகாரமிக்கது
* திட்டம் தயாரித்து முடித்துவிட்டால் எவ்வித தடைகளின்றி செயல்படுத்தப்படும்
* சீனாவும் ரஷ்யாவும் இத்திட்டமிடலைக் கடைபிடிக்கிறது

www.Padasalai.Net

36)

**5) a) குறுகியகாலத் திட்டமிடல் ( செயல்பாட்டுத் திட்டமிடல் )**

* ஓராண்டில் செயல்படுத்தப்படுவது குறுகியகாலத் திட்டங்கள்
* கட்டுப்படுத்தும் திட்டம், ஆண்டுத்திட்டம் எனவும் அழைக்கப்படுகிறது

**5) b) நடுத்தரக்காலத் திட்டமிடல் (தந்திரமான திட்டமிடல் )**

* மூன்றிலிருந்து ஏழாண்டு காலத்தில் முடிவடையும் திட்டங்கள்
* ஐந்தாண்டுத் திட்டங்களாகவே செயல்படுத்தப்படுகின்றன
* நிதி மட்டுமல்லாது கட்டமைப்பு வளங்களும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது

**5) c) நீண்டகாலத் திட்டமிடல் ( வியூகத் திட்டமிடல் )**

* பத்திலிருந்து முப்பது ஆண்டு காலங்களுக்குத் தீட்டப்படும் திட்டங்கள்
* முன்னோக்குத் திட்டம் என்று அழைக்கப்படுகிறது
* பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றங்களைக் கொண்டுவருவது இதன் அடிப்படையாகும்

**6) a) நிதித்திட்டமிடல்**

* திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான நிதியைப் பணமதிப்பில் ஒதுக்கீடு செய்யும் திட்டமிடலாகும்

**6) b) உருவப்பொருள் திட்டமிடல்**

* மனித வளம், இயற்கை வளம், இயந்திரங்கள் முதலான பருமப் பொருள்களை ஒதுக்கீடு செய்யும் திட்டமாகும்

**7) a) பணிகள் திட்டமிடல்**

* ஒருநாடு பெற்றுள்ள பொருளாதார, சமூக அமைப்புமுறையை மாற்றாமல் பொருளாதாரச் சீர்கேடுகளை நீக்குவதற்கு வழிகாட்டும் திட்டம்
* செயல்பாட்டுத் திட்டமிடல் என்றும் அழைக்கப்படுகிறது

**7) b) கட்டமைப்புத் திட்டமிடல்**

* ஒருநாடு பெற்றுள்ள பொருளாதார அமைப்புமுறையில் பொருத்தமான மாற்றங்களைச்செய்து இலக்குகளை அடையும் திட்டம்
* அமைப்புமுறைத் திட்டமிடல் என்றும் அழைக்கப்படுகிறது
* பின்தங்கிய நாடுகளில் காணப்படுகிறது

**8) a) விரிவானத் திட்டமிடல்**

* நாட்டின் அனைத்துப் பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான திட்டம்

**8) b) பகுதித் திட்டமிடல்**

* சில துறைகளுக்கு மட்டும் இலக்கு நிர்ணயித்து, அடைய தீட்டப்படும் திட்டம்

**( ஏதேனும் ஐந்து ஜோடி திட்டமிடல் மட்டும் )**

www.Padasalai.Net

| | |
|---|---|
| 37) | **திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும்**<br>**1) தன் விருப்பம்போல் செயல்பட இயலாமை**<br>* திட்டமிட்ட பொருளாதாரத்தில் சிக்கலான முடிவுகளை மத்தியத் திட்டக்குழு எடுப்பதால் நுகர்வோர், உற்பத்தியாளர், பணியாளர்களை கட்டுப்படுத்துகிறது<br>* அரசின் முடிவுகள் சரியாக இல்லாததால் தனியார் உற்பத்தியாளர்களுக்கு சுதந்திரம் வழங்கி, மக்கள்நலன் புறக்கணிக்கப்பட்டு இலாபத்திற்கே முக்கியத்துவம் வழங்கப்படுகிறது<br>* மக்களின் பொருளாதார விடுதலையைக் கட்டுப்படுத்தினால் நாடு பொருளாதார மந்தநிலைக்குச்செல்லும் என்கிறார் **பிரடெரிக் ஹேயக்**<br>**2) தன் முனைப்புக் குறைதல்**<br>* ஊக்கப்படுத்துதலுக்கும் புதுமைகளைப் புகுத்துதலுக்கும் இடமளிக்காது வழக்கமான செயல்முறைகளைப் பின்பற்றி வளர்ச்சியில் தேக்கத்தை உண்டுபண்ணுகிறது<br>* இடர்தாங்கிப் புதுமையைப் புகுத்தி இலாபத்தைப் பெறத் தூண்டுதல் இல்லை<br>* இடர்பாடுகளை ஏற்றுப் புதிய நிறுவனங்களைத் துவக்க முன்வருவதில்லை<br>* உயர் பதவியில் உள்ளவர்கள் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துகின்றனர்<br>**3) அதிகமான நிர்வாகச் செலவு**<br>* தொழில்மயமாக்கல், சமூகநீதி, நாட்டு நிலைமையைச் சமப்படுத்துதல் ஆகியவற்றுக்காகச் செலவிடும் தொகை அடையவுள்ள பலனைவிட அதிகம்<br>* சரியான புள்ளிவிபரம் இல்லாமை, தவறாகக் கணிப்பது, திட்டமிடுதலைச் சரிவரச் செயல்படுத்தாது போன்றவை வளங்களை வீணடித்து உபரி அல்லது பற்றாக்குறை ஏற்படும்<br>* திட்டமிடல் சிறப்பாக அமையவேண்டுமானால் கூடுதலான திட்டமிடல் நிபுணர்கள் தேவை என்கிறார் **ஆர்தர் லூயிஸ்**<br>**4) முன்கணிப்பதில் உள்ள இடர்கள்**<br>* அரசு தடையில்லாத நாட்டில் அங்காடிச் சக்திகள் தானாக இயங்கி ஒன்றையொன்று சரிசெய்து கொள்கிறது<br>* திட்டமிடல் நாடுகளில் அளிப்பும் தேவையும் விலைமாற்றத்திற்கேற்ப சரிசெய்துகொள்ளும் வசதி இல்லை<br>* நுகர்வு மற்றும் உற்பத்தியை துல்லியமாக முன்கணிக்க இயலவில்லை |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **K.J.கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி-- இராமநாதபுரம் மாவட்டம்** | | |
| **பன்னிரண்டாம் வகுப்பு -- பொருளியல்** | | |
| **அத்தியாயம் -- 12 புள்ளியியல் முறைகளும் பொருளாதார அளவையியலும் ஓர் அறிமுகம்** | | |
| **சரியான விடையைத் தெரிவு செய்க** | | |
| **1)** | ஸ்டாட்டிஸ்டிக்ஸ் (Statistics) எனும் சொல் .........ஆகும்<br>அ) ஒருமை இ) ஒருமை மற்றும் பன்மை<br>ஆ) பன்மை ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை | **இ) ஒருமை மற்றும் பன்மை** |
| **2)** | புள்ளியியல் எண் விவரங்களைப் பற்றிப் படிக்கும் பயன்பாட்டுக் கணிதத்தின் ஒரு சிறப்புப் பகுதி என்று கூறியவர் யார்?<br>அ) ஹோராஸ் செக்ரிஸ்ட் ஆ) ஆர்.ஏ. ஃபிஷர்<br>இ) யா -- லன் -- சூ ஈ) போடிங்டன் | **ஈ) போடிங்டன்** |
| **3)** | இரண்டாம்நிலை விவரங்களுக்கான ஆதாரம் ..............<br>அ) வெளியிடப்பட்ட விவரங்கள்<br>ஆ) வெளியிடப்படாத விவரங்கள்<br>இ) மேற்சொன்ன இரண்டில் ஒன்று ஈ) அ மற்றும் ஆ | **ஈ) அ மற்றும் ஆ** |
| **4)** | கேள்வித்தாள்மூலம் புள்ளிவிவரம் திரட்டப்பட்டால் அது ......................<br>அ) முதல்நிலை விவரம் ஆ) இரண்டாம்நிலை விவரம்<br>இ) வெளியிடப்பெற்ற விவரம் ஈ) தொகுக்கப்பட்ட விவரம் | **அ) முதல்நிலை விவரம்** |
| **5)** | நேர்கோட்டு உறவினைக் கொண்டிருக்கும் இருமாறிகளின் உறவின் அளவினை அளக்கும் முறைக்கு ...................... பெயர்<br>அ) சரிவு ஆ) அச்சுவெட்டு<br>இ) உடன்தொடர்புக்கெழு ஈ) ஒட்டுறவுச் சமன்பாடு | **இ) உடன் தொடர்புக்கெழு** |
| **6)** | X, Y ஆகிய மாறிகள் இரண்டும் ஒரே திசையில் மாறினால், உடன்தொடர்புக்கெழு எவ்வாறு இருக்கும்?<br>அ) நேர்மறையாக ஆ) எதிர்மறையாக இ) 0 ஈ) 1 | **அ) நேர்மறையாக** |
| **7)** | ஒருசிதறல் விளக்கப்படத்தில் ஒருமாறி அதிகரித்துச் செல்லும்போது மற்றொரு மாறி குறைந்துசென்றால் உடன்தொடர்புக்கெழுவின் அளவு எவ்வாறு இருக்கும்<br>அ) முழுநேர்கணியமாக ஆ) முழு எதிர்மறையாக<br>இ) எதிர்மறையாக ஈ) 0 | **இ) எதிர்மறையாக** |
| **8)** | உடன்தொடர்புக்கெழு $\gamma$ - இன்அளவு எந்த எல்லைக்குள் இருக்கும்?<br>அ) 0 மற்றும் 1 ஆ) -1 மற்றும் 0<br>இ) -1 மற்றும் 1 ஈ) - 0.5 மற்றும் 0.5 | **இ) -1 மற்றும் 1** |
| **9)** | ஒட்டுறவு என்னும் கருத்தினை முதலில் பயன்படுத்தியவர்<br>அ) நியூட்டன் ஆ) பியர்சன்<br>இ) ஸ்பியர்மேன் ஈ) கால்டன் | **ஈ) கால்டன்** |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **10)** | ஒட்டுறவுப் பகுப்பாய்வின் நோக்கம் என்ன?<br>**அ) ஒருகாரணியின் மதிப்பினைக்கொண்டு அடுத்த காரணியின் மதிப்பினைக் கண்டறிவது**<br>ஆ) சிதறல் விளக்கப்படத்தில் உள்ள புள்ளிகளுக்குப் பதிலாக கோட்டினை வரைவது<br>இ) இருமாறிகளும் எந்த அளவுக்கு உறவு கொண்டுள்ளன என்பதைத் தெரிந்துகொள்வதற்கு<br>ஈ) சாரா மாறியின் எதிர்பார்க்கப்படும் மதிப்பினைத் தெரிந்துகொள்ள சார்பு மாறியின் மதிப்பினை அளித்தல் | **அ) ஒருகாரணியின் மதிப்பினைக் கொண்டு அடுத்த காரணியின் மதிப்பினைக் கண்டறிவது** |
| **11)** | சார்பு மாறியின் மதிப்பினை மதிப்பீடு செய்வதற்காகச் சாரா மாறிகளைப் பயன்படுத்தும் செயலுக்கு .................... பெயர்<br>அ) உடன்தொடர்புக்கெழு ஆ) சரிவு<br>இ) ஒட்டுறவு ஈ) பிழைக்கருத்து | ஆ) சரிவு |
| **12)** | $Y = 2 - 0.2 \times$ எனில், Y அச்சு வெட்டு ................. ஆகும்<br>அ) $-2$ ஆ) $2$ இ) $0.2\ X$<br>ஈ) மேற்சொன்ன அனைத்தும் | **ஆ) 2** |
| **13)** | $Y = \beta_0 + \beta_{1X}$, என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில் $Y$ என்பது ....................<br>அ) சாரா மாறி ஆ) சார்பு மாறி<br>இ) தொடர்ச்சி மாறி ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை | ஆ) சார்பு மாறி |
| **14)** | $Y = \beta_0 + \beta_{1X}$, என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில் $x$ என்பது ....................<br>அ) சாரா மாறி ஆ) சார்பு மாறி<br>இ) தொடர்ச்சி மாறி ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை | அ) சாரா மாறி |
| **15)** | பொருளாதார அளவையியல் என்பது எதன் இணைப்பு?<br>அ) பொருளியலும் புள்ளியியலும்<br>ஆ) பொருளியலும் கணிதமும்<br>இ) பொருளியல், கணிதம், புள்ளியியல் ஆகியன<br>ஈ) மேற்சொன்ன ஏதுவுமல்ல | இ) பொருளியல், கணிதம், புள்ளியியல் ஆகியன |
| **16)** | பொருளாதார அளவையியல் என்னும் சொல்லை உருவாக்கியவர் யார்?<br>அ) ஃபிரான்சி கால்டன் ஆ) ராக்னர் ஃபிர்ஸ்க்<br>இ) கார்ல் பியர்சன் ஈ) ஸ்பியர்மேன் | ஆ) ராக்னர் ஃபிர்ஸ்க் |
| **17)** | பொருளாதார அளவையியலுக்கான மூலப்பொருள் ............<br>அ) புள்ளி விவரம் ஆ) பொருள்கள்<br>இ) புள்ளியியல் ஈ) கணிதம் | அ) புள்ளி விவரம் |
| **18)** | U என்பது ...................<br>அ) விலகல் ஆ) திட்டப்பிழை<br>இ) பிழைக்கருத்து ஈ) மேற்சொன்ன எதுவும் அல்ல | இ) பிழைக்கருத்து |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **19)** | U என்பது எதைக் குறிக்கிறது?<br>அ) விடுபட்டக் காரணிகள்    ஆ) திட்டப்பிழை<br>இ) பிழை    ஈ) தொடர்ச்சியற்றக் காரணி | **அ) விடுபட்டக் காரணிகள்** |
| **20)** | பொருளாதார அளவையியல் என்பது எத்தனை பாடங்களின் இணைப்பு?<br>**அ) 3 பாடங்கள்**    ஆ) 4 பாடங்கள்<br>இ) 2 பாடங்கள்    ஈ) 5 பாடங்கள் | **அ) 3 பாடங்கள்** |
| **இரண்டு மதிப்பெண் வினா -- விடை** | | |
| **21)** | **புள்ளியியல் என்றால் என்ன?**<br>* புள்ளியியல் என்பது மதிப்பீடுகளையும் நிகழ்தகவுகளையும் பற்றிய அறிவியல்<br>**-- போடிங்டன் --** | |
| **22)** | **புள்ளியியலின் வகைகள் யாவை?**<br>**1.** விவரிப்புப் புள்ளியியல்<br>**2.** உய்த்துணர்வுப் புள்ளியியல் | |
| **23)** | **உய்த்துணர்வுப் புள்ளியியல் என்றால் என்ன?**<br>* ஒரு முழுத்தொகுப்பின் புள்ளி விவரங்களைப்பற்றி உய்த்துணர்வதற்கு மாதிரி ஆய்வுப் புள்ளி விவரங்களைப் பயன்படுத்துவது | |
| **24)** | **புள்ளிவிவர வகைகள் யாவை?**<br>1. அளவு விவரங்கள்<br>2. பண்பு விவரங்கள் | |
| **25)** | **உடன்தொடர்பு என்பதனை வரையறு?**<br>* இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புகொண்டு மாறுகின்றன என்பதைப்பற்றிக் கணக்கிடுவது<br>* கண்டறிந்தவர் ---- சர் பிரான்சிஸ் கால்டன் | |
| **26)** | **ஒட்டுறவு என்பதனை வரையறு?**<br>* இருமாறிகளுக்கு இடையேயுள்ள உறவை விளக்குகிறது<br>* **Y** சார்புமாறி, **X** தனித்தமாறியாக இருந்தால், இருமாறிகளுக்கு இடையேயுள்ள நேர்கோட்டுத்தொடர்பு **X** -இன்மீது **Y** சார்ந்த ஒட்டுறவுக்கோட்டுச் சமன்பாடு<br>* கண்டறிந்தவர் ---- சர் பிரான்சிஸ் கால்டன் | |
| **27)** | **பொருளாதார அளவையியல் என்றால் என்ன?**<br>* பொருளியல், புள்ளியியல், கணிதம் ஆகிய மூன்று பாடங்களின் ஒருங்கிணைப்பாகும். | |
| **மூன்று மதிப்பெண் வினா -- விடை** | | |
| **28)** | **புள்ளியியலின் பணிகள் யாவை?**<br>**1.** புள்ளியியல் விவரங்களைத் துல்லியமாக வழங்குகிறது<br>**2.** பரந்த விவரங்களைச் சுருக்கித் தருகிறது<br>**3.** ஒப்பீடு செய்ய உதவுகிறது<br>**4.** எடுகோள்களை உருவாக்கவும், சோதனைக்கு உட்படுத்தவும் உதவுகிறது<br>**5.** மதிப்பீடு செய்ய உதவுகிறது<br>**6.** கொள்கைகளை உருவாக்க உதவுகிறது<br>**( ஏதேனும் மூன்று பணிகள் )** | |

www.Padasalai.Net

**29)**

**பின்வரும் விவரங்களுக்குத் திட்ட விலக்கம் காண்க**

**14, 22, 9, 15, 20, 17, 12, 11**

**தீர்வு**

* உண்மையான சராசரியிலிருந்து திட்ட விலக்கம் காணும் முறை

| வ.எண் | மதிப்பு ( X ) | $(X - \bar{X})$ | $(X - \bar{X})^2$ |
|---|---|---|---|
| 1 | 14 | $14 - 15 = -1$ | 1 |
| 2 | 22 | $22 - 15 = 7$ | 49 |
| 3 | 09 | $09 - 15 = -6$ | 36 |
| 4 | 15 | $15 - 15 = 0$ | 0 |
| 5 | 20 | $20 - 15 = 5$ | 25 |
| 6 | 17 | $17 - 15 = 2$ | 4 |
| 7 | 12 | $12 - 15 = -3$ | 9 |
| 8 | 11 | $11 - 15 = -4$ | 16 |
| n = 8 | $\sum X = 120$ | $\sum (X - \bar{X}) = 0$ | $\sum (X - \bar{X})^2 = 140$ |

கூட்டுச்சராசரி $\bar{X} = \frac{\sum X}{n} = \frac{120}{8} = 15$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\sum (X - \bar{X})^2}{n}} = \sqrt{\frac{140}{8}}$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{17.5} = 4.18$

**30)**

**பல்வகையான உடன்தொடர்புகளைக் கூறி விளக்குக.**

**I.** மாறிகளுக்கு இடையேயான உறவின் திசை அடிப்படையில்

**1)** நேர்மறை உடன்தொடர்பு

**2)** எதிர்மறை உடன்தொடர்பு

**II.** பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளும் மாறிகளுக்கு இடையேயான உறவின் திசை அடிப்படையில்

**1)** எளிய உடன்தொடர்பு

**2)** பன்முக உடன்தொடர்பு

**3)** பகுதி உடன்தொடர்பு

**III.** பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளும் மாறிகளின் மாறும் விகித அடிப்படையில்

**1)** நேர்கோட்டு உடன்தொடர்பு

**2)** வளைகோட்டு உடன்தொடர்பு

www.Padasalai.Net

**31)**

**ஒட்டுறவுப் பகுப்பாய்வின் பயன்களைக் கூறுக.**

1. இருமாறிகளுக்கிடையே உள்ள உறவை விளக்க
2. இருமாறிகளுக்கிடையே உள்ள காரண விளைவை ஆராய்ந்து அவைகளுக்கிடையே சார்புத் தொடர்பை ஏற்படுத்த
3. தனித்த மாறியின் குறிப்பிட்ட மதிப்பிற்கு, சார்பு மாறியின் மதிப்பு எவ்வளவு என்பதை ஊகம் செய்ய
4. நேர்கோடு அல்லாத தொடர்புகளை ஆய்வு செய்ய

**32)**

**பொருளாதார அளவையியலின் நோக்கங்களைக் கூறுக.**

**பொருளாதார அளவையியலின் நோக்கங்கள்**

1. பொருளாதார நடவடிக்கைகளை முன்கணித்தல்மூலம் அறிந்து விளக்க
2. மாறிகளுக்கிடையே உள்ள கடந்தகாலத்திலுள்ள பழைய, நிறுவப்பட்ட உறவுகளை மீண்டும் நிரூபிக்க
3. புதிய கோட்பாடுகளையும், புதிய உறவுகளையும் நிறுவ
4. எடுகோள்களைச் சோதனை செய்ய, முழுத்தொகுப்பின் பண்புகளை மதிப்பீடு செய்ய உதவுகிறது

**33)**

**பொருளாதார மாதிரியிலிருந்து பொருளாதார அளவையியல் மாதிரியினை வேறுபடுத்துக**

| வ. எ ண் | பொருளாதார மாதிரி | பொருளாதார அளவையியல் மாதிரி |
|---|---|---|
| 1. | மாதிரிகள் பொருளாதாரக் கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது | கோட்பாடுகளின் நம்பகத்தன்மையை அறிய புள்ளிவிவரங்களின் அடிப்படையில் சோதனை செய்யப்படுகிறது |
| 2. | புள்ளியியலில் இருக்கும் ஒட்டுறவு மாதிரியில் பிழைக்கருத்து இல்லை | பிழைக்கருத்து உள்ளடக்கி இருக்கிறது |
| 3. | புள்ளியியலில் ஒட்டுறவு மாதிரி $Y\,i = \beta_0 \; {}_+\beta_1\, X_1$ | பொருளாதார அளவையியலில் ஒட்டுறவுப் போக்கு மாதிரி $Y\,i = \beta_0 \; {}_+\beta_1\, X_1 + U_1$ |

**34)**

**இந்தியாவில் புள்ளியியல் ஆதார அமைப்புகளின் முக்கியத்துவத்தை விவாதி.**

1. நாடு முழுவதும் நடைபெறும் புள்ளிவிவரச் சேமிப்புகளை ஒருங்கிணைத்து, அவற்றைப் பரிசோதித்துத் தர மேம்பாட்டினை உறுதி செய்கிறது
2. நாட்டுக்கணக்குகளை ஒருங்கிணைப்பது, தொழிற்துறை விசாரணைகளையும், பொருளாதார விசாரணைகளையும் நடத்துவது, நுகர்வோர் குறியீட்டெண்ணை அமைப்பது
3. சமுதாயப் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பது, பயிற்சி, பன்னாட்டு ஒத்துழைப்பை
   பேணுதல், தொழில் பிரிவுகளை நிர்ணயித்தல் ஆகிய பணிகளைச் செய்கிறது

www.Padasalai.Net

| ஐந்து மதிப்பெண் வினா -- விடை | |
|---|---|
| 35) | **புள்ளியியலின் இயல்புகளையும் எல்லைகளையும் விளக்குக.**<br>**புள்ளியியலின் இயல்புகள்**<br>1. புள்ளியியலில் அறிவியல், கலையியலின் தன்மை கலந்திருக்கின்றன<br>2. விளக்கங்களைப் பகுத்தாய்தல், கோட்பாடுகளை உருவாக்குதல், சோதனை செய்து துல்லியத்தன்மை அறிதல் ஆகியவற்றால் புள்ளியியல் ஓர் அறிவியலாகப் பார்க்கப்படுகிறது<br>3. விவரங்களைத் திரட்டுதல், அட்டவணையிடுதல், முடிவுகளைத் தீர்மானித்தல் ஆகியவற்றால் புள்ளியியல் ஒரு கலையியலாகப் பார்க்கப்படுகிறது<br>**புள்ளியியலின் எல்கைள்**<br>1. **பொருளியலில் புள்ளியியல்**<br>• உற்பத்தி, வருமானம், வேலைவாய்ப்பு, நுகர்வு, பகிர்வு, சேமிப்பு, செலவு ஆகியவை தொடர்பான எண்ணற்ற வினாக்களுக்கு விடைதேடும் ஆய்வுகளுக்குப் புள்ளிவிவரங்கள் இன்றியமையாதவை<br>• எடுகோள்களை உருவாக்குவது, விவரங்களைத் திரட்டுவது, பகுப்பாய்வு செய்வது, கொள்கைகளை வகுப்பது, வகைப்படுத்துவது, முடிவுகளை எடுப்பது எனப் புள்ளியியல் பொருளியலில் இரண்டறக் கலந்துள்ளது<br>2. **தொழிலில் புள்ளியியல்**<br>• குறிப்பிட்ட தரத்தில் பொருள்கள் இருக்கின்றனவா என்பதைச் சோதிக்க தரக்கட்டுப்பாட்டு நுட்பம் பயன்படுகிறது<br>3. **புள்ளியியலும் வாணிகமும்**<br>• நடப்புநிலைகளைப் புரிந்துகொள்ளவும், எதிர்காலப் போக்கினை உணர்ந்துகொள்ளவும் சந்தை ஆய்வுகள் முக்கியப்பங்காற்றுகின்றன.<br>• உற்பத்தியும் சந்தையிடலும் ஒருசேர நடப்பதில்லை. உற்பத்தியை முன்கூட்டியே திட்டமிடுவதற்குப் புள்ளியியலின் தேவை அவசியமாகும்<br>4. **புள்ளியியலும் கல்வியியலும்**<br>• ஆய்வுத்துறைகளும் மேம்பாட்டுத்துறைகளும் உள்ள கல்விநிலையங்களில் புள்ளிவிவரங்கள் பெரிதும் உதவுகின்றன<br>• புள்ளிவிவரங்களின்மூலமே பழைய அறிவினைச் சோதித்துப் பார்ப்பதும், புதிய அறிவினைப் பெறுவதும் சாத்தியமாகும்<br>5. **புள்ளியியலும் திட்டமிடலும்**<br>• இந்தியாவின் மைய, மாநில, உள்ளூர் அரசுகளும் அனைத்து துறைகளும் சிறப்பாக இயங்க திட்டமிடல் அடிப்படையிலேயே செயல்படுகின்றன.<br>• கொள்கை முடிவுகளை எடுப்பதிலும், அதை செயல்படுத்துவதிலும் புள்ளிவிவரங்கள் துணைசெய்கின்றன.<br>6. **புள்ளியியலும் மருத்துவமும்**<br>• உடல் சோதனைகள் அனைத்தும் புள்ளிவிவரங்களாகத் தொகுக்கப்பட்டு, அவ்விரங்களின் அடிப்படையிலேயே மருத்துவர் சிகிச்சை அளிக்கின்றனர்<br>• தொடர் மருத்துவக் கண்காணிப்பிலும், சிகிச்சைகளிலும் புள்ளிவிவரங்கள் பங்கும், பகுப்பாய்வுமுறைகளின் பங்கும் இன்றியமையாதவை<br>7. **புள்ளியியலும் புதிய பயன்பாடுகளும்**<br>• கணினி தொழில்நுட்பத்திலும், தகவல் தொழில்நுட்பத்திலும் ஏற்பட்டுவரும் மாற்றங்களை தன்னகத்தே ஏற்றுக்கொண்டுள்ளது புள்ளியியல் துறை<br>• நிறுவனங்களின் முடிவெடுத்தலில் புதிய மென்பொருள்களை உருவாக்கி துல்லியமான முடிவுகளை எடுக்க உதவுகிறது<br>**(ஏதேனும் ஐந்து எல்லைகள் மட்டும் )** |

www.Padasalai.Net

36

பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்சனின் உடன்தொடர்புக்கெழுவினைக் கண்டறிக

| தேவை (X) | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மதிப்பு (Y) | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

**தீர்வு :** ஊகச்சராசரியைப் பயன்படுத்தி உடன்தொடர்புக்கெழு கண்டறிதல்

| வ. எண் | X | Y | dx = $(X - A)$ A = 31 | dy = $(Y - B)$ B = 26 | $dx^2$ | $dy^2$ | dxdy |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 23 | 18 | 23 −31= − 8 | 18 −26 = − 8 | 64 | 64 | 64 |
| 2 | 27 | 22 | 27 −31= − 4 | 22 −26 = − 4 | 16 | 16 | 16 |
| 3 | 28 | 23 | 28 −31= − 3 | 23 −26 = − 3 | 9 | 9 | 9 |
| 4 | 29 | 24 | 29 −31= − 2 | 24 −26 = − 2 | 4 | 4 | 4 |
| 5 | 30 | 25 | 30 −31= − 1 | 25 −26 = − 1 | 1 | 1 | 1 |
| 6 | 31 | 26 | 31 −31= 0 | 26 −26 = 0 | 0 | 0 | 0 |
| 7 | 33 | 28 | 33 −31= 2 | 28 −26 = 2 | 4 | 4 | 4 |
| 8 | 35 | 29 | 35 −31= 4 | 29 −26 = 3 | 16 | 9 | 12 |
| 9 | 36 | 30 | 36 −31= 5 | 30 −26 = 4 | 25 | 16 | 20 |
| 10 | 39 | 32 | 39 −31= 8 | 32 −26 = 6 | 64 | 36 | 48 |
| N= 10 | ∑X= 311 | ∑Y= 257 | ∑ dx = 1 | ∑ dy = − 3 | $\sum dx^2$ = 203 | $\sum dy^2$ = 159 | ∑dxdy = 178 |

$N = 10$ $A = 31$ $\sum dx = 1$ $\sum dx^2 = 203$

$B = 26$ $\sum dY = -3$ $\sum dy^2 = 159$ $\sum dxdy = 178$

உடன்தொடர்புக்கெழு $\gamma = \dfrac{N\sum dxdy - (\sum dx)(\sum dy)}{\sqrt{N\sum dx^2 - (\sum dx)^2}\sqrt{N\sum dy^2 - (\sum dy)^2}}$

$$\gamma = \frac{(10 \times 178) - (1)(-3)}{\sqrt{(10 \times 203) - (1)^2}\sqrt{(10 \times 159) - (-3)^2}}$$

$$\gamma = \frac{1780 - (-3)}{\sqrt{2030 - 1}\sqrt{1590 - 9}} = \frac{1780 + 3}{\sqrt{2029}\sqrt{1581}}$$

$$= \frac{1783}{45.04 \times 39.76} = \frac{1783}{1790.79}$$

$\gamma = 0.9956$

www.Padasalai.Net

37

**பின்வரும் விவரங்களிலிருந்து Y மீது X, X மீது Y ஆகியவற்றினைக் கண்டறிக.**

| Y | 45 | 48 | 50 | 55 | 65 | 70 | 75 | 72 | 80 | 85 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| X | 25 | 30 | 35 | 30 | 40 | 50 | 45 | 55 | 60 | 65 |

தீர்வு : ஊகச்சராசரியைப் பயன்படுத்தி உடன்தொடர்புக்கெழு கண்டறிதல்

| வ. எண் | X | Y | dx = $(X - A)$ A = 45 | dy = $(Y - B)$ B = 65 | $dx^2$ | $dy^2$ | dxdy |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 25 | 45 | $25 - 45 = -20$ | $45 - 65 = -20$ | 400 | 400 | 400 |
| 2 | 30 | 48 | $30 - 45 = -15$ | $48 - 65 = -17$ | 225 | 289 | 255 |
| 3 | 35 | 50 | $35 - 45 = -10$ | $50 - 65 = -15$ | 100 | 225 | 150 |
| 4 | 30 | 55 | $30 - 45 = -15$ | $55 - 65 = -10$ | 225 | 100 | 150 |
| 5 | 40 | 65 | $40 - 45 = -05$ | $65 - 65 = 00$ | 025 | 000 | 000 |
| 6 | 50 | 70 | $50 - 45 = 05$ | $70 - 65 = 05$ | 025 | 025 | 025 |
| 7 | 45 | 75 | $45 - 45 = 00$ | $75 - 65 = 10$ | 000 | 100 | 000 |
| 8 | 55 | 72 | $55 - 45 = 10$ | $72 - 65 = 07$ | 100 | 049 | 070 |
| 9 | 60 | 80 | $60 - 45 = 15$ | $80 - 65 = 15$ | 225 | 225 | 225 |
| 10 | 65 | 85 | $65 - 45 = 20$ | $85 - 65 = 20$ | 400 | 400 | 400 |
| N= 10 | $\sum X =$ 435 | $\sum Y =$ 645 | $\sum dx = -15$ | $\sum dy = -5$ | $\sum dx^2$ = 1725 | $\sum dy^2 =$ 1813 | $\sum dxdy =$ 1675 |

$$\text{கூட்டுச்சராசரி } \overline{X} = \frac{\sum X}{N} = \frac{435}{10} = 43.5$$

$$\text{கூட்டுச்சராசரி } \bar{Y} = \frac{\sum Y}{N} = \frac{645}{10} = 64.5$$

$N = 10$ $A = 45$ $\sum dx = -15$ $\sum dx^2 = 1725$

$B = 65$ $\sum dY = -5$ $\sum dy^2 = 1813$ $\sum dxdy = 1675$

$$\text{உடன்தொடர்புக்கெழு } \gamma = \frac{N\sum dxdy - (\sum dx)(\sum dy)}{\sqrt{N\sum dx^2 - (\sum dx)^2}\sqrt{N\sum dy^2 - (\sum dy)^2}}$$

$$\gamma = \frac{(10 \times 1675) - (-15)(-5)}{\sqrt{(10 \times 1725) - (-15)^2}\sqrt{(10 \times 1813) - (-5)^2}}$$

$$\gamma = \frac{16750 - (75)}{\sqrt{17250 - 225}\sqrt{18130 - 25}} = \frac{16675}{\sqrt{17025}\sqrt{18105}}$$

$$\gamma = \frac{16675}{130.5 \times 134.6} = \frac{16675}{17565}$$

$$\boxed{\gamma = 0.95}$$

www.Padasalai.Net

**37**

திட்ட விலக்கம் $\sigma x = \sqrt{\frac{\sum dx^2}{n} - \left(\frac{\sum dx}{n}\right)^2}$

$$\sigma x = \sqrt{\frac{1725}{10} - \left(\frac{-15}{10}\right)^2} = \sqrt{\frac{1725}{10} - \frac{225}{100}}$$

$$\sigma x = \sqrt{172.5 - 2.25} = \sqrt{170.25} = 13.05$$

திட்ட விலக்கம் $\sigma y = \sqrt{\frac{\sum dy^2}{n} - \left(\frac{\sum dy}{n}\right)^2}$

$$\sigma x = \sqrt{\frac{1813}{10} - \left(\frac{-5}{10}\right)^2} = \sqrt{\frac{1813}{10} - \frac{25}{100}}$$

$$\sigma x = \sqrt{181.3 - 0.25} = \sqrt{181.5} = 13.5$$

| X இன் மதிப்பு Y ஐச் சார்ந்த ஒட்டுறவுக்கோட்டின் சமன்பாடு | Y இன் மதிப்பு X ஐச் சார்ந்த ஒட்டுறவுக்கோட்டின் சமன்பாடு |
|---|---|
| $(X - \bar{x}) = \gamma \times \frac{\sigma x}{\sigma y} \times (Y - \bar{y})$ | $(Y - \bar{y}) = \gamma \times \frac{\sigma y}{\sigma x} \times (X - \bar{x})$ |
| $(X - 43.5) = 0.95 \times \frac{13.05}{13.5} \times (Y - 64.5)$ | $(Y - 64.5) = 0.95 \times \frac{13.5}{13.05} \times (X - 43.5)$ |
| $(X - 43.5) = 0.95 \times 0.97 \times (Y - 64.5)$ | $(Y - 64.5) = 0.95 \times 1.03 \times (X - 43.5)$ |
| $(X - 43.5) = 0.9215 \times (Y - 64.5)$ | $(Y - 64.5) = 0.9785 \times (X - 43.5)$ |
| $(X - 43.5) = 0.9215\ Y - 59.44$ | $(Y - 64.5) = 0.9785\ X - 42.56$ |
| $X = 0.9215\ Y - 59.44 + 43.5$ | $Y = 0.9785\ X - 42.56 + 64.5$ |
| $\boldsymbol{X = 0.9215\ Y - 15.94}$ | $\boldsymbol{Y = 0.9785\ X + 21.94}$ |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 38 | **பொருளியலில் பொருளாதார அளவையியலின் பயன்பாடுகளை விளக்குக.**<br>**பேரினப் பொருளாதாரக் குறிகாட்டிகளை முன்னறிவித்தல்**<br>* பொருளாதாரத்தின் ஒட்டுமொத்தச் செயல்திறனில் பணவியல் மற்றும் நிதிக்கொள்கையின் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் குறித்து பேரினப் பொருளாதாரம் அக்கறை கொண்டுள்ளன.<br>* நேரத்தொடர் மாதிரிகளைப் பயன்படுத்திப் பொருளாதாரக் குறிகாட்டிகளைக் கணிக்க உதவுகிறது<br>**பொருளாதார அளவையியலும், தொடர்புடைய பாடங்களும்**<br>* கணிதப் பொருளாதாரத்தால் கட்டமைக்கப்பட்ட மாதிரிகளுக்கு அனுபவ ஆதரவை வழங்குவதற்கும், எண்ணியல் முடிவுகளைப் பெறுவதற்கும், பொருளாதாரத் தரவுகளுக்குக் கணிதப் புள்ளிவிவரங்களைப் பயன்படுத்துவதற்கும் பொருளாதார அளவீடுகள் பயன்படுகின்றன.<br>* பொருளாதார அளவீடு என்பது பொருளாதார அளவுகளாகும்.<br>* பொருளாதார உறவுகளின் அளவீடுகளைப் பொருளாதார அளவையியல் கையாள்கிறது.<br>**பொருளாதார அளவையியலின் நோக்கங்கள்**<br>* பொருளாதார நடவடிக்கைகளை முன்கணித்தல்மூலமாக அறிந்து விளக்க<br>* மாறிகளுக்கு இடையேயுள்ள பழைய, நிறுவப்பட்ட உறவுகளை நிரூபிக்க<br>* புதிய கோட்பாடுகளையும், புதிய உறவுகளையும் நிறுவ<br>* எடுகோள்களைச் சோதனை செய்ய, முழுத்தொகுப்பின் பண்புகளை மதிப்பீடு செய்ய உதவுகின்றது. |

www.Padasalai.Net